
Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
ஜூன் 20 - 26, 2013

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1019




# சட்டம் பிரிக்கலாம் உறவுகள் பிரியாது!

வடக்கு - கிழக்கு இணைந்த
மாகாண அதிகாரமும் இல்லாமல்
தமிழீழமும் பெற்றுக் கொடுக்க
முடியாமல் போனால்
உங்கள் மக்களுக்கு
என்ன பதில் கூறுவீர்கள்

ஹர்திப் பூரி -1987



# ஜனாதிபதியின் வடக்கு விஜயம்



# கபடமும் வஞ்சகமும்



# உலக அகதிகள் தினம்

## வெற்றிலையின் மகிமை

தமிழ்மக்களின் குறிப்பாக இந்து மதத்தவர்களின் வீடுகளில் வெற்றிலைக்குத் தனியான ஒரு அந்தஸ்து கௌரவம் கொடுக்கப்படுகிறது. ஏனெனில் இவ் வெற்றிலையானது இந்து மக்களின் வாழ்வாதாரத்தோடும் அவர்களின் சமய ஆசார அனுட்டானங்களோடும் இரண்டறக் கலந்திருப்பதே காரணமாக அமைகின்றது.

இந்து சமய தெய்வங்களுக்கு நைவேத்தியமாகப் படைக்கப் படுகின்ற பொருட்களில் வெற்றிலையும் அடங்குவதையும் அவதானிக்கலாம். வெற்றிலை இல்லாத கோவில் திருவிழாக்கள், சமய கிரியைகள் என்பனவற்றை நாம் காணமுடியாது.

இவ்வெற்றிலையின் நுனிப்பகுதியில் சரஸ்வதியும், நடுப் பகத்தில் லட்சுமியும், காம்புப் பகுதியில் மூதேவியும் வசிப்பதால் சுபகாரியங்களுக்கு இதைப் பயன்படுத்த முன்பு காம்பு நீக்கி பயன்படுத்துகிறார்கள். விசேட தினங்களில் குறிப்பாக சித்திரை வருட தினத்தில் கைவிஷேசம் வழங்கப்படும்போது, வெற்றிலையில் உரிய பொருட்கள் வைத்து வழங்கப்படுவதானது, வெற்றிலை வெற்றியையும், மங்கலத்தையும் தரவல்லது என்பதினால் அவ்வாறு செய்யப்படுகிறது.

அனந்த நாராயணன், கைவேலி.

## நல்லுரைகளை ஏற்போம்

"கெடுகுடி சொல்கேளாது..." என்று எம் முன்னோர்கள் கூறுவர்கள். வாழ்க்கையின் பின்பகுதிக் காலத்திற்கு ஒருவர் கெட்டு சீரழிவதான நிலை ஏற்படுவதற்கு அவர் ஆரம்ப வாழ்க்கையில் அறிவாளிகளின் நல்லுரைகளைக் கேட்டு, அதன்படி நடக்கத் தவறியதே ஆகும்.

ஆனால் நல்ல அறிவுரை கேட்டு, அந்த அறிவுரைகளை கூறுபவர்களை மதித்து நடந்து, அவர்களின் வழி ஒழுகுவோர் தெய்வ பயத்தோடும் மெய்யான வாழ்வுக்கான பாதையிலும் நடந்து நித்திய சுகத்தை அடைகின்றனர்.

நல்ல எண்ணங்களை நினைக்கின்ற மனமானது நல்லுரைகளை ஏற்று அதன்படி நடக்கும். தீய செயல்களுக்கான சிந்தனைகளை இதயத்தில் தேக்கிய வண்ணம் தவறான வழி நடத்தல்களூடாகப் பயணிப்பவர்கள் மரணத்துக்கேதுவான சூழ்நிலைகளுக்குள் அமிழ்ந்து நரகத்துக்குப் போவார்கள் எனக் கூறப்படுகிறது.

"நல்லுரைகளை ஏற்போர் மெய் வாழ்வுக்கான பாதையில் நடப்பர். (நீதிமொழிகள் 10:17)"

சாமுவேல், புதுக்குடியிருப்பு.

## இறைமறை சொல்வது என்ன?

இஸ்லாம் மதம் அன்பு , அடக்கம், பண்பு, பணிவு, கலை, கலாச் சாரம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. 'நான்' என்ற அகங்காரம் நமக்கு வரும் போது இவைகள் எமக்கு நல்வழிகாட்டும்.

இறைமறை என்ன கூறுகிறது?

ஒரு சமுதாயம் நல்லறிவாலும், நற்செய்கையாலும் தன்னை மாற்றிக் கொள்ளாதவரை அல்லாஹ்வும் அவர்களை நல்ல ருளால் மாற்றிவிடுவதில்லை.

அல்குர் ஆன்13:11

நல்லறிவு பெற்ற மனிதன் நல்லவனாக வாழ்வான். இதற்கு சமயக் கல்வி பேருதவி புரியும். மனித வாழ்க்கைக்கு என்றும் அடைப்படையாக இருக்க வேண்டிய ஆன்மீக நெறிகளை இது எமக்கு ஊட்டுவதோடு அல்லாஹ்வால் ஏவப்பட்டதையும் விலக்கப்பட்டதையும் நமக்கு பகுத்துக் காண்பிக்கிறது.

இத்தகைய அருளுரைகளால் அறிவுத் தேட்டத்தின் அவசியத்தை இவ்வகையக மக்களுக்கு வலியுறுத்தும் மதம் இஸ்லாம்.

எம்.சீ.கலீல்,
கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1016



### பாராட்டுக்குரியது

### பொன்னா? போலியா?

பெரும் பணக்காரன்
மகளாக்கும் - இம்
மணப் பொண்ணு!
இவை யெல்லாம்
இரும்பாலான
நகைகளாக
இருந்தால் - இராது
இவள் இதழில் சிரிப்பு!
ஏழை மணப்பெண்
தங்கத்தில் ஒரு
சங்கிலி அணிந்தாலும்...
"இது பொன்னா?
போலியா?" என் கேட்டுக்
கேலி செய்வார்!

பாண்டியூர்
பொன்.நவநீதன்.




## கவிதைப் போட்டி இல 1019



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26. 06. 2013

கவிதைப் போட்டி இல. 1019 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### வானுலகத் தேவதையோ?

உச்சிமுதல் பாதம் வரை
உடலெங்கும் நகைசூடி.
இச்சையினை உண்டாக்கும்
இளநகையால் இதயத்தை
கச்சிதமாய் ஈர்க்கும் இவள்,
"வானுலகத் தேவதையோ?"

தாமரைதாசன், கண்ணியா.



### அழகோ அழகு!

பெண்ணின் பொன்னகைக்கு
இல்லா அழகு புன்னகைக்கு
உண்டென்பர்...

அ.சந்தியாகோ, கண்டி.

### தங்க மங்கை

ஐந்து கிலோ தங்கமணிந்து
மங்கை இவள் வருவதை
தந்தை பார்க்கவா...
இல்லை...
விளம்பரம் தேடவா?

அலாவுதீன் A.L.A.பாபு,
திருகோணமலை.

### பெண்ணின் குணாம்சங்கள்

அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
என்னும் பெண்ணின் நான்கு
குணாம்சங்கள் திருமண
உறவில் கை கோர்க்க
தன்னை அழகாய் அலங்கரித்து
நிற்கும் இந்த மணப்பெண்ணிடம்
பட்டொளி வீசுகின்றது.

சு.ஜெயரூபன், பருத்தித்துறை.



### விளம்பரப் பொருளா?

நாணத்துடன் தலை
குனிந்து நிற்கும்
இந்தப் பெண் என்ன
வியாபாரப்
பெரும் தலைகளின்
விளம்பரப் பொருளா?

சுப்பிரமணியம்,
பருத்தித்துறை.

### சீதனம் எதற்கு?

உன் புன்னகை
உன் அமைதி
உன் அழகு
என் பொறுமை போதும்
நீ... என் காதலி

எஸ்.பி.பாலமுருகன்.

## உங்கள் பக்கம்

### தீருமா மொழிப் பிரச்சினை?

மலையக மக்கள் அதிகமாக வாழ்கின்ற மத்திய மாகாணத்திலேயே வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அடுத்தபடியாக ஒப்பிட்டளவில் அதிகளவிலான தமிழ் மாணவர்கள் தமிழ் மொழி மூலம் கல்வி கற்று வருகின்றார்கள். எனவே அதிகளவிலான தமிழ்மெழி மூல ஆசிரியர்களும் குறித்த பிரதேசத்தில் கடமையாற்றி வருகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டு மத்திய மாகாணசபையில் தமிழ் கல்வி அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டு தமிழ் அமைச்சர் ஒருவரால் செயற்படுத்தப்பட்டும் வருகின்றது. இதன் மூலம் மலையக மாணவர்களும் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளும் பல்வேறு நன்மைகளைப் பெற்று வருகின்றன.

ஆனால், மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள கல்வி வலயங்களில் தமிழ்மொழி மூலமாக சேவையாற்றக் கூடிய அதிகாரிகள் போதியளவில் காணப்படுகின்றமை பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

குறித்த கல்வி வலயங்களுக்குத் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டுச் செல்கின்ற தமிழ்மொழி மூல மாணவர்களும், ஆசிரியர்களும் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு குறித்த கல்வி வலயங்களுக்கு தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு உரியவர்களிடம் தினமுரசின் ஊடாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

எஸ்.ராகவன், கண்டி.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


## வாசகர் சாலை



அன்பான முரசுக்கு வணக்கம்!
வண்ணத் தலைப்பிட்டு
வாரம் தோறும் நீ சுமந்து வரும்
எல்லையில்லா விடயங்களை அள்ளிப்
பருகுகின்ற இலட்சோப இலட்ச
வாசகர்களில் நானும் ஒருவன்.
கடந்த காலங்களில் நீ தந்த
அரசியல் கட்டுரைகளால் படித்து
அரசியல் கற்றவன் நான். இப்பொழுது
13 ஆம் திருத்தத்திற்கு ஆதரவாய்
வெளிக்கொணரும் கருத்துக்கள்
தினமுரசு இன்னும் மூர்க்கத்தை
இழக்க வில்லை என்ற செய்தியைத்
தருகிறது.

ஆர். திவாகர், யாழ்ப்பாணம்.

### கற்கும் கல்விக் கூடம்

வணக்கம்.

தினமுரசு அதன் 1016 ஆவது இதழில் பொன்னான ஒப்பந்தம் போட்டுடைந்த தமிழர்கள் என்ற தலைப்பில் மறைந்த அதியுயர் அரசியல் வாதிகளின் புகைப்படங்களை பிரசுரித்து அதன் உள்ளடக்கத்தில் இந்திய இலங்கை ஒப்பந்தம் என்றால் என்ன வென்று தெரியாதவர்களுக்கு இது பற்றி விரிவாக விளக்கியது முரசு.

தொடர்ச்சியாக முரசைப் படிப்பவர்களுக்கு அரசியல் செய்திகள் மட்டுமல்ல. யார், யார் என்ன என்ன முரசின் முன்னேற்றத்திற்கு தேவையென விரும்புகிறார்களோ அவையெல்லாம் வாசகர்களுக்கு வழங்கப்பட்டு வருவதை வாரம் தோறும் முரசில் காணலாம். மொத்தத்தில் முரசு ஒரு கல்விக் கூடம்.

எம்.சீ.கலீல், கல்முனை-05

### தொடர்கின்றோம் உன் வழி...

அன்பின் முரசே! 1993 ஆம் ஆண்டு மழலையாய் நீ உதிர்த்தபோது உனக்கு வயது 13. அன்று முதல் இன்றுவரை உன் பயணத்தில் பங்காளியாய் நானும் இருந்து வருகின்றேன். உனது துன்பங்கள், அவலங்கள் அனைத்தையும் கண்டு உறைந்து போனதுமுண்டு, விம்மியழுததும் உண்டு, அவற்றைத் தாண்டி தொடர்ந்தும் முன்னேறும் உன் வைராக்கியம் எமக்கெல்லாம் புத்துயிர் அளிக்கிறது.

தொடரட்டும் உன் பணி
தொடருவோம் உன் வழி.

கே.அன்ஸ்ரன், மன்னார்.

## 13 ஆவது திருத்தம்

# பாதுகாக்கும் குரல்கள் வலுக்கின்றன

இலங்கை அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான விடயத்தில், அதனைத் தொடர்ந்தும் பாதுகாத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவு அதிகரித்துவருவதாக அரசியல் விமர்சகர்கள் கருத்துரைத்துள்ளனர்.

சிறுபான்மை மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்து உள்நாட்டு பிரச்சினைக்கு தீர்வைக் காணும் பொருட்டு 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பலனாக உருவாக்கப்பட்ட 13 ஆவது அரசியல் திருத்தம் தற்போதைய சூழலில் தேவையற்றது என்ற கருத்தை முன்வைத்த சில பேரினவாத கட்சிகள் அதனை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தன. அது அமைச்சரவை மட்டத்துக்கு சென்றுள்ள நிலையில் 13 ஆவது திருத்தம் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ரவூக் ஹக்கீம், ராஜித சேனா ரட்ண, டீ.யு குணசேகர, திஸ்ஸ விதாரண போன்றவர்கள் உறுதியாக இருந்து வருகின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் பங்குபற்றிய 50க்கும் மேற்பட்ட ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக கையொப்பம் இட்டிருந்தனர்.

அதேபோன்று இலங்கை விவகாரத்தில் அக்கறை காட்டிவருகின்ற சர்வதேச சக்திகளும் 13ஆவது திருத்தச் சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறை காட்டிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### நிர்வாணமாக நீராடிய நங்கையர் கைது

போதையில், நிர்வாணமாக குளித்துக்கொண்டிருந்த பெண்கள் இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆண்கள் மூவருடன் மேலாடை மட்டுமே அணிந்து கொண்டு அரைநிர்வாணத்துடன் குளித்துக் கொண்டிருக்கையிலேயே கம்பஹா, கெடவல வெல்ல ஆற்றில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக கம்பஹா பிரிவு குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் 18 வயதான பெண்கள் இருவரும் கைது செய்யப்படும் போது போதையில் இருந்ததாகவும் மேலாடை மட்டுமே உடுத்தியிருந்ததாகவும் தெரிவித்த பொலிஸார், ரயில் தண்டவாளத்திற்கு அருகில் பிரசித்தமான இடத்தில் இவ்வாறு இருக்க முடியாது என்பதனால் அவர்களை கைது செய்ததாகவும் தெரிவித்தனர்.

### பேருந்து கட்டணம் அதிகரிப்பு?

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து 6.2 சதவீதத்தினால் பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு திட்டமிட்டு வருகின்றது. ஆனால், ஆகவும் குறைந்த 9 ரூபா கட்டணத்தில் எந்தவித மாற்றமும் மேற்கொள்ளப்படாதிருப்பதற்கு வாய்ப்புள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் றொஷான் குணவர்தன தலைமையில் அனைத்து பிராந்திய பஸ் கம்பனிகள் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது இந்தக் கட்டண அதிகரிப்பு போதுமானதாக இல்லை எனவும் கூடியளவு கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் சில பஸ் உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரத்நாயக்கவிடம் இக் கலந்துரையாடல் தொடர்பான அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளதாகவும், பஸ் கட்டண மீளாய்வுக் கட்டமைப்பில் கைக்கொள்ளப்படும் நியமங்களுக்கு பஸ் உரிமையாளர்கள் திருத்தங்களை முன்மொழிந்ததாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் கூறியுள்ளார்.

### பொதுநலவாய மாநாட்டிற்கு உத்தியோகபூர்வ இணையத்தளம்

ஹம்பாந்தோட்டையில் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கின்ற பொதுநலவாய உச்சி மாநாட்டிற்கான உத்தியோகபூர்வ இணையத்தளம் திறந்து வைக்கப்பட்டது.

வெளிவிவகார அமைச்சில் வைத்தே www.chogm2013.lk எனும் இந்த இணையத்தளம் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த வைபவத்தில் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் கலந்து கொண்டார்.

இந்த மாட்டில் உலகளாவிய ரீதியிலிருந்து 53 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவிருக்கின்றனர். ஆசியாவில் இந்த மாநாட்டை நடத்துவதற்காக 24 வருடங்களுக்கு பின்னர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

### மலையகத்தில் தொடர்கிறது மழை

மலையகத்திற்கு தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழியும் மட்டத்தை அடைந்துள்ளன. இதனால் பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் அவ்வப்போது திறக்கப்படுகின்றன. இநிலையில் மகாவலி கங்கையில் அமைந்துள்ள கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் இன்று காலை முதல் திறந்துவிடப்பட்டுள்ளன. இதனால் நாவலப்பிட்டி ரிவசைட் வீதி முற்றாக நீரில் மூழ்கியுள்ளது. இதனால் மாற்றுப் பாதையைப் பயன்படுத்தும்படி இப்பகுதி மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த கொத்மலை நீர்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் நாவலப்பிட்டி, கம்பளை, கெலிஓயா, பேராதனை, பொல்கொல்லை பகுதியில் மகாவலி ஆற்றை அண்டி வாழ்பவர்களும் அதனை பயன்படுத்துபவர்களும் மிக அவதானமாக செயற்படும்படி அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வேண்டுக்கோள் விடுத்துள்ளது.



**தலைவருக்கும், மக்களுக்கும் இடையிலான இடைவெளி கள் எந்தளவிற்கு குறைக்கப்படுகிறதோ அந்தளவிற்கு இருதரப்பினருக்கும் இடையிலான உறவும் ஆரோக்கியமாக இருக்கும். இங்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட விரும்பத்தகாத சம்பவங்களினால் ஜனாதிபதி பற்றி எதிர்மறையான கற்பனைகளை வளர்த்து வைத்திருக்கின்ற வன்னி மக்களை நெருங்கி ஜனாதிபதி வருவதன்மூலம் அவர்கள் மனங்களில் மாற்றத்தையும், ஒருவித நம்பிக்கையையும் ஏற்படும் சூழல் உருவாக்கப்படுகின்றது**

# ஜனாதிபதியின் வடக்கு விஜயம்

**கடந்த** வாரம் கிளிநொச்சிப் பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டதுடன் கிளிநொச்சி வாழ். மக்களை சந்தித்து கலந்துரையாடி சென்றிருக்கின்றார்.

சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 19125 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட 153 மீற்றர் நீளமான A9 நெடுஞ்சாலையை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து பொதுமக்கள் பாவனைக்காக கையளிப்பதற்காக கிளிநெச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி இரணைமடுவில் விமானப் படையினரால் புனரமைக்கப்பட்ட புலிகள் பாவித்த ஓடுபாதையையும் திறந்து வைத்திருந்திருந்தார். அத்துடன் கேப்பாப்புலவு பகுதிக்கு புதிதாக அமைக்கப்பட்ட ஒரு தொகுதி வீடுகளை பொதுமக்களிடம் கையளித்ததுடன் அங்கு மின்சார வேலைகளையும் ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

ஜனாதிபதியின் வன்னிப் பகுதிக்கான ஒருநாள் விஜயத்தின்போது, அவ் வன்னி மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும்வகையில் பல்வேறு கருத்துக்களையும் வெளியிட்டிருக்கிறார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற புனரமைப்பு பணிகளில் கூடிய கவனத்தைச் செலுத்தி அவற்றை மக்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வுகளில் நேரடியாகவே ஜனாதிபதி கலந்துகொள்வது என்பது பாராட்டப்பட வேண்டியதே. ஒரு நாட்டின் தலைவர் ஒருவரின் தலைமைத்துவத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும். தலைவருக்கும், மக்களுக்கும் இடையிலான இடைவெளிகள் எந்தளவிற்கு குறைக்கப்படுகிறதோ அந்தளவிற்கு இருதரப்பினருக்கும் இடையிலான உறவும் ஆரோக்கியமாக இருக்கும். இங்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட விரும்பத்தகாத சம்பவங்களினால் ஜனாதிபதி பற்றி எதிர் மறையான கற்பனைகளை வளர்த்து வைத்திருக்கின்ற வன்னி மக்களை நெருங்கி ஜனாதிபதி வருவதன்மூலம் அவர்கள் மனங்களில் மாற்றத்தையும், ஒருவித நம்பிக்கையையும் ஏற்படும் சூழல் உருவாக்கப்படுகின்றது. அதேபோன்று ஜனாதிபதிக்கும், குறித்த பகுதி மக்களின் மனோநிலையையும், அவர்கள் சந்தித்து வருகின்ற அவலங்களையும் நேரடியாகக் கண்டு புரிந்துகொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.

இது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களை மீளக்கட்டியெழுப்பிக் கொள்வதற்கு ஏற்ற வாய்ப்புக்களை அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்விடத்தில் நாம் இன்னொன்றையும் கருத்தில் எடுக்கவேண்டும். நடைபெற்று முடிந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு கட்டியெழுப்பப்படுகின்ற அதே வேளை, குறித்த யுத்தம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்த காரணங்களை இல்லாது செய்வதும், நாட்டின் தலைவருக்கு இருக்கக் கூடிய முக்கிய கடமையாகவே பார்க்கப்படுகின்றது. இந்த நாட்டிலே இரத்த ஆறு ஓடக் காரணமாக இருந்த காரணங்கள் களையப் படாமல் வெறுமனே அபிவிருத்தி, மீள்கட்டுமானம் என்று வெளிநாட்டு உதவிகளுடான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதானது நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளிக்கு நீரிழிவு நோய்க்கான சிகிச்சை பற்றிச் சிந்திக்காமல் குறித்த நோயாளிக்கு மருந்திடுவதைப் போன்றே அமையும்.

எனவே கடந்த முப்பது வருடமாக யுத்த சூழலில் மக்கள்பட்ட துன்பங்களுக்கு நிவாரணமளித்து அவர்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்திற்கு வழிவகுக்க திடசங்கற்பம் பூண்ட ஜனாதிபதி அவர்கள், அந்த மக்களுக்கு துன்பத்தை அளித்த காரணங்களை இல்லாமல் செய்ய திடசங்கற்பம் பூணவேண்டும். அதற்கெதிராக வெளிக்கிளம்புகின்ற குரல்களையெல்லாம் கிள்ளியெறியவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## பூச்சுற்று!!

" முதற்கோணல் முற்றும் கோணல்" என்பார்கள். அதுபோலவே அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தலைமையில் கடந்த வாரம் கூடிய இலங்கை தமிழர் கட்சிகளின் கூட்டம் நடந்து முடிந்துள்ளது.

"இலங்கை தமிழ் தலைவர்கள் மாநாடு 2013" தலைப்பிட்டு இம்மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் புதுடில்லியில் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இந்திய மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் ஏற்பாடுகளைச் செய்து தலைமையும் தாங்கினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர். எல். எப் (நாபா), ஈழ தேசிய ஜனநாயக முன்னணி ஆகியவற்றுடன், சில புலம் பெயர்ந்த புலி ஆதரவு அமைப்புக்களும் கலந்து கொண்டன.

கூட்டமைப்புக்குள் ஆனந்த சங்கரி இணைந்திருப்பதாக கூறிக்கொண்டாலும், இன்னும் கூட்டமைப்பு சங்கரியை மனப்பூர்வமாக உள்ளீர்க்கவில்லை என்பதை, இக்கூட்டத்தில் தனியாக கலந்துகொண்டுள்ள சம்பவம் தெளிவு படுத்துகின்றது. இதுதவிர தமிழ் மக்களின் அரசியல் தளத்தில் கருத்து வேறுபாடுள்ள கட்சிகள் இருக்கவேண்டும் அல்லது இருக்கின்றன என்ற ஜனநாயக கத் தன்மையை முழுமையாக மறுப்ப தாகவே நாச்சியப்பனின் கூட்டம் அமைந்திருந்தது.

பெரும் ஜனநாயக நாட்டின் அமைச்சர் ஒருவர் பல் கட்சி ஜனநாயகம் இலங்கை தமிழர்களிடம் இருக்கக்கூடாது என்று சிந்திப்பது கண்டனத்துக்குரியதாகும். ஏன் என்றால் ஈ.பி.டி.பி. த.ம.வி.பு. த.தே.ம.மு. போன்ற கட்சிகள் இலங்கையில் தமிழர் பிரச்சினையோடும், அரசியலோடும் நேரடியான சம்மந்தத்தில் இருக்கின்றன. தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் பேசப் படுகின்ற எந்தவொரு விவாதத்திலும் சம்மந்தப்பட்ட அனைத்துக் கட்சிகளும் இருப்பது நல்லது. கடந்த காலத்திலும் இது மாதிரியான வெட்டுக்கொத்துக்கள் நடைபெற்றதே தோல்விகளுக்கு இலங்கை தமிழர்களை இழுத்துச்சென்றன.

இவ்வாறான முழுமையற்ற முயற்சி என்பதாலேயே முன்னர் நடந்த இதே கூட்டமும் இலங்கையிலிருந்து சென்ற கட்சிகளுக்குள்ளே ஒற்றுமை ஏற்படாமையினால் அக்கூட்டம் படுதோல்வியில் முடிவுக்கு வந்தது. போனவாரம் நடைபெற்ற கூட்டமும் வெறும் தீர்மானங்களை எடுப்பதோடு கலைந்துவிட்டார்கள்.

இப்படி கூடிக்கலையும் பல மகா நாடுகளையும், கூட்டங்களையும் இலங்கை தமிழர்கள் தேவைக்கு அதிகமாகவே பார்த்துவிட்டார்கள். அவற்றாலான பயன் ஏதுமில்லை. அவற்றில் ஒன்றாகவே சுதர்சன நாச்சியப்பனின் முயற்சியும் இருக்கின்றது. அடிப்படை ஒழுங்கற்ற எதுவுமே அர்த்தமற்றமவைதான்.

சுதர்சன நாச்சியப்பன் தற்போதைய இந்திய மத்திய அரசின் அமைச்சர் என்பதற்காக இக்கூட்டங்கள் காங்கிரஸ் அரசின் நிகழ்ச்சி நிரலாகிவிடாது. அவர் அழைத்ததும் இந்திய மத்திய அரசு தம்மை அழைத்திருப்பதாக கூட்டமைப்பு ஆரவாரித்துக் கொண்டுபோன வேகத்தில் சுவரில் வீசிய பந்தைப்போல் மீண்டும் இலங்கை திரும்பியிருக்கின்றது.

இப்படி எத்தனை தடவை மூக்கு உடைபட்டாலும் சளைக்காமல் தமிழ் மக்களிடம் பொய் கூறும் தமது சாணக்கியத்தை கூட்டமைப்பு விட்டபாடில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு என்ன நடக்கின்றது?, என்ன நடக்கப்போகின்றது? என்பதையும் இந்தியா அறிந்து கொண்டுதான் தனது இயலாமை எண்ணி அழுது கொண் டிருக்கின்றது. இந்த நிலையில் அதைப்பற்றி இந்தியாவுக்கு தெளிவுபடுத்த தாம் இந்தியாவுக்கு போவதாக தமிழ் மக்களிடம் கூட்டமைப்பு கூறியதானது அவர்கள் தமிழ் மக்களின் காதுகளில் பூச்சுற்றுகின்றார்கள் என்பதே அல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

---

### வீதிக்கு வந்து போராட்டம் நடத்தக் கூடிய

# ஆன்மீக செயற்பாடுகள் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும்!

எந்த மதமும் தற்காலத்தில் அதனைப் பின்பற்றிக் கொண்டிருக்கும் அந்த சமூகத்தாருக்கு மாத்திரம் சொந்தமானது என்று எவரும் உரிமை கோர முடியாது.

நல்வழிப்படுத்தி லௌகீக – ஆன்மீக வழி முறைகளில் நம்மை நெறிப்படுத்தும் எந்த மதமாயினும் அது உலக மாந்தர் அனைவருக்கும் சொந்தமானதுதான்.

அமைதியைப் போதிக்கும் மதத்தையும் துறவறத்தையும் கடைப்பிடித்தொழுகு கின்றோம் என்று கூறும் துறவிகள் வீதிக்கு வந்து மற்றவர்களை வீண் வம்புக்கிழுப்பதைத் தவிர்த்துக் கொள்ளுதல் ஊருக்கும் உலகத்துக்கும் நல்லது

மேற்கத்தையர்களைப் போல் ஆஸ்தீகம், நாஸ்தீகம் (மத நம்பிக்கைகள் - மத நம்பிக்கையற்ற தன்மை) என்று இரண்டுமே கலந்த ஒரு நிலைமை நமது நாட்டில் இல்லை.

நமது நாட்டிலுள்ள எந்த சமூகத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் ஏதோவொரு ஆன்மீக நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டிருப்பர்.

இந்த ஆன்மீக நம்பிக்கைகள் அவரவர் கொண்டுள்ள மத நம்பிக்கைகள், கோட்பாடுகளுக்கு ஏற்ப வணங்கி வழிபட்டு வாழ வழிசெய்கின்றன.

தேசிய நலன்களுக்குக் குந்தகத்தை ஏற்படுத்தி மக்களின் சமூக சக வாழ்வைச் சீரழித்துக் கொண்டிருந்த ஆயுத வன்முறைப் பயங்கர வாதத்தை நாமெல்லோரும் பொது எதிரியாகக் கருதி ஒழித்துக் கட்டினோம் என்பதில் பெருமைதான்.

இதில் நாட்டில் இன சௌஜன்யத்தையும் நிம்மதியையும் விரும்பி வேண்டி நின்ற அனைத்து இன மக்களுக்கும் பங்குண்டு.

ஆனால் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதில் ஒரு சில இனவாத பௌத்த பிக்குகள் மட்டும் உரிமை கோரிக் கொண்டு மற்றவர்கள் மீது பாயவும் நினைக்கின்றார்கள்.

பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு சற்று நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கிடையில் இப்படி வேறொன்று தலையெடுத்து நமது நாட்டை மீண்டும் குட்டிச் சுவராக்கப் பார்க்கின்றது.

இப்பொழுது உருவாகியிருக்கும் மேலாதிக்க மத வாதம் என்பது, ஏற்கெனவே நாட்டைச் சீரழித்த பயங்கர வாதத்தை விட மிக மோசமானது என்பதை இந்த நாடு நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

இது எஞ்சியுள்ள தேசிய நலன்களையும் இயல்பு வாழ்க்கையையும் இன சௌஜன்யத்தையும் இருந்த இடம் தெரியாமல் செய்து விடும் என்பதை இப்பொழுதே அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

விடுதலை என்ற விமோசனத்தை அடைய முடியாமல் திசை தடுமாறிப் போன பயணத்திற்கு அது கைக்கொண்ட வன்முறைகள் தான் அதற்கு பயங்கரவாத பட்டத்தைச் சூட்ட வைத்தது.

பயங்கரவாதத்தை ஒட்டு மொத்த மக்களும்தான் வெறுத்தார்கள். அதனால்தான் அது தோல்வி கண்டது.

பயங்கரவாதம் நிலவிய போது நீதி தடுமாறியது. நிர்வாகம் சீரற்றுப் போனது. ஆனால் இப்பொழுது அப்படியல்ல. நாட்டில் நாலா திசைகளிலும் இறைமையுள்ள நீதி பரிபாலனம் இருக்கின்றது என்று மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள்.

ஆண்டியும் அரசியல் வாதியும் ஆஸ்திகனும் நாஸ்திகனும் இந்த நீதிக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும்.

ஆனால், இப்பொழுது நாட்டில் உருவாகியிருக்கின்ற மதவாதப் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த அல்லது அடக்கியாள இந்த சட்டமும் நீதியும் கையைக் கட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருப்பதால் பொதுமக்கள் மத்தியில் பயப்பீதி உருவாகியிருக்கின்றது.

போதாக்குறைக்கு சட்டபூர்வமற்ற, ஆனால் அதிகாரமுள்ள சாதிக்கக் கூடிய பொலிஸார் நாமே என்று அவர்கள் தெருவுக்கு வந்து தங்களை அடையாளம் காட்டுகிறார்கள்.

அப்படியிருந்தும்கூட இந்த நாட்டின் சட்டமும் நீதியும் வாலைச்சுருட்டிக் கொண்டு இந்த சட்டபூர்வமற்ற பொலிஸாரைக் கண்டு நடுங்கி வேடிக்கை பார்ப்பதுதான் வேதனையாகவும் சிறுபான்மையினருக்குச் சோதனையாகவும் ஆகிவிட்டிருக்கின்றது.

1400 ஆண்டுகள் பழமை வாய்ந்த முஸ்லிம்களின் சமய கலாசார பண்பாட்டு அம்சங்கள் இன்று நேற்று வந்தது போல இவர்கள் பூச்சாண்டி காட்டுகின்றார்கள்.

புதுப்புது விளக்கங்களுடன் பொதுபலசேனா என்றும் ஜாதிக ஹெல உறுமய என்றும் ராவய என்றும் சட்டரீதியற்ற பொலிஸ்காரர்கள் நாட்டைக் காக்கப் புறப்பட்டு முஸ்லிம்களுக்கு அநியாயமிழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் நேற்று அல்லது முந்தநாளிலிருந்து அரசுடன் சேர்ந்தவர்களல்ல.

ஆட்சியமைப்பதற்குப் பெரும்பான்மை இல்லாமல் பெரும்பான்மைக் கட்சிகள் தடுமாறும் பொழுதெல்லாம் முஸ்லிம்கள் கைகொடுத்து வந்துள்ளார்கள்.

இந்த நாட்டிலே சமாதானம் மலர வேண்டும் சிங்களவர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதில் முஸ்லிம்கள் அக்கறையாக இருந்துவந்துள்ளார்கள்.

கடைசியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினுடைய தலைமைத்துவம் இந்த நாட்டிலே எல்லோருக்கும் சமத்துவத்தையும் சமாதானத்தையும் பெற்றுத் தரும் என்பதில் முஸ்லிம்கள் ஆதங்கமாக உள்ளார்கள்.

ஆனால் வெறுமனே துறவுக் கோலத்தை மட்டும் பூண்டு இனவாத மதவாத வெறிபிடித்தலையும் ஒரு சிறு கும்பலால் இந்த நாட்டுக்கு மிகப்பெரும் தியாகங்களைச் செய்து தேசப்பற்றுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் முஸ்லிம் சமுதாயம் தற்சமயம் இழிவுபடுத்தப்படுவதாக முஸ்லிம்கள் உணர்கிறார்கள்.

துறவுக் கோலத்துடன் வெறிபிடித்தலையும் கும்பல்கள் முஸ்லிம்களின் மதத் தலங்களை அசிங்கப்படுத்தும் பொழுது, கடைகளை உடைக்கும் பொழுது, கலாசார ஆன்மீக விடயங்களில் மூக்கை நுழைத்து முஸ்லிம்களை அவஸ்தைக்குள்ளாக்கும் பொழுது முஸ்லிம்கள் வேதனையடைகின்றார்கள்.

முஸ்லிம்கள் ஜெனீவாவுக்குப் போக விரும்பவில்லை. வெளிநாட்டுத் தூதரகங்களுக்குப் போய் முறையிடவில்லை, சர்வதேச சமூகத்திடம் சென்று அரசைப் பற்றிக் குறை சொல்லவில்லை.

முஸ்லிம்கள் இந்த நாட்டுக்குள்ளே கண்ணியமாகப் பேசி தங்களது பிரச்சினைகளை ஏறெடுத்துப் பாருங்கள் என்று தான் கூறுகின்றார்கள்.

கௌரவமாக, கண்ணியமாக உடையணிந்து மரியாதையாக நடந்து செல்லும் இஸ்லாமிய சமூகப் பெண்களால் துறவிகளுக்கு அச்சமும் பயமும் ஏற்பட்டுள்ளதாம் என்று பூச்சாண்டி காட்டுகின்றார்கள்.

கடந்த 30 வருட கால உள்நாட்டு ஆயுதக் கிளர்ச்சியின் போது ஹபாவுக்குள் குண்டு கொண்டு வரவில்லை. தற்கொலைப் படை வந்து பாயவில்லை.


ஆனால் இப்பொழுது இந்த சமாதான சூழ்நிலையில்தான் ஹபாயாவுக்குள்ளும், பர்தாவுக்குள்ளும் குண்டு வந்து விடும். அதனால் தாங்கள் பாதிக்கப்பட்டுவிடுவோம் என்று குண்டுப்புரளி எழுப்புகின்றார்கள்.

எந்த மதமும் தற்காலத்தில் அதனைப் பின்பற்றிக் கொண்டிருக்கும் அந்த சமூகத்தாருக்கு மாத்திரம் சொந்தமானது என்று எவரும் உரிமை கோர முடியாது.

நல்வழிப்படுத்தி லௌகீக - ஆன்மீக வழி முறைகளில் நம்மை நெறிப்படுத்தும் எந்த மதமாயினும் அது உலக மாந்தர் அனைவருக்கும் சொந்தமானதுதான்.

அமைதியைப் போதிக்கும் மதத்தையும் துறவறத்தையும் கடைப்பிடித்தொழுகின்றோம் என்று கூறும் துறவி கள் வீதிக்கு வந்து மற்றவர்களை வீண் வம்புக்கிழுப்பதைத் தவிர்த்துக் கொள்ளுதல் ஊருக்கும் உலகத்துக்கும் நல்லது.

**ஏ.எச்.ஏ.ஹுசைன்**



**ரிஷி**




# புலிகளின் வீழ்ச்சி!

## வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண அதிகாரமும் இல்லாமல், தமிழீழமும் பெற்றுக் கொடுக்க முடியாமல் போனால் மக்களுக்கு என்ன பதில் கூறுவீர்கள்?

*ஹர்தீப் பூரி*

மிகக் குறுகிய கால அவகாசத்தில் ஒப்பந்தத்தைப் பார்த்த நான்கு இயக்கங்களும் கொள்கைரீதியாக ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டன. ஆனால் ஒப்பந்தத்தில் இருந்த முரண்பாடுகளை எழுத்துமூலமாகக் கொடுத்திருந்தன. தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் கட்சிக்கும், ஈரோஸ் இயக்கத்துக்கும்கூட அதே நிலைமைதான்.

தங்களது கருத்துக்களை – ஒப்பந்தத்திலுள்ள முரண்பாடுகளை – எழுத்து மூலமாகக் கொடுத்துவிட்டு, நடப்பதைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய நிலைமை.

இந்தச் சந்திப்பு முடிவடைந்த பின்னர் இயக்கத் தலைவர்கள் அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஈரோஸ் தவிர்த்த மற்றைய இயக்கத் தலைவர்கள் ஒன்றுகூடி ஒப்பந்தம் பற்றி ஆராய்ந்தார்கள். அன்று மாலையே நான்கு இயக்கங்களும் கூட்டாக அறிக்கையொன்றை வெளியிட்டது. அதில் ஒப்பந்தத்திலுள்ள சில முரண்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

மறுநாள் 28ஆம் திகதி இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி இயக்கத் தலைவர்களைச் சந்திக்க நேரம் ஒதுக்கியிருந்தார். சந்திப்பு அவரது இல்லத்தில் நடைபெற்றது

ராஜிவ் காந்தியின் முன்னால் இரு ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒன்று இலங்கை – இந்திய ஒப்பந்தம். மற்றயது விடுதலை இயக்கங்கள் இந்த ஒப்பந்தத்திலுள்ள முரண்பாடுகள் பற்றி வெளியிட்டிருந்த அறிக்கை. அறிக்கையில் இயக்கங்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த முரண்பாடுகள் எல்லாம் பேனாவால் அடிக்கோடிடப்பட்டிருந்தது.

"நீங்கள் கூறியுள்ள முரண்பாடுகள் எல்லாவற்றையும் பார்த்தேன். கவலைப்படாதீர்கள் அவற்றை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றார் பிரதமர். ஆனால், புலிகள் இயக்கத்துடன் டீல் பண்ணுவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. அந்த ஒப்பந்தத்தின் முழுமையான நகல் ஒன்று அவர்களுக்கு அதுவரை காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஒப்பந்தத்தில் "அது இருக்கிறது. இது இருக்கின்றது" என்று இங்கொன்றும் அங்கொன்றுமான தகவல்களே இந்திய தூதரக அதிகாரி பூரியினால் கூறப்பட்டிருந்தது.

சென்னையில் இருந்து டில்லி சென்ற விமானத்தில் பிரபாகரன் குழுவினருடன் பூரியும் ஒன்றாகவே பயணம் செய்தார். ஆழ்ந்த சிந்தனையில் இருந்த பிரபாகரன், பூரியுடன் அதிகமாகப் பேசிக்கொள்ளவில்லை.

விமானம் டில்லி சர்வதேச விமான நிலையத்துக்கு அருகிலுள்ள விமானப்படை தளம் ஒன்றில் இறங்கியது. அங்கிருந்து அவர்கள் அசோகா ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அசோக ஹோட்டலில் செக்–இன் பண்ணிய நிமிடத்திலிருந்து ஆரம்பமாகியது குழப்பம்.

பிரபாகரனும் அவருடன் சென்றவர்களும் அசோகா ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட நேரத்தில், இலங்கைக்கான இந்தியத் தூதர் டிக்சித், ஏற்கனவே அதே ஹோட்டலில் மற்றுமோர் அறையில் தங்கியிருந்தார். முதலில் அவர் பிரபாகரனை சந்தித்தார்.

"ஒப்பந்தம் பற்றிய நகல் ஒன்று இதுவரை எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை" என்பதுதான் பிரபாகரன், டிக்சித்திடம் முதலில் கூறியது.

"ஒப்பந்தத்தின் இறுதி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிக விரைவில் உங்களிடம் அந்த ஒப்பந்தத்தின் நகல் கொடுக்கப்பட்டு விடும்" என்று டிக்சித் பதில் கூறியிருக்கிறார்.

"ஒப்பந்தம் முழுமையாகத் தயாரிக்கப் படாமலா எங்களைப் பேச்சுக்கு அழைத்திருக்கிறீர்கள்"

"முக்கியமான விபரங்கள் சேர்க்கப்பட்டு விட்டன. சட்டரீதியான சில குறிப்புக்கள்தான் இப்போது அதில் இணைக்கப்படுகின்றன"

"ஒப்பந்தம் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய அளவிலும் இருக்கவேண்டும். இல்லா விட்டால் தனி ஈழம்தான் எங்களது ஒரே முடிவாக இருக்கும்"

"ஒப்பந்தம் இந்தளவுக்கு வந்தபின்னர் நீங்கள் அப்படிக் கூறிவிட முடியாது. இது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கிட்டத்தட்ட முடிவாகிவிட்ட ஒரு ஒப்பந்தம்"

"அதைத்தான் நாங்களும் சொல்கிறோம். இது உங்களுக்கும் (இந்தியாவுக்கும்) அவர்களுக்கும் (இலங்கைக்கும்) இடையிலான ஒரு ஒப்பந்தம். இதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமில்லை"

பிரபாகரன் இப்படிக் கூறியதும் டிக்சித் திகைத்துப் போனார். அவர்கள் இதை உண்மையில் அந்தக் கோணத்தில் இதுவரை பார்த்திருக்கவில்லை. ஒப்பந்தம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இருப்பதால் அதில் உள்ளவை புலிகள் அமைப்பை எந்தவகையிலும் கட்டுப்படுத்தாது என்பதை தாமதமாகவே உணர்ந்துகொண்டார். அன்றைய சந்திப்பு முடிவடைந்தது.

மறுநாள் காலையில் பிரபாகரனுக்கு மற்றுமோர் விஷயம் தெரியவந்தது. மற்ற இயக்கங்களின் பிரதிநிதிகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகளையும் டில்லிக்கு அழைத்து வந்து அசோகா ஹோட்டலுக்கு அருகே சாம்ராட் ஹோட்டலில் தங்கவைத்திருக்கும் விஷயம்தான் அது. அது தெரியவந்ததும், பிரபாகரன் கடும் கோபத்தில் இருந்தார்.

அதே தினத்தில் (ஜூலை 25ஆம் திகதி) இந்திய அதிகாரிகள் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரதியொன்றை முதன் முதலில் பிரபாகரனிடம் கொடுத்தார்கள். தூதரக அதிகாரி பூரி, ஒப்பந்தத்திலுள்ள ஒவ்வொரு பகுதியையும் படித்துக்காட்ட, அன்ரன் பாலசிங்கம் அதை மொழிபெயர்த்தார். இது கிட்டத்தட்ட ஒன்றேகால் மணிநேரம் நடைபெற்றது.

ஒப்பந்தம் பற்றிக் கலந்தாலோசிக்க தங்களுக்கு அவகாசம் தேவை என்று பிரபாகரன் கூறியதில், "பின்னர் வருகிறோம்" என்று கூறிவிட்டு, பூரியும் மற்றையவர்களும் புலிகளை அந்த அறையில் ஆலோசனை நடத்த விட்டுவிட்டு வெளியே சென்றார்கள்.

மதிய நேரம், மீண்டும் இந்திய அதிகாரி கள் அந்த அறைக்கு வந்தார்கள். "ஆலோசனை செய்து என்ன முடிவுக்கு வந்திருக்கிறீர்கள்"

"ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது" இதைக் கேட்டதும் பூரி திகைத்துப் போய்விட்டார்.

"ஒப்பந்தத்தில் இருப்பவை அனைத்தும் உங்களுக்குத் தெளிவாக விளக்கியிருக்கிறேன்"

"அதுதான் சொல்கிறோம். ஒப்பந்தம் புலிகள் அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்று."

"இதைவிட உன்னதமான தீர்வு ஒன்று ஈழத் தமிழர்களுக்குக் கிடைக்கமுடியாது என்பது எங்கள் எண்ணம்"

"கிடைக்கும் என்பது புலிகள் இயக்கத்தின் தீர்மானமான முடிவு. நீங்கள் கொடுக்கும் தீர்வைவிட உன்னதமான தீர்வு ஒன்றை எமது மக்களுக்கு எப்படி பெற்றுக்கொடுப்பது என்று எமது தலைவருக்கு தெரியும்" என்றார் பாலசிங்கம்.

"இந்தியா பெற்றுக்கொடுக்கும் தீர்வில், இலங்கையின் வடக்கு – கிழக்கு மாகாணங் களை ஒன்றிணைத்து, நீங்களே மாநில அரசை நடத்தும் அதிகாரம் கிடைக்கிறதே"

"அது எங்களுக்கு தேவையில்லை. எமது தலைவரால் அதைவிட பெரிதான ஒன்றை பெற்றுக்கொடுக்கும் வல்லமை உள்ளது"

"இதைவிட பெரிய தீர்வா? அது என்ன"

"தனி ஈழம். எமது மண்ணை நாங்களே ஆட்சி செய்யும் தனிநாடு" அன்ரன் பாலசிங்கம் இப்படிக் கூறியதும் தூதரக அதிகாரி பூரி சிறிதுநேரம் பேச்சு வராமல் நின்றிருந்தார். இதற்கு மேல் எதைக் கூறி புலிகள் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வைக்கச் செய்ய முடியும் என்பதை அவரால் ஊகிக்க முடியாது இருந்திருக்கலாம்.

"இதுதான் உங்கள் முடிவு என்றால், அதை எனது மேலதிகாரியிடம் கூறுகின்றேன். நான் ஒரு அதிகாரிதான். எனது மேலதிகாரி யும், ஆட்சியில் இருப்பவர்களும் என்ன செய்வது என்று முடிவு எடுப்பார்கள்" என்றார் பூரி.

அந்த அறையில் இருந்து வெளியேற முயன்ற அவர், ஒரு கணம் தயங்கியபின் திரும்பி கேட்டார்: "இப்போது உங்களுக்கு (இலங்கை தமிழர்களுக்கு) இலங்கையில் எந்த அதிகாரமும் கிடையாது. நாங்கள் இரு மாகாணங்களை ஒன்றிணைந்து, மாகாண அரசு ஒன்றை உருவாக்கி, அதன் அதிகாரத்தை தருவதாக கூறுகிறோம். ஏற்றுக் கொள்ளப்பட முடியாது என்கிறீர்கள். உங்கள் மக்களுக்கு கிடைக்கவுள்ள இந்த அதிகாரத்தை, அவர்களது பிரதிநிதிகள் என்று கூறி மறுக்கிறீர்கள். நாளைக்கே வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்ட மாகாண சபை அதிகாரமும் இல்லாமல், உங்களால் தனி ஈழமும் பெற்றுக்கொடுக்க முடியாமலும் போனால், உங்கள் மக்களுக்கு என்ன பதில் கூறுவீர்கள்?"

இதற்கு பிரபாகரன் தமிழில் கூறிய பதிலை, அன்ரன் பாலசிங்கம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறினார். "அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் கிளம்புங்கள்" இதற்குமேல் எதுவும் பேசாமல், அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார் பூரி.

அன்று பூரி யதார்த்தமாக கேட்ட கேள்வி ஆனால் இந்த தூதரக அதிகாரி ஹர்தீப் பூரி, நடக்கப் போவதை ஊகித்துக் கேட்டாரா, உள்ளுணர்வில் கேட்டாரா, அல்லது அந்த நேரத்தில் மனதில் எழுந்த கேள்வியை கேட்டாரா என்பது தெரியாது. அது, ஆனால், அவரது சந்தேகமே பலித்தது.

ஆனால் பதில் கூறுவதற்குமட்டும் இப்போது யாருமே இல்லை.

(தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

*வதை-66 மணியம்*

அவர் சிறையிலிருந்து தப்பியோடிய பின்னர் செய்த நடவடிக்கைகளை, அவருடன் அதன் பின்னர் தொடர்பிலிருந்து பின்னர் புலிகளால் கைதுசெய்யப்பட்டவர்கள் கூறினார்கள்.

இந்த விடயங்களை வைத்துப் பார்க்கும்போது, கால் நூற்றாண்டு காலமாக புலிகள் செய்துவந்த மனித குலத்துக்கு எதிரான செயல்களை ஆதாரபூர்வமாக ஆராய்ந்து ஆவணப்படுத்தும் செயற்பாட்டை நிறுவனரீதியாக யாராவது ஆரம்பிப்பது அவசியமாகும். இதைச் சொல் வதால், ஏனையவர்கள் செய்த அத்துமீறல்களை உதாசீனப்படுத்து வதாக அர்த்தப்படுத்தக்கூடாது. அரச இராணுவங்களாக இருந்தால் என்ன?, 'விடுதலை இயக்கங்களின்' அத்துமீறல்களாக இருந்தால் என்ன?, அனைத்துமே ஆவணப்படுத்தப்படுவது அவசியம். அந்த ஆவணங்கள், எமது வருங்காலச் சந்ததியினர் ஜனநாயக உணர்வைப் பெறுவதற்கான பாட நூல்களாகப் பயன்படக்கூடும்.

வரலாற்றில் உலக நாடுகள் பலவற்றிலும் அந்த நாடுகளின் அரசாங்கங்களும், சில நாடுகளில் விடுதலை இயக்கங்கள் என்பவை யும், தமக்கு எதிரானவர்களைக் கைதுசெய்வதும், அவர்களைச் சித்திரவதை செய்வதும், முடியுமானால் போலியான குற்றச்சாட்டுகளை வைத்து அவர்களுக்குத் தூக்குத் தண்டனை உட்பட பல்வேறு தண்டனைகளை வழங்குவதும் நீண்டகால நடைமுறையாக இருந்து வந்துள்ளது. பாகிஸ்தானின் புகழ் பெற்ற பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோ, ஈராக்கின் ஜனாதிபதி சதாம் ஹுசைன் உட்பட உண்மையான புரட்சிகர விடுதலைப் போராளி சேகுவேரா வரை இந்த நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு வந்துள்ளன.

ஆனால் அப்படிக் கைது செய்யப்பட்டவர்கள் தாம் என்ன நோக்கத்துக்காகக் கைதுசெய்யப்பட் டோம் என்பதை ஓரளவுக்குத் தெரிந்தே இருந்தார்கள். ஜெர்மனிய சர்வாதிகாரக் கொடுங்கோலன் ஹிட்லரின் கெஸ்டாபோ உளவு படையினரால் கைதுசெய்யப்பட்டு மரணக்கிடங்குகளில் கூண்டோடு கொலை செய்யப்பட்டவர்கள்கூட, தாம் என்ன காரணத்துக்காகக் கைதுசெய்யப்பட்டோம் என்பதை அறிந்தே இருந்தனர்.

ஆனால் புலிகளின் கைது நடவடிக்கைகள் அப்படியானவை அல்ல. அவர்கள் ஒருவரைக் கைது செய்வதற்குமுன்னர், என்ன குற்றச் சாட்டில் அவர் கைதுசெய்யப்படுகிறார் என்பது சம்பந்தப்பட்டவருக்குத் தெரியப்படுத்தப்படுவதில்லை.

என்னுடன் சிறையில் இருந்த பலரை நான் அவர்களின் கைதுக்கான விசாரித்தபோது, "ஐயா, ஒரு சின்ன விசாரணை. கொஞ்ச நேரத்திலை திரும்பி வரலாம்" எனச் சொல்லப்பட்டே தாம் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரால் பிடித்து வரப்பட்டதாகத் தெரிவித்தனர்.

சிலவேளைகளில் அவர் மீதான விசாரணை பூர்த்திசெய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட பின்னரும் கூட, அவர் தான் எதற்காகக் கைதுசெய்யப்பட்டார் என்று கடைசி–வரை தெரியாமலே போய்விடுவதும் உண்டு. நேரடியாகக் குற்றச்சாட்டைத் தெரிவிக்காமல், சுற்றிவளைத்து ஏதாவது சிலவேளைகளில் சம்பந்தா சம்பந்தமில்லாத கேள்விகளையும் கேட்டவண்ணம் இருப்பர்.

அப்படிக் கேள்விகள் கேட்கும்போது, விசாரணைக்கு உட்படுபவர் அப்பாவியாக இருந்தால், ஏதாவது இடக்குமிடக்காக எதையாவது சொல்லப்போய், ஏதாவது வேறு புதிய பிரச்சினைகளில் மாட்டிக்கொள்வார். பின்னர் அந்த விவகாரங்கள் குறித்தும் விசாரணை தொடரும். தேவையானால் அதையொட்டி மேலும் சிலர் கைது செய்யப்படுவார்கள்.

எனது விசாரணையும் இப்படித்தான் நாட்கணக்கில் தெளிவில்லாமல் சுற்றிக் கொண்டிருந்தது. ஒரு நேரம் பார்த்தால், புலிகளது விசாரணை என்.எல். எப்.ரி இயக்கத்துடன் எனக்கு உள்ள தொடர்புகளுக்காகக் கைது செய்யப்பட்டது போலத் தோன்றும். இன்னொரு நேரம் பார்த்தால், நான் ஒரு கம்யூனிஸ்ட் கட்சிக்காரன் என்ற காரணத்துக்காக கைதுசெய்யப்பட்டது போலிருக்கும். சிலவேளைகளில் மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் போன்ற மனித உரிமை அமைப்பு களுடன் தொடர்பில் இருந்ததிற்காக கைதுசெய்யப்பட்டது போல இருக்கும். மற்றும் சிலவேளைகளில் காந்தி போன்றவர்கள் பொழுதைப் போக்குவதற்காக என்னிடம் கேள்விகள் கேட்பது போலவும்கூட இருக்கும்.

(தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம் 56

பா.ராகவன்

**ஒரே** ஒரு யூதருக்கு ஏதாவது பெரிய உத்தியோகம் கிடைத்துவிட்டால் போதும், தமது திறமையால், வேலையைத் தக்கவைத்துக் கொள்வதோடு கூட, கொஞ்சம் கொஞ்சமாக அந்த அலுவலகத்திலேயே எப்படியாவது இன்னும் சில யூதர்களை அவர் ஏதாவதொரு பணியில் அமர்த்தி விடுவார்.

ஒருவர், பத்துபேர், நூறுபேர் என்றில்லை. ஒட்டுமொத்தமாக யூத குலத்தின் இயல்பு இது. திறமையிலும் புத்திக் கூர்மையிலும் அவர்கள் நிகரற்றவர்களாக இருந்தார்கள். அதைக்கொண்டு தமது சொந்த சமூகத்தினரை முன்னேற்றுவதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். பொருளாதார ரீதியில் கொஞ்சம் மேம்பட்ட தரத்தில் இருந்த அத்தனை யூதர்களும், அந்தந்த தேசத்து ஆட்சியாளர்கள் மட்டத்தில் செல்வாக்கை வளர்த்துக்கொண்டு, தமது சமூகத்தினரின் நலனுக்காக இரகசியமாக நிறைய காரியங்களைச் சாதித்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்காகக் கணக்கு வழக்கில்லாமல் கையூட்டுத் தரவும் அவர்கள் தயங்கியதில்லை. வேண்டியதெல்லாம் யூதர்களுக்குத் தனியாக ஒரு குடியிருப்புப் பகுதி. உழைத்துப் பிழைத்துக் கொள்ள அனுமதி. தொல்லைகள் ஏதுமிருக்காது என்கிற உத்தரவாதம். அவ்வளவுதான். தனிக் குடியிருப்பு என்பது தவிர மற்றவை எல்லாமே நியாயமான கோரிக்கைகள்தாம். ஆனாலும் அதற்கே அவர்கள் கையூட்டுத் தரவேண்டிய நிலைமை அன்றைக்கு இருந்தது. வாங்குவதற்கும் ஆட்கள் இருந்தார்கள் என்பதையும் கவனிக்கவேண்டும்.

இது பெரும்பான்மை கிருத்தவர்களுக்கு எப்போதும் பிரச்சினையாக இருந்தது. இதனாலேயே ஒரு யூதரையும் பிழைக்கவிடக்கூடாது என்று ஒட்டுமொத்த ஐரோப்பாவும் கருதத் தொடங்கியது. யதார்த்த காரணங்களுக்குப் புராதன காரணங்களைத் துணைக்குச் சேர்த்துக் கொண்டு, யூதர்களுக்கு எதிரான வன்முறையை அவர்கள் கட்டவிழ்த்துவிடத் தொடங்கினார்கள். பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் யூதர்கள் ஐரோப்பாவில் வாழ்வது மிகவும் சிரமம் என்கிற நிலைமை முதல் முதலில் உருவானது. எந்த ஊரில், எந்த நாளில், எந்தக் கணத்தில் முதல் கொலை விழும் என்கிற கேள்வி தினமும் அங்கே இருந்தது.

கி.பி.1492 ஆம் ஆண்டு முதல் முதலில் மிகப்பெரிய அளவில் யூதர்களை வெளியேற்றத் தொடங்கியது ஸ்பெயின். மொத்தம் ஒரு லட்சத்து அறுபதாயிரம் யூதர்கள் அப்போது அங்கே வசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அத்தனை பேரையும் நிற்கவைத்துப் பட்டியல் தயாரித்து, ஒருவர் மிச்சமில்லாமல் தேசத்தை விட்டுவெளியேறி விடவேண்டும் என்று அப்போது ஸ்பெயினை ஆண்டுகொண்டு இருந்த மன்னர் ஃபெர்டினாண்ட் உத்தரவிட்டார். அதிக கால அவகாசம் இல்லை. உயிர்பிழைக்க வேண்டுமென்றால் ஊரைக் காலிசெய்வது தவிர வேறு வழியில்லை.

காலம் காலமாக உழைத்துச் சேர்த்த சொத்து சுகங்கள் அத்தனையையும் அப்படியே விட்டுவிட்டு ஸ்பெயினை விட்டு யூதர்கள் புறப்பட்டார்கள். சுமார் தொண்ணூறாயிரம் பேர் அப்போது துருக்கி ஒட்டாமான் பேரரசின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தார்கள். சுமார் இருபத்தையாயிரம் பேர் ஹாலந்துக்குப் போனார்கள். இருபதாயிரம் பேர் மொராக்கோவுக்கு. பத்தாயிரம் பேர் பிரான்ஸுக்கும் இன்னொரு பத்தாயிரம் பேர் இத்தாலிக்கும். ஒரு ஐயாயிரம் பேர் மட்டும் இன்னொரு ஐரோப்பிய தேசத்துக்குப் போவது எப்படியானாலும் ஆபத்துதான் என்று தொலைநோக்குப் பார்வையுடன் யோசித்து, அட்லாண்டிக் கடல் தாண்டி வட அமெரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் போய்ச் சேர்ந்தார்கள்.

இவர்களுள் மத்திய ஆசியாவுக்கு – முஸ்லிம் தேசங்களுக்கு – வந்தவர்கள்தான் அதிகம். அங்கேதான் பாதுகாப்பு அதிகம் என்பது அவர்களது நம்பிக்கை.

ஸ்பெயினில் இருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டதற்குச் சரியாக போர்த்துக்கலும் யூதர்களை விரட்டி அடிக்கமுடிவு செய்தது. கி.பி.1497 ஆம் ஆண்டு. இதெல்லாம் பின்னால் மற்ற ஐரோப்பிய நாடுகளும் செய்யப்போகிற மாபெரும் விரட்டல்கள், மிகப் பெரிய இனப்படுகொலைகளுக்கு ஒரு சிறு முன்னோட்டம் மாதிரி நடைபெற்ற சம்பவங்கள். யூதவெறுப்பு என்பது தொட்டுதொட்டு காட்டுத்தீ மாதிரி தேச எல்லைகளைக் கடந்து ஐரோப்பா முழுவதும் பரவிக்கொண்டிருந்த சமயம். எப்போதும் பாதுகாப்பற்ற உணர்வுடனேயே யூதர்கள் அங்கே இருந்தார்கள். ஆனால் அந்தச் சமயத்திலும் அவர்கள் மொத்தமாக குழுக்கள் குழுக்களாகத்தான் இருந்தார்கள். அதாவது எந்தவொரு இடத்திலும் ஒரு தனி யூதக் குடும்பத்தைப் பார்த்துவிட முடியாது. மாறாக ஒரு யூதக் குடும்பம் உங்கள் கண்ணில் தென்படும் இடத்தில் குறைந்தது 50 குடும்பங்கள் வசிக்கின்றன என்பதே அர்த்தம்.

கஷ்ரங்களை அவர்கள் சேர்ந்தேதான் அனுபவித்தார்கள். திட்டங்கள் தீட்டப்படும் போதும் ஒருமித்த முடிவாகத்தான் எதையுமே செய்தார்கள். ஒரு தவறான முடிவை எடுக்க நேர்ந்தால்கூட தனியாக எடுக்க விரும்பாத இனம் அது.

ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கலில் இருந்து புறப்பட்ட யூதர்களில் பெரும்பாலானோரை அரபுதேசங்களுக்கே அனுப்புவது என்று யூத குருமார்களின் சபைதான் முதலில் தீர்மானித்தது. அந்தத் தேசங்களில் வாழ்ந்து வந்த மொத்த யூதர்களையும் கணக்கிட்டு பிரித்து வேறுவேறு தேசங்களுக்கு அனுப்பினாலும், 'மிக முக்கியமான நபர்கள்' என்று



அடையாளம் காணப்பட்ட அத்தனை பேரையும் அரபு தேசங்களுக்கே அனுப்பினார்கள். மிக முக்கியமான நபர்கள் என்றால் யூத குலத்துக்கு அந்தக் காலகட்டத்தில் மிக முக்கியமாகத் தேவை என்று கருதப்பட்ட நபர்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர்கள், எழுத்தாளர்கள், சட்ட நிபுணர்கள், இராஜதந்திரிகள், கலைஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் இப்படி.

ஒரு நெருக்கடி நேர்ந்திருப்பதால் வேறு வேறு தேசங்களுக்கு நேரிடுகிறது. போகிற இடங்களில் எல்லாம் பிரச்சினை இல்லாமல் வாழ முடியுமா என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. குறைந்த பட்சம் இனக்காவலர்கள் என்று கருதப்படுகிறவர்களாவது ஓரளவு பாதுகாப்புடன் வாழ வேண்டும் என்பதற்காகவே அவர்களை அரபு தேசங்களுக்கு அனுப்பினார்கள் என்று பெரும்பாலான யூத சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மிகவும் ஊன்றிக் கவனிக்க வேண்டிய விடயம் இது. அராபியர்களுடன்தான் யூதர்களுக்குப் பிரச்சினை. அதுவும் ஜெருசலேமை முன்வைத்த பிரச்சினை. நடுவில் கிருத்தவர்கள் கொஞ்சக் காலம் அந்த நகரை உரிமை கொண்டாடிவிட்டுத் திரும்பிப் போயிருக்கிறார்கள். ஜெருசலேம் மீண்டும் யூதர்களின் நகரம்தான் என்கிற கோரிக்கை அல்லது கோஷம் எழத்தான் போகிறது. இது யூதர்களுக்கு மட்டுமல்லாமல் அரேபிய முஸ்லிம்களுக்கும் மிக நன்றாகத் தெரிந்த விடயம்.

ஆனபோதிலும் அவர்கள் மத்தியில் போயிருப்பது கிருத்தவ தேசங்களுக்குப் போவதைக் காட்டிலும் நல்லது என்று யூத குருமார்கள் கருதினார்கள்.

(தொடரும்...)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 526

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | | | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 02.07.2013 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 526
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 524- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சா 1 | த் 2 | த 3 | னா 4 | ர் 5 | |
| கி 7 | சி 8 | ஞ் 9 | | கா 11 | ச 12 |
| த் 13 | றி 14 | சை 15 | தி 16 | | ம் 18 |
| தி 19 | து 20 | | க 22 | றி 23 | சா 24 |
| ய 25 | | ய 27 | ம் 28 | கை 29 | றி 30 |
| ம் 31 | ண 32 | க 33 | க் 34 | தூ 35 | |

**மேலிருந்து கீழ்**

01.சூரியன்.
02.முறைப்பாடுகாரன்.
03.திருநாள். (குழம்பியுள்ளது)
05. சாந்தமடைதல்.
06.சாவித்திரியின் நாயகன் அல்லது மெய்யன். (திரும்பியுள்ளது)
20.ஒரு நட்சத்திரம். (குழம்பியுள்ளது)
28.வஞ்சம்.

**இடமிருந்து வலம்**

01. அண்மையில் வெள்ளிமாளிகையில் வைத்து 'மாற்றத்துக்கான சாதனையாளன்' என்ற அதியுயர் விருதைப் பெற்ற பேராசிரியர்களுள் ஒருவரான யாழ்ப்பாணத்துத் தமிழர்.
07.இன்பம் அல்லது பேரீந்து. (குழம்பியுள்ளது)
11.சரஸ்வதி. (திரும்பியுள்ளது)
15. களவு போய் திரும்பிக் கிடைத்தது. (குழம்பியுள்ளது)
19.ஒரு தமிழ் வருடம். (திரும்பியுள்ளது)
23.ஓர் அசைச்சொல் அல்லது மனதில் உண்டாகும். (திரும்பியுள்ளது)
25.சைவ சாப்பாட்டுடன் இதுவும் கிடைக்கும். (குழம்பியுள்ளது)
31.சோழ மன்னர்களின் முன்னோர் அல்லது விண்ணப்பம். (திரும்பியுள்ளது)
34.சீக்கிரம். (திரும்பியுள்ளது)


குறுக்கெழுத்துப் போட்டி இல. 524 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

**எஸ். குகதாயினி, தாழ்வுபாடு, மன்னார்.**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. எம். தர்சிகா, நல்லூர், யாழ்ப்பாணம்.
02. சி.பிரணவன், தெல்லிப்பளை மேற்கு, தெல்லிப்பளை.
03.எம். வைத்தியநாதன், கடற்கரை வீதி, நீர்கொழும்பு.
04. க.முத்தையா, செங்கலடி, மட்டக்களப்பு.
05. ப. பன்னீர்ச்செல்வம், பிரதான வீதி, ஹற்றன்.
06. என் மதுஷிகா, தென்னங்கும்புர, கண்டி.
07. எம்.எச்.ஏச்.ஆயிஷா, உடப்பு, புத்தளம்.
08. எஸ்.ரமணன், றெப்பானா, விசுவமடு.
09. எம்.ஜோன்சன், குருநகர், யாழ்ப்பாணம்.
10. கே. அச்சுதா, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

# சட்டம் பிரிக்கலாம் உறவுகள் பிரியாது!




**இரு மாகாணங்களாக வடக்கும் கிழக்கும் சட்ட ரீதியாக பிரிக்கப்பட்டாலும், மாகாண சபைகளை பெற்றுக்கொண்டு செம்மையாக நடைமுறைப்படுத்துகின்ற போது, இணக்கத்தின் பேரில் ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்கள் இணைந்து கொள்ளும் வாய்ப்பைத் தருகின்ற சரத்தை பயன்படுத்தி வடக்கையும் கிழக்கையும் இணைத்துக் கொள்ளமுடியும் என்று தமிழ் மக்களிடையே விருப்பங்கள் இருந்தது.**

**ஆனாலும் தமிழ் மக்களின் தேசிய உணர்வையும், இழப்புக்களின் வலியையும் தமது சுயலாப அரசியலுக்காக பயண்படுத்திக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், அவர்களுக்கு ஊதுகுழலாக இருக்கும் சில ஆயர்கள் போன்ற புத்திஜீவிகளும் தமிழ் மக்களின் விருப்பங்களை தகர்த்துவிட்டுள்ளனர்.**

அலசுவது - மதியூகி

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில் ஆளும் கட்சி நினைத்ததைச் செய்து முடித்து விடக்கூடிய நிலைமை உள்ளது. எதிர்க்கட்சிகளின் கூட்டோ, அமெரிக்காவோ, இந்தியாவோ ஒன்றும் செய்துவிடமுடியாது.

இலங்கை அரசின் செயற்பாடுகளை சுட்டிக்காட்டி கவலைப்படலாம், அறிக்கைகள் விடலாம், ஏன் கண்டனம்கூட தெரிவிக்கலாம். வேறு எதையும் செய்துவிட முடியாது. இலங்கை அரசு தான் நினைத்ததை செய்யும் என்பதை கடந்த வாரமும் மீண்டும் நிரூபித்துள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர அரசு தீர்மானித்தது. மாகாண சபையே வேண்டாம் என்பதும், மாகாண சபை இருக்குமாக இருந்தால் அதற்குக் காணி, பொலிஸ் அதிகாரங்களை ரத்துச் செய்ய வேண்டும் என்பதும் இறுதியாக மாகாண சபைகளை உயிரோடு விட்டாலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்கள் இணக்கத்தின் பேரில் இணைந்து கொள்ள இடமளிக்கும் சரத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்பதும் முக்கியமான நோக்கமாகும்.

அரசாங்கம் நினைத்திருந்தால் இம்மூன்றையுமே கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் ஏக மனதான தீர்மானத்தை எடுத்திருக்கலாம். அரசின் 13ஆவது திருத்தத்தில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு - கொண்டு வருகின்ற முன்மொழிவுகளை எதிர்க்கின்ற முற்போக்கு அமைச்சர்கள் மற்றும் மு.கா, ஈ.பி.டி.பி போன்ற கட்சிகளும் என்னதான் விவாதங்களைச் செய்தாலும் அரசுக்கு தான் கொண்டுவரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிக் கொள்ளவும், பாராளுமன்றத்தில் சட்டமாக்கிக் கொள்ளவும் போதுமான பலத்தோடு உள்ளது.

இந்த ஸ்திரமான நிலை காரணமாகத்தான் உள்நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகளின் கூச்சலையும், வெளிநாடுகளின் மிரட்டல்களையும் கண்டுகொள்ளாமல் இலங்கை அரசு பயணித்துக் கொண்டிருக்கின்றது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஏழாம் திகதி வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களுக்கான தேர்தல் நடைபெறுமென செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் 13ஆவது திருத்தத்தில், இரு மாகாணங்கள் இணைந்துகொள்ள சந்தர்ப்பம் வழங்கும் சரத்தை இல்லாது செய்யும் சட்ட திருத்தமான 19ஆவது திருத்தத்தை அவசர சட்டமூலமாக பாராளுமன்றத்துக்கு கொண்டுவரவுள்ளதாக தெரிகின்றது.

13ஆவது திருத்தச்சட்டத்தில் எவ்வித திருத்தமும் செய்யாமல் வடக்கு மாகாண சபைக்கான தேர்தர்தலை அரசு நடத்த வேண்டுமென பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியும், ஏனைய எதிர்க்கட்சிகளும் என்னதான் தாமே மொட்டையடித்துக் கொண்டு கரும்புள்ளி - செம்புள்ளி குத்திக் கொண்டாலும் அரசின் நகர்வுகளில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை என்பது தெளிவாகின்றது.

இந்த நிலையிலேயே 19ஆவது திருத்தம் பாராளுமன்றத்துக்கு வரவுள்ளது. அனேகமாக அரசு 19ஆவது திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விட்டு அதில் வெற்றியும் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர்களின் தாயக பூமி என்ற கோரிக்கையை சட்டரீதியாக பிரிக்கப்பட்டுவிடும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு முன்னரும் வடக்கும் கிழக்கும் இரு மாகாணங்களாக இருந்தபோதும், ராஜிவ் காந்தி, ஜெ.ஆர். ஜெயவர்தனா ஆகியோரின் ஒப்பந்தமே வடக்கையும் கிழக்கையும் சட்டரீதியாக இணைத்துத் தந்தது.

தமிழர்கள் அரசியல் உரிமை பிரச்சினைக்காக நடத்திய போராட்டங்களும், அர்ப்பணிப்புக்களும், கொடுத்த உயிர்த்தியாகங்களும் பெற்றுக்கொடுத்த பெறுபேறுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தமும், வடக்கு - கிழக்கு இணைப்பும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

இந்திய அமைதி காக்கும் படையுடன் மோதலை ஆரம்பித்தும், மாகாண சபையை எதிர்த்தும், புலிகள் தொடர்ந்த பயங்கரவாதச் செயற்பாடுகளே இந்தியாவை தமிழர்களுக்கான பின்பலமாக இல்லாமல் செய்ததும், வடக்கு - கிழக்கை இருவேறு மாகாணங்களாகவும் பிரித்துப்போடும் பின்புல சூழலை தோற்றுவித்தது.

இரு மாகாணங்களாக வடக்கும் கிழக்கும் சட்டரீதியாக பிரிக்கப்பட்டாலும், மாகாண சபைகளை பெற்றுக்கொண்டு செம்மையாக நடைமுறைப்படுத்துகின்றபோது, இணக்கத்தின் பேரில் ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்கள் இணைந்து கொள்ளும் வாய்ப்பைத் தருகின்ற சரத்தை பயன்படுத்தி வடக்கையும் கிழக்கையும் இணைத்துக்கொள்ள முடியும் என்று தமிழ் மக்களிடையே விருப்பங்கள் இருந்தது.

ஆனாலும் தமிழ் மக்களின் தேசிய உணர்வையும், இழப்புக்களின் வலியையும் தமது சுயலாப அரசியலுக்காக பயன்படுத்திக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், அவர்களுக்கு ஊதுகுழலாக இருக்கும் சில ஆயர்கள் போன்ற புத்திஜீவிகளும் தமிழ் மக்களின் விருப்பங்களை தகர்த்துவிட்டுள்ளனர்.

வாக்குகளை அபகரித்துவருகின்றார்களே தவிர வடக்கு - கிழக்கு பிரிப்பையோ, 13ஆவது திருத்தச் சட்டத்தில் கத்தி கை வைக்கப்படுவதையோ தடுக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

கூட்டமைப்பு 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று முன்னர் கூறிவந்தது. அப்படியாயின் இப்போது 13ஆவது திருத்தத்தில் அரசு கைவைப்பதை யிட்டு கூப்பாடு போடுவது ஏன்?, தமது நிலைப்பாட்டிலிருந்து கூட்டமைப்பு தடுமாறுவது இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் விருப்பங்களுக்காகவா? என்று த.தே.ம.மு கட்சியின் தலைவர் பொ.கஜேந்திரன் அண்மையில் காட்டமான கருத்தை தெரிவித்திருந்தார் என்பதை இவ்வேளையில் சுட்டிக் காட்டுவதும் அவசியமாகவுள்ளது.

அரசாங்கம் 13ஆவது திருத்தத்தில் மாகாணங்கள் இணையும் சரத்தை இல்லா தொழித்து வடக்கும், கிழக்கும் அதிகார அலகுகளாக இணைவதைத் தடுத்தாலும், இலங்கை தமிழர்களின் அரசியலுரிமைப் பிரச்சினையின் ஆணிவேரை அது அழித்துவிடாது.

ஏனைய மாகாணங்கள்போல் இல்லாமல் வடக்கும், கிழக்கும் மொழியாலும், உணர்வுகளாலும், கொடுக்கல் வாங்கல்களாலும், உறவுகளாலும், இரத்தப் பிணைப்பாலும், சிந்தனையாலும் பிரிக்க முடியாதவர்களாக பரம்பரை பரம்பரையாக வாழ்பவர்கள். இவ்வாறான தொடர்பையும், உறவையும் எவராலும், எதனாலும் பிரித்துவிடமுடியாது.

வடக்கு, கிழக்கை இணைய விடாமல் பிரித்துவிட்டால் இரண்டு மாகாணத் தொடர்புகளும், மக்களும் பிரிந்துவிடுவார்கள், தத்தமது வேலையை பார்த்துக் கொண்டு போய்விடுவார்கள் என்று யாராவது நினைத்தால் அது அவர்களின் அறியாமையாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களிடையே அரசியலும், அபிலாஷைகளும், நோக்கங்களும் ஒன்றேயாகும். அதை நியாயமாகவும் கௌரவமாகவும் தீர்வுகளை வழங்கியும், வாங்கியும் வெல்லமுடியுமே தவிர பிரித்து ஆளுவதாலும், அடக்கியாளுவதாலும் ஒருபோதும் சாதித்துவிட முடியாது என்பதே தமிழ் மக்களின் தற்போதைய ஏமாற்றங்கள் வெளிப்படுத்தும் செய்தியாகும்.

இப்போதுகூட தமிழ் மக்கள் விழித்துக் கொள்ளாமலும், தொடர்கின்ற தவறை திருத்திக் கொள்ளாமலும் தீர்மானங்களை எடுப்பார்களேயானால், 13ஆவது திருத்தம் இல்லாமலே போகின்றபோதும் அதைத் தடுக்க முடியாமல் ஒப்பாரி வைக்கவே முடியும்.

இன்னொரு ராஜிவ் காந்தி இலங்கை தமிழர்களுக்காக அணி வகுப்பில் அடிவேண்டவோ, வடக்கு கிழக்கை இணைக்கும் ஒப்பந்தம் ஏற்படுத்தவோ பிறக்கப் போவதில்லை.

அமெரிக்காவும், இந்தியாவும், ஐ.நா.வும் வரும்வரை இங்கே எதுவும் காத்திருக்காது. நமக்காக நாமே முதலில் தீர்க்கதரிசனமாக முடிவு செய்யவேண்டும் என்பதை வரலாறு மீண்டும் நமக்கு வலியுறுத்தி நிற்கின்றது.



# உலக அகதிகள் தினம்

தொகுப்பு வேணுகிருஷ்ணா

இலங்கைத் தமிழ் அகதிகள். முன்னாள் காலனிய எஜமானான பிரிட்டனுக்கு சென்றபோது, அகதி தஞ்சம் கொடுக்காவிட்டாலும், நாட்டினுள் இருந்து வேலை செய்ய அனுமதி கிடைத்தது. இது காலப்போக்கில் உழைப்பை சுரண்ட வழிவகுக்கும் வதிவிடப்பத்திரம் கொடுக்கும் சட்டம் கொண்டுவர உதவியது. இங்கிலாந்து அரசு ஆரம்பத்தில் மூன்றே மூன்று ஈழத் தமிழருக்கு மட்டுமே அகதி அந்தஸ்து வழங்கியது. அதில் ஒருவர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் மகன் காண்டீபன். எழுபதுகளில் யாழ். நகரில் இடம்பெற்ற, மேயர் துரையப்பாவின் கொலைதான் தமிழீழ போராட்ட வரலாற்றின் முதலாவது அரசியல் கொலை. கொலைச் சம்பவம் தொடர்பாகத் தேடப்படும் நபர்கள் சிலரின் படங்களை போஸ்டராக அடித்து இலங்கை பொலிஸ் துறை நாடு முழுவதும் ஒட்டியிருந்தது. அதில் காண்டீபனின் பெயரும் இருந்தது. அந்த போஸ்டரை வைத்துத்தான், காண்டீபனுக்கு அகதி அந்தஸ்து கிடைத்தது எனும் ஒரு கதையை அப்போது பலர் அறிவர்.

**ஜூன்** 20ஆம் திகதி உலக அகதிகள் தினமாக நினைவு கூரப்படுகிறது. ஆரம்பத்தில் ஜூன் 20 ஆபிரிக்க அகதிகள் தினமாகத்தான் (Africa Refugee Day) நினைவு கூரப்பட்டது. பின்னர் இத்தினமானது 2000ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் (United Nations General Assembly) சிறப்புத் தீர்மானம் ஒன்றின்படி, உலக அகதிகளுக்கான தமது ஆதரவினை வெளிப்படுத்தும் முகமாக, உலக அகதிகள் தினமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பல்வேறு மோதல்களுக்குள் சிக்கி அகதிகளாக தாம் வசிக்கும் நாட்டினுள்ளும், பிற நாடுகளுக்குள்ளும் இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களுக்குள்ளாகி வாழ்ந்துவரும் அகதிகள் பற்றிய விழிப்புணர்வினை உலக மக்களிடத்தில் ஏற்படுத்துவதே இத்தினத்தின் முக்கியமான நோக்கமாகும். "உறவுகளை இழந்த மனிதன் அனாதை! சொந்த தேசத்தை இழந்தவன் அகதி!" எனக் கூறுவார்கள். இங்கு தேசம் எனும்போது தான் வாழும் பிரதேசத்தை விட்டு அகன்ற நிலையையும் சுட்டிக்காட்டுவதாக இருக்கும். எனவே, அகதி எனும் பதத்துக்கு ஒரு திட்டவட்டமான வரையறை விதிக்க முடியாது. இத்தினத்தில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு போர்களால் அரசியல், சமூகச் சூழல்களால், இயற்கை அனர்த்தங்களால் அகதிகளாக அல்லலுறும் அகதிகளை நினைவுகூரும் வகையில் கூட்டங்கள், பேரணிகள், கருத்தரங்குகள், இசை நிகழ்ச்சிகள், நினைவஞ்சலி நிகழ்வுகளெனப் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

## யார் அகதி?

"அகதி என்பது, இனம், சமயம், தேசிய இனம், குறிப்பிட்ட சமூகக் குழுவொன்றில் உறுப்பாண்மை, அரசியல் கருத்து என்பவை காரணமாகக் குற்றம் சாட்டப்பட்டவரும் அவருடைய நாட்டுக்கு அல்லது சொந்த இடத்துக்கு வெளியில் இருப்பவரும் அந்நாட்டினுடைய பாதுகாப்பைப் பெற முடியாத அல்லது பயம்காரணமாக அவ்வாறான பாதுகாப்பை நாட விரும்பாதவருமான" ஒருவரைக் குறிக்கும்.

1951ஆம் ஆண்டின் அகதிகளின் நிலை தொடர்பான ஐக்கிய நாடுகள் உடன்பாடு அகதிகள் பற்றி மேல் குறிப்பிட்டவாறு வரைவிலக்கணம் தருகிறது. அகதி என்ற கருத்துரு, மேற்படி உடன்பாட்டின் இணைப்புக்கள் மூலமும், ஆபிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்காவிலும் நடைபெற்ற பிரதேச மாநாடுகளிலும் விரிவாக்கம் பெற்றது.

இதனால், சொந்த நாட்டில் இடம்பெறும் போர் அல்லது வேறு வன்முறைகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறுபவர்களும் அகதிகள் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தன்னை அகதியாக ஏற்றுக்கொள்ளும்படி விண்ணப்பிக்கும் ஒருவர், அகதித் தகுதிகோருபவர் எனப்படுகின்றார். அகதிகளின் நிலை தொடர்பான ஐக்கிய நாடுகள் உடன்பாடு என்பது அகதி என்பவர் யார் என்பதையும், அவர்களின் உரிமைகளையும், புகலிடம் கொடுத்த நாடுகளின் பொறுப்புக்களையும் வரையறை செய்த அனைத்துலக உடன்பாடு ஆகும். யார் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டார் (போர்க் குற்றவாளிகள்) என்பதையும் இது வரையறை செய்கிறது.

இது டிசெம்பர் 4, 1952 அன்று டென்மார்க்கில் முதலில் ஏற்புறுதி செய்யப்பட்டது. இதுவரை 147 நாடுகள் இந்த உடன்பாட்டை உறுதிசெய்துள்ளன.

## அதிகரிக்கும் உலக அகதிகள் தொகை

இரண்டாவது உலகப் போரைத் தொடர்ந்து, கிழக்கு ஐரோப்பாவில் இருந்து ஏராளமானவர்கள் வெளியேறியதைத் தொடர்ந்தே அகதிகள் ஒரு சட்டபூர்வமான குழுவாக வரையறுக்கப்பட்டனர். அகதிகள் பாதுகாப்புத் தொடர்பான ஒருங்கிணைப்பு வேலைகளைச் செய்வது, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையம்- United Nations High Commission for Refugees (UNHCR) ஆகும். இந்நிறுவனம் 2006 இல் உலகிலுள்ள மொத்த அகதிகள் தொகையை 8.4 மில்லியன் எனக் கணக்கிட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்க அகதிகள் மற்றும் குடிவருவோருக்கான குழு உலகின் மொத்த அகதிகள் தொகை 12,019,700 என்கிறது. அத்துடன் உள்நாட்டிலேயே அகதியானோர் உட்பட போரினால் இடம்பெயர்ந்த மொத்த அகதிகள் 34,000,000 எனவும் இக்குழு மதிப்பிட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பி.பி.சி உலக சேவை வெளியிட்ட ஒரு அறிக்கையின்படி, மோதல்கள் மற்றும் சட்டத்துக்கு புறம்பான துன்புறுத்தல்கள் காரணமாக உலகில் சுமார் 42 மில்லியன் மக்கள் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறியுள்ளதாகவும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிலையம் மதிப்பிட்டுள்ளது என செய்தி வெளியிட்டிருந்தது. தற்போதைய மத்திய கிழக்கு போர் நிலைவரம் காரணமாக அகதிகள் தொகை மேலும் நாற்பது இலட்சத்தால் அதிகரித்துள்ளது.

ஆப்கானிஸ்தான், சூடான், ஈராக் போன்ற நாடுகளில் மோசமடைந்துவரும் பாதுகாப்பு நிலைமை காரணமாக குறைந்த அளவிலானோரே தமது குடியிருப்புகளுக்கு திரும்ப முடிந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தெரிவிக்கின்றது. இலங்கையில் விடுதலைப் புலிகள் இராணுவரீதியாக தோற்கடிக்கப்பட்டதும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட்டிருக்குமானால் இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் அகதிகளாகச் சென்ற தமிழர்களில் கணிசமானோர் நாடு திரும்பியிருப்பர். ஆனால் இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு படகு அகதிகளாகச் சென்று அல்லற்படும் அவலங்களும் கண்ணீர்க்கதைகளும் இன்னமும் செய்திகளாக வருகின்றன.

## அகதிகள் பராமரிப்பு

அகதிகளை பராமரிப்பதற்கான பிரதான பொறுப்பு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் மீதே சுமத்தப்படுவதாகவும் உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிடுகின்றது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது தென்னாபிரிக்காவே அதிகளவான தஞ்சமடைவோரின் விண்ணப்பங்களை பெறுகின்றமையும் இந்த எண்ணிக்கை அமெரிக்காவைவிட நான்கு மடங்கு அதிகமானதென்பதும் குறிப்பிடத்தக்கது. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையம் United Nations High Commission for Refugees (UNHCR) அல்லது ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரகம் என்னும் ஐக்கிய நாடுகளின் உப அமைப்பானது அகதிகளைப் பாதுகாப்பதற்கும், ஆதரவளிப்பதற்கும், அரசின் அழைப்பினாலோ அல்லது ஐக்கிய நாடுகளின் அழைப்பினால் அகதிகள் மீளத்திரும்புவதற்கோ அல்லது மீள்குடியமர்விற்கோ உதவுவதைக் கருப்பொருளாகக் கொண்டதாகும். 14 டிசெம்பர் 1950இல் ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பின் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் அமைந்துள்ளது. இவ்வமைப்பானது ஐக்கிய நாடுகளின் உதவி மற்றும் மீள்குடியேற்ற நிர்வாகம் மற்றும் சர்வதேச அகதிகள் அமைப்பின் வழிவந்த அமைப்பாகும். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் 1954லும் 1981லும் சமாதானத்திற்கான நோபல் பரிசினை வென்றுள்ளது. இவ்வமைப்பானது உலகளாவிய அகதிகள் பிரச்சினையை முன்னிறுத்தி மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் செயற்பட்டு அகதிகளைப் பாதுகாத்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவருகின்றது.

## அகதிகள் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு என்ன?

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையம் United Nations High Commission for Refugees (UNHCR) வரையறுத்துள்ளபடி, அகதிகள் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுகள், அகதிகள் தாமாகவே சொந்த நாட்டுக்குத் திரும்புதல், குடியேறிய நாட்டிலேயே கலந்துவிடுதல், மூன்றாம் நாடு ஒன்றில் குடியேற்றுதல் என்பனவாகும். 2005ஆம் ஆண்டு நிலையின்படி மிக அதிகமான அகதிகள், பாலஸ்தீனப் பகுதிகள், ஆப்கனிஸ்தான், ஈராக், மியன்மார், சூடான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆகும். உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரை அதிகமாகக் கொண்ட நாடு சூடான் எனப்படுகின்றது.

இலங்கையிலும் அகதிகள் பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்தது. இலங்கையில் உள்நாட்டினுள்ளே எத்தனை பேர் அகதிகளாக உள்ளார்கள் என்பதும் வெளிநாடுகளிலே எத்தனை இலங்கையர் அகதிகளாக உள்ளார்கள் என்பதும் பற்றிய சரியான புள்ளிவிபரம் வெளியிடப்படாவிடினும்கூட, கணிசமான எண்ணிக்கையினர் அகதிகளாக இருக்கலாம் எனக்கருத இடமுண்டு. 1983 கறுப்பு ஜூலை இனவன்முறைக் கலவரத்துடன் இலங்கையில் அகதிகள் உருவாகத்தொடங்கினர். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து ஏப்ரல் 2006 முதல் 2009ம் ஆண்டு போரின் இறுதிவரை வரை சில இலட்சம் பேர் தமிழர், முஸ்லிம்கள் இடம்பெயர்ந்தனர்.

2004ம் ஆண்டு ஆழிப்பேரலையின் போது 3,50,000 தமிழர் இடம்பெயர்ந்துள்ளனர். பெருந்தொகையான பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தற்காலிக முகாம்களில்தான் வசித்தனர்.

கடந்த 30 ஆண்டுகளில் இலங்கையில் அனைத்துத் தமிழர்களுமே ஒரு முறையேனும் இடப்பெயர்வுக்குள்ளாகி இருக்கின்றனர். மேலும், 1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளால் கொழும்பிலிருந்தும் வடக்கிலிருந்தும் பெருந்தொகையான தமிழர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர். அதேநேரம், 1990களில் வடபுலத்திலிருந்து புலிகளால் முஸ்லிம் மக்கள் அப்பிரதேசத்திலிருந்து துரத்தப்பட்டதிலிருந்து அவர்களில் பல்லாயிரம் பேர் அகதிகளாகினர். எமது இலங்கையில் 30 ஆண்டு யுத்தத்தால் சொந்த மண்ணிலேயே அகதிகளானோரும், அகதிகளாகப் புலம்பெயர்ந்தோரும் அநாதைகளானோரும் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே பல ஆண்டுகளாக நடைபெற்ற யுத்தத்தினால் இலங்கையில் இருந்து தமிழர்கள் அகதிகளாக இந்தியாவின்


தொழில்நுட்பம்



## வந்துவிட்டது குட்டீஸுக்கான இணையத் தேடல்

உங்கள் குழந்தைகள், இணையத்தை உலாவர உட்கார்ந்தால், உங்களுக்கு பகீர் என்கிறதா? அவர்கள் பார்க்கக் கூடாத இணையத்தளங்கள் தப்பித் தவறிவந்துவிடப் போகிறதே என்று பதறுகிறீர்களா? ஏற்கனவே இந்த மலரில், இத்தகைய சூழலுக்கு சிறுவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் முறைகள் குறித்து, விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டம் மற்றும் பிரவுசர்கள் கொடுக்கும் பாதுகாப்பு வழிகள் குறித்து பார்த்துள்ளோம். அண்மையில், உங்கள் குழந்தைகள் பாதுகாப்பாகப் பயன்படுத்தக் கூடிய தேடுதல் தளம் ஒன்றைப் பார்க்க நேர்ந்தது. அதன் இணைய முகவரி இது குழந்தைகளுக்காகவே வடிவமைக்கப்பட்டு இயங்கும் தேடுதளம்.

இந்த தளம் Google Custom Search மற்றும் Google Safe Search தளங்களைப் பயன்படுத்தி, குழந்தைகளுக்குப் பாதுகாப்பான இணையத் தேடலைத் தருகிறது. குழந்தைகள் காணக்கூடாத தளங்களின் பட்டியலைத் தன்னிடத்தே வைத்துக்கொண்டு, அவற்றை விலக்கி, பார்க்கக் கூடிய தளங்களில் உள்ள தகவல்களை மட்டும் தருகிறது. குழந்தைகள் ஆர்வம் காட்டும் வீயங்கள் குறித்த தளங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. இந்த தளத்தில் சிறுவர்களுக்கான கேம்ஸ், தகவல் பக்கங்கள் மற்றும் வண்ணம் தீட்டி மகிழப் பக்கங்களும் தரப்பட்டுள்ளன. ஒருமுறை இதனைப் பார்த்துவிடுங்கள்.




## Mac கணினிகளுக்கான இலவச அன்ரிவைரஸை பெற்றுக்கொள்ள...!

அப்பிள் நிறுவனத்தின் தயாரிப்பான Mac இயங்குதளங்களைக் கொண்ட கணினிகள் தனித்துவம் வாய்ந்தவை. இதன்காரணமாக அனைத்து விதமான கணினி மென்பொருட்களையும் இதில் நிறுவிப் பயன்படுத்த முடியாது என்பது யாவரும் அறிந்ததே.

இதற்கென கிடைக்கும் மென்பொருட்களில் அநேகமானவை இலவசமாகக் கிடைப்பதில்லை. இவ்வாறிருக்கையில் ClamXav எனும் அன்ரி வைரஸ் புரோகிராமானது முற்றிலும் இலவசமாகக் கிடைக்கின்றது. இம்மென்பொருளானது விரைவாகக் செயற்படக் கூடியதாகவும், இலகுவான பயனர் இடைமுகத்தினைக் கொண்டதாகவும் காணப்படுவதுடன் துல்லியமான முறை யில் வைரஸ் புரோகிராம்களை கண்டு அவற்றினை நீக்கக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.




## செல்போன் பாவனையாளர் கவனத்திற்கு...

செல்போன் டவர்களில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சால் சிட்டுக்குருவி இனம் அழிந்துவருகின்றன. செல்போன் டவர்களுக்கு மட்டும்தான் கதிர்வீச்சு உள்ளதா? செல்போனை சட்டைப்பையிலும் இடுப்புக்கு அருகிலும் வைத்துக்கொண்டு செல்பவர்களுக்கு எச்சரிக்கையை அளிக்கிறார்கள் வல்லுநர்கள்.

அது, செல்போனில் இருந்தும் வெளிப்படும் கதிர்வீச்சு, மனிதனையும் பாதிக்கும் என்பதுதான்.

இந்தக் கதிர்வீச்சை எப்படி அளக்கிறார்கள்? இதனை 'எஸ்.ஏ.ஆர். வேல்!' என்கிறார்கள். இப்படிச் சொன்னதும், ஏதோ இது செல்போனின் விலை மதிப்பு என்று நினைக்காதீர்கள். 'ஸ்பெசிபிக் அப்சர்ப்'ன் ரேட்' என்பதன் சுருக்கமே 'எஸ்.ஏ.ஆர்.' என்பது. அதாவது ஒரு செல்போன் தொடர்பில் இருக்கும் போது, அதில் இருந்து வெளியாகும் 'எலக்ட்ரோ மேக்னடிக்' அலை கள் அல்லது ரேடியோ கதிர்கள் உடலுக்குள் ஊடுருவும் அளவை நிர்ணயிப்பதே 'எஸ்.ஏ.ஆர்'.

இது செல்போனில் இருந்து வெளியாகும் சக்தியை அல்லது கதிர்வீச்சை உடல் உட்கிரகிக்கும் அளவைக் குறிப்பது. இது நாம் பயன்படுத்தும் செல்போனின் 'வோட்ஸ் பெர் கிலோ கிராம்' என்பதை அடிப்படையாக வைத்து மதிப்பிடப்படுகிறது. 'எஸ்.ஏ.ஆர். வேல்!' குறைந்திருந்தால், உங்கள் செல்போன் மிகவும் பாதுகாப்பானது. குறைந்த அளவு கதிர்களே செல்போனில் இருந்து வெளியேற்றப்பட்டு அது உடலுக்குள் ஊடுருவுகிறது என்பதைக் குறிக்கிறது.

ஒவ்வொரு செல்போனும் செல்பேசி டவர்களுடன் இணைக்கப்படும்போது, அதில் இருந்து ரேடியா கதிர்கள் வெளியாகின்றன. இந்தக் கதிர்கள் உடலில் உள்ள திசுக்களால் ஈர்க்கப்படுகின்றன. இது எந்தள வில் இருக்கிறது என்பதைக் குறிக்கும் எஸ்.ஏ.ஆர். வேல்!வை வெளிநாடுகளில் உள்ள பல முன்னணி செல்போன் நிறுவனங்கள், செல்பேசியின் விவரப் பக்கத்தில் உண்மையாகவே குறிப்பிடுகின்றன. செல்பேசி நிறுவன இணைய தளங்களில் அதுபற்றிய விவரத்தில் ஒவ்வொரு செல்பேசிகளின் எஸ்.ஏ.ஆர். மதிப்பும் தவறாமல் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை வைத்து பாதுகாப்பான செல்பேசிகளைத் தேர்வுசெய்து நாம் வாங்கமுடியும்.

செல்பேசி என்பது சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்புதான் பிரபலமாகத் துவங்கியது. அதனால் இதன்மூலம் அடையும் பாதிப்புகளைக் கண்கூடாக இன்னும் காணவில்லை. ஆனால், ஓர் எச்சரிக்கையாக, செல்பேசிகளில் இருந்து வெளியாகும் அதிகப்படியான கதிர்வீச்சுக்களால், அதனைப் பயன்படுத்தும் மனிதர்களுக்கு சாதாரண சரும நோய் முதல், புற்றுநோய் வரை ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

செல்பேசிகளின் பயன்பாட்டைக் குறைத்துக்கொள்ளுங்கள் என்று உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தும் அளவுக்கு இதன் பாதிப்புகள் குறித்து இப்போது விழிப்புணர்வு ஏற்பட்டுவருகிறது.

செல்போனை வாங்கச் செல்லும்போது அதிகப்படியான பயன்பாடு, சேமிக்கும் திறன், புதிய மொடல், விலை குறைவு எனப் பல்வேறு வி'யங்களைப் பார்த்துப் பார்த்து வாங்கும் நாம், இனி எஸ்.ஏ.ஆர். மதிப்பையும் பார்த்து, உடலுக்குத் தீமை பயக்காத செல்பேசிகளைத் தேர்வுசெய்து வாங்க வேண்டும்.

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே


இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.



# பஞ்சு, சிலந்தி, மேகம்!

**முன்னொரு** காலத்தில் ஜப்பானின் ஒரு பகுதியில் யோஸகோ எனும் பெயருடைய இளைஞன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு விவசாயி.

ஒருநாள், அவன் தனது வயலில் வேலை செய்து கொண்டிருந்தான். அப்போது பாம்பு ஒன்று ஒரு சிலந்தியைப் பிடித்து உண்ண முயற்சித்துக் கொண்டிருந்தது. யோஸகோவுக்கு சிலந்தி மீது இரக்கம் ஏற்பட்டது. உடனே அவன் தனது தடியை எடுத்துக்கொண்டு ஓடிச்சென்று அந்தப் பாம்பை விரட்டியடித்தான். உயிர் தப்பிய சிலந்தி விவசாயிக்கு நன்றிக்கடன் பட்டதாய், தனது தலையைச் சாய்த்து அவனுக்கு நன்றி செலுத்திவிட்டு, சென்று மறைந்தது.

இது நடந்து சில நாட்கள் ஆகியிருக்கும். ஒருநாள் யோஸகோவின் வீட்டுக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அத்துடன் யாரோ மெல்லிய குரலில் ஐயா என்று அழைப்பதும்கேட்டது.

கதவைத் திறந்து பார்த்தவனுக்கு வியப்பு ஏற்பட்டது. அங்கே ஓர் அழகிய பெண் நின்று கொண்டிருந்தாள்.

அவள், "உங்களுக்கு ஆடை நெய்ய ஆள் தேவை என்று கேள்விப்பட்டேன். தயவுசெய்து நான் உங்கள் வீட்டில் இருக்க அனுமதி கொடுங்கள். நான் உங்களுக்குத் துணி நெய்து கொடுப்பேன்" என்றாள்.

யோஸகோவுக்கு அவனுடைய தறியில் ஆடை நெய்ய உண்மையிலேயே ஆள் தேவை இருந்தது. அதனால் அவன் மிகுந்த சந்தோசத்துடன் அந்தப் பெண்ணைத் தனது வீட்டில் தங்கிக்கொள்ள அனுமதித்தான்.

தறி இருந்த அறைக்கு அவளை அழைத்துச் சென்று காட்டினான். அவளும் உடனே ஆடை நெய்ய ஆரம்பித்தாள்.

அன்று இரவு தறி இருந்த அறைக்கு யோஸகோ சென்றான். எவ்வளவு துணி நெய்திருக்கிறாள் பார்க்கலாம் என்று யோசித்தபடி சென்றவனுக்கு வியப்பு காத்திருந்தது.

அவன் வைத்திருந்த நூல்கள் எல்லாவற்றையும் நெய்து முடித்திருந்தாள் அந்தப் பெண்.

ஒரே நாளில் இவ்வளவு துணியை நெய்து முடிக்க யாராலும் முடியாது என்பது அவனுக்குத் தெரியும்.

அதனால் அந்தப் பெண்ணை விசாரித்தான். அந்தப் பெண் அவன் கேட்ட கேள்விக்கு அளித்த பதில் விந்தையாக இருந்தது.

"நீங்கள் என்கிட்ட இந்த மாதிரி கேள்விகளெல்லாம் கேட்கக்கூடாது. இனிமேல் இந்தத் தறி அறைக்குள் என் அனுமதியில்லாமல் நீங்கள் வரக்கூடாது" என்றும் கூறினாள்.

இதைக் கேட்டு, சரியென்று தலையாட்டினான் யோஸகோ.

இருந்தாலும் அவள் ஏன் அப்படிச் சொல்கிறாள் என்ற எண்ணம் அவனுக்குள் சுழன்று கொண்டேயிருந்தது. ஒருநாள், அவளுக்குத் தெரியாமல் அந்த அறைக்குள் எட்டிப் பார்த்தான். அங்கே அவன் பார்த்த காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது.

அங்கே அந்தப் பெண்ணுக்குப் பதிலாக ஒரு பெரிய சிலந்தி துணி நெய்து கொண்டிருந்தது. அது பஞ்சை விழுங்கி நூலாக்கித் தனது வாயிலிருந்து வெளிக்கொண்டு வந்து, தறியில் நுழைத்து துணி நெய்து கொண்டிருந்தது.

தொடரும்...

## வாரம் ஒரு திருக்குறள்



குறிப்பறிதல்

**குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்**
**என்ன பயத்தவோ கண்.**

(முகம் கண் இவற்றின்) குறிப்புக்களால் உள்ள குறிப்பை உணராவிட்டால் ஒருவனுடைய உறுப்புக்களுள் கண்கள் என்ன பயன்படும்.

குறள்:705



## பா...ம்பு..!

உலகிலேயே மிகப் பெரிய பாம்பு அனகொண்டா என்று உங்களுக்கெல்லாம் தெரியும். திரைப்படங்களில்கூட இதைப் பார்த்திருப்பீர்கள். இதன் நீளம் 12 மீற்றர் இருக்கும். எடை 130 கிலோ. ஒரு பெரிய சிறுத்தையைக்கூட இது தனது உடலால் இறுக்கிக்கொன்றுவிடும் ஆற்றல் உள்ளது. இதன்வாயில் சுரக்கும் வழவழப்பான திரவத்தால்தான், இரை எவ்வளவு பெரிதாக இருந்தாலும் வழுக்கிக்கொண்டு வயிற்றுக்குள் செல்கிறது.

அனகோண்டாக்கள் அதிகம் தென்படுவது தென் அமெரிக்காவில். இவை நீரிலும் நிலத்திலும் வாழ்பவை. இவை சுமார் 30 ஆண்டுகள் வரை உயிர் வாழும். இவை மாதத்துக்கு ஒன்று அல்லது இரண்டு முறை மட்டுமே உணவு உட்கொள்ளும்.

பெரிய இரையை உட்கொண்டுவிட்டால் அப்புறம் மூன்று மாதங்களுக்கு "நோ வேட்டை"!

## உலகின் மிகப் பெரிய ஏரி!

உலகின் மிகப் பெரிய ஏரி கஸ்பியன் ஏரி என்று அறிந்திருப்பீர்கள். ஆனால் அதில் கடல் நீர் உள்ளது.

நல்ல நீர் ஏரிகளில் கொள்ளளவிலும் ஆழத்திலும் மிகப் பெரிய ஏரி ரஷ்யாவின் சைபீரியாவிலுள்ள பைகால் ஏரி.

பைகால் என்ற ரஷ்ய மொழிச் சொல்லுக்கு 'வளம் மிக்க' என்று பொருள்.

விண்வெளியில் இருந்து பார்த்தால் பாதி திறந்திருக்கும் ஊதா நிறக் கண்ணைப் போன்ற தோற்றத்தில் இந்த ஏரி காட்சியளிக்கும்.

உலகில் உள்ள மொத்த நீரில் 20 சதவீதம் பைகால் ஏரியில் உள்ளது. இந்த ஏரியின் ஆழம் ஆண்டு

தோறும் அதிகரித்து வருகிறது என்கிறார்கள். இந்த ஏரியின் அடியில் வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. ஓர் ஆண்டில் சுமார் 5 மாதங்களுக்கு இந்த ஏரி உறைந்து காணப்படும்.

யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னங்களில் ஒன்றாக இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.







தீப்பெட்டி ஒன்றில் 48 குச்சிகள் உள்ளன. அதை 3 சமமற்ற குவியலாக கொட்டப்பட்டன. 2 ஆவது குவியலில் எவ்வளவு குச்சிகள் உள்ளதோ, அதே அளவு குச்சிகள் 1 ஆவது குவியலிலிருந்து எடுத்து 2 ஆவது குவியலுடன் சேர்க்கப்படுகின்றது.

3 ஆவது குவியலில் எவ்வளவு குச்சிகள் உள்ளதோ, அதே அளவு குச்சிகள் 2 ஆவது குவியலிலிருந்து எடுத்து 3 ஆவது குவியலுடன் சேர்க்கப்படுகின்றது.

பின்னர் 1 ஆவது குவியலில் எவ்வளவு குச்சிகள் உள்ளதோ, அதே அளவு குச்சிகள் 3 ஆவது குவியலிலிருந்து எடுத்து 1 ஆவது குவியலுடன் சேர்க்கப்படுகின்றது.

இப்படி சேர்க்கப்பட்டவுடன் 3 குவியல்களிலும் குச்சிகள் சமமான எண்ணிக்கையை காட்டின. அப்படியானால் ஆரம்பத்தில் ஒவ்வொரு (சமமற்ற) குவியல்களில் இருந்த குச்சிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

## பட்டின் தாயகம்




சீன தேசத்தின் சக்கரவர்த்தி ஹுவாங்-டை என்பவரின் மனைவி மகாராணி ஒருமுறை கையில் தேநீர்க் கோப்பையுடன் அரண்மனைத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார்.

சற்றே ஓய்வு எடுக்க அங்கிருந்த இருக்கை ஒன்றில் அமர்ந்தார். கையில் சூடான தேநீர்க் கோப்பை. அப்பொழுது அந்தக் கோப்பையில் மேலிருந்து ஏதோ ஒரு பொருள் விழுந்தது. அது என்னவென்று அவர் உற்றுப் பார்க்க, நிலக்கடலை அளவில் ஒரு பொருளின் பகுதிகள் கரைந்து நூல் நூலாகக் கோப்பைக்குள்ள சுழன்று கொண்டிருப்பதைக் கவனித்தார். மேலே பார்த்தார். அங்கிருந்த மல்பெரி மரத்திலிருந்துதான் அந்தப் பொருள் விழுந்தது என்பதைப் புரிந்துகொண்டார். அரசரிடம் இதுபற்றிக் கூறினார்.

பிறகென்ன? அரண்மனை அறிஞர்கள் எல்லோரும் சேர்ந்து மல்பெரி மரத்தை ஆராய்ச்சி செய்தார்கள். மரத்தில் பட்டுப்புழுக்கள் கூடுகட்டி இருப்பது தெரியவந்தது. நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு இந்தப் பட்டுப்புழு கூடு சூடான நீர்பட்டதும் நூல் வடிவம் எடுக்கிறது என்பதைக் கண்டறிந்தார்கள்.

அதன்பிறகு மடமடவென்று வேலைகள் நடந்தன. தானாக வளர்ந்தது, முறையாக வளர்க்கப்பட்டது. சீனக் கைவினைஞர்கள் இந்தப் பட்டுப்புழுவிலிருந்து நூல் எடுக்கும் வித்தையைக் கற்றுக்கொண்டார்கள். பட்டின் அத்தியாயம் தொடங்கிற்று.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02.07.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.997**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 995**

க.நவமதி, அல்லின் வீதி, காரைநகர்.

பரிசுக்குரியவர்: 995

பாராட்டுக்குரியவர்கள்

01. சி.அபிரா, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
02. யூ.வர்ஷிக்கா மிலேனியா, தோணிக்கல், வவுனியா.
03. எம்.எம். அப்துல்லாஹ், நிவ்எல்பிட்டிய கெலிஓயா.
04. ப.லஜீபன், 07ஆம் வட்டாரம், நயினாதீவு.
05. செ.கவிந்தா, கல்வியங்காடு, கோப்பாய்.
07. ஆர்.மெடோனா, யாழ்ப்பாணம்.
08. எம். சியாகரன், குமுளமுனை, முல்லைத்தீவு.

எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

162

மையாதீன் அணிந்திருந்த நகைகளும், அவள் சகோதரி அணிந்திருந்த நகைகளும்கூட விட்டுவைக்கப்படவில்லை.

மையாதீனின் மனைவியையும் சகோதரியையும் அறை ஒன்றுக்குள் போட்டுப் பூட்டிவிட்டு அவர்கள் சென்றனர். நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த களஞ்சியப் பகுதிக்கும் தீ வைத்தாள் பூலான்.

மையாதீனைக் கொல்வதை

உத்தமம்."

"ஓ.கே.. உங்கள் முயற்சி பலிக்கட்டும். என் வாழ்த்துக்கள்." என்றார் பிரதமர் இந்திரா காந்தி.

எப்படியாவது பூலான்தேவியை சரணடைய வைத்துவிடலாம் என்ற நம்பிக்கையுடன் காரியத்தில் இறங்கினார் சதுர்வேதி.

பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்து விட்டு வந்த பின்னர் புத்துணர்ச்சியுடன் இருந்தார் ராஜேந்திர சதுர்வேதி.

சதுர்வேதிக்கு கிடைத்த பிர பலம் உத்தரப் பிரதேச பொலிஸ் அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை. மத்திய பிரதேச பொலிசாரால் முடிந்த காரியத்தை உங்களால் ஏன் செய்ய முடியவில்லை? என்று மேலிடத்தில் கேட்டுத்துளைத்தனர்.

மல்கான் சிங் போன்ற உத்தரப்பிரதேச கொள்ளைக்காரர்கள் மத்தியப் பிரதேச பொலிசாரில் நம்பிக்கை வைத்து, அங்கு சென்று சரணடைந்தமை உத்தரப் பிரதேச பொலி சாருக்கு அபகீர்த்தியானது.

அவர்கள் கோபம் முழுக்க சதுர்வேதி மீது தான் பாய்ந்தது. பிரதமர் இந்திரா காந்தியே நேரில் அழைத்துப் பாராட்டி இருக்கிறார் என்று அறிந்ததும் கோபம் பலமடங்கானது.

சதுர்வேதியைப் பழிவாங்க சரியான தருணம் ஒன்றுக்காக உத்தரப் பிரதேச பொலிசார் எதிர்பார்த்திருந்தனர்.

சதுர்வேதிக்கு தன்னைச் சுற்றிப்

அஞ்சாத பெண். நான் சொல்வது என்னவென்றால் இப்படியே, இந்த வாழ்க்கையில் இருந்து சாவதைவிட சரணடைந்த பின்னர் கிடைக்கக்கூடிய மன்னிப்பைப் பெற்று நல்லபடியாக வாழலாம்."

"ஆசை காட்டுகிறாயா கன்ஷியாம்?"

"நான் வற்புறுத்தவில்லை. நன்றாக யோசித்துப் பாருங்கள். மான் சிங் நீயும் தான்! பழிவாங்க வேண்டியவர்கள் யாராவது பாக்கியிருந்தால் அதனை முடித்து விட்டு கூட சரணடையலாம். ஒன்று அவசரமில்லை. யோசியுங்கள். நாளை மறு நாள் மறுபடி வருகின்றேன்!"

கன்ஷியாம் நீண்ட நேரம் சுற்றிச் சுற்றிப் பேசியது பூலான் மனதில் ஊசலாட்டத்தை ஏற்படுத்தியது.

தாங்கள் கூட்டத்தினர் பலர் பிரிந்து போய்விட்டதால் ஏற்பட்ட ஆட்பற்றாக்குறையும் பூலானை கவலைக்கு உள்ளாக்கியிருந்தது.

இந்நிலையில் கன்ஷியாம் கூறிய நியாயங்கள் பூலானை அசைக்கத் தொடங்கியிருந்தன.

அன்றிரவு மான்சிங்குடன் ஆலோசித்தாள். நீண்ட மௌனத்தின் பின்னர் "உயிருக்கு உத்தரவாதமும், தண்டனைக் குறைப்பும் இருந்தால் யோசிக்கலாம்!" என்றான்.

பூலானுக்கு அவன் சொல்வது சரியென்று தான் தோன்றியது. இரவு யோசனையின் மத்தியிலேயே கண்ணயர்ந்தாள்.

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு



விட அவன் செல்வத்தை அழித்தது தான் பொருத்தமான தண்டனை என்று நினைத்தாள் பூலான்.

இனிமேல், தன் பணத்திமிர், அகங்காரம் எதுவும் இல்லாமல் இழந்ததை எண்ணி கவலைப் பட்டுக் கொண்டிருக்கவே அவனுக்கு ஆயுள் போதாமல் இருக்கப்போகிறது.

பூலானுக்கு மனம் முழுக்க சந்தோசம் பரவியிருந்தது.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் பதவியை வி.பி.சிங் துறந்திருந்தார். அர்ஜுன் சிங் முதலமைச்சரானார்.

கொள்ளைக் கோஷ்டிகளைச் சரணடையச் செய்யும் நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதமர் இந்திரா காந்தி அர்ஜுன் சிங்குக்கு அறிவித்திருந்தார்.

மல்கான் சிங் சரணடையக் காரணமாக இருந்த பொலிஸ் அதிகாரி ராஜேந்திர சதர்வேதியை நேரில் அழைத்துப் பாராட்டினார் இந்திரா காந்தி.

"மிஸ்டர் சதர்வேதி, பூலான் தேவியையும் உங்களால் சரணடைய வைக்க முடியுமா? முயற்சித்துப்பாருங்கள். அல்லது பிடித்துக் கொள்ளப்பாருங்கள்!"

சதுர்வேதி பணிவாக மறுத்தர். "பிடிப்பது முடியாத காரியம். 200ற்கு மேற்பட்ட கிராம மக்கள் பூலான்தேவிக்கு ஆதரவாக இருக்கிறார்கள். பூலான்தேவியை அவர்கள் ஒரு நாளும் காட்டிக்கொடுக்க மாட்டார்கள் அவளைப் பற்றிய தகவல்களைப் பெறுவதும் கடினம்."

"ஆகவே....?"

"சரணடைய வைப்பதுதான்

பின்னப்படும் சதிவலை பற்றித் தெரியாது. அவர் தன்னிடம் பிரதமர் ஒப்படைத்த பணியைச் செய்து முடிப்பதில் கண்ணாயிருந்தார்.

பூலான் தேவியுடன் தொடர்பை ஏற்படுத்தக் கூடிய நம்பகரமான ஆளைத் தேடினார் சதுர்வேதி.

விக்கிரம் மல்லா, பாபா ஆகியோரின் கூட்டாளியான கன்ஷியாம் தான் சரியான ஆசாமி என்று தோன்றியது.

மக்கான் சிங்கை சிறையில் சந்தித்து அவனிடம் கன்ஷியாம் பற்றி விபரங்களை பெற்றார் சதுர்வேதி.

கன்ஷியாமை சதுர்வேதி தனியாகத்தான் சென்று சந்தித்தார். ஆயுதம் எதுவும் எடுத்துச் செல்லவில்லை. கன்ஷியாம் முதலில் தயங்கினான். சதுர்வேதியின் அணுகுமுறைகள் எற்படுத்திய நம்பிக்கையின் காரணமாக அவரை நம்பினான்.

"பூலானைச் சந்தித்துப் பேசிவிட்டு வந்து விபரம் கூறுகிறோன். எக்காரணம் கொண்டும் பொலிஸ் என்னைத் தொடரக்கூடாது. என்னை வைத்து பூலானைப் பிடிக்க முயலவும் கூடாது!"

சதுர்வேதி சிரித்து "கான்ஷியாம் என்னை நீ நூற்றுக்கு நூறு வீதம் நம்பலாம்!"

பூலான் தேவிக்கு கன்ஷியாமை நம்பலாமா கூடாதா என்று தெரியவில்லை. மான் சிங்தான் நம்பலாம் என்று உத்தரவாதப்படுத்தினான்.

கன்ஷியாம் பூலானின் மனதை மாற்றும் விதமாக பல காரணங்களை கூறினான்.

"இப்படியே இருந்துவிடுவதால் கடைசியாக என்னாகப் போகிறது? என்றோ ஒருநாள் சாவு நிச்சயம்!" என்றான்.

பூலான் அலட்சியமாக புன்னகைத்து, "அது எல்லோருக்கும் நிச்சயமானது தானே? எங்கிருந்தாலும் நிச்சயிக்கப்பட்ட நாளன்று சாவு வந்தேயாகும்!" என்று தத்துவம் பேசினாள்.

"எனக்குத் தெரியும்- நீங்கள் சாவுக்கு

உறக்கத்தில் கண்ட கனவு பூலானை தூக்கிவாரிப் போட்டது.

இரத்தம் தோய்ந்த உடைகள் பூலானின் கனவில் தோன்றின. யாரோ ஓடுகிறார்கள் . பின்னர் சூடுபட்டு விழுகிறார்கள். இரத்தம் எங்கும் இரத்தம்....! பூலான் எழுந்து மான் சிங்கை உலுப்பினாள்.

மான் சிங் வாரிச்சுட்டிக் கொண்டு எழுந்து , "என்ன?" என்றான் . "கனவு" என்றாள். கண்ட காட்சியைச் சொன்னாள்.

"வீண் பிரமை" என்றான். முதுகை தடவி விட்டான். அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"நான் திருந்தி வாழ இந்தச் சமூகம் அனுமதிக்குமா?" என்று கேட்டாள். குரலில் கலவரம் இருந்தது. நம்பிக்கையீனம் கண்களில் தெரிந்தது.

முத்தமிட்டான். அவன் முத்தம் மூடியிருந்த இமைகளையும் தாண்டிக் குளிர்ந்தது .

வெளியே குளிர்க்காற்று வீசிக் கொண்டிருந்தது. மான் சிங்கின் தேகம் சூடாயிருந்தது. குளிருக்கு கணகணப்பாக இருந்தது.

மான் சிங் அவளின் கழுத்து நரம்புகளை உதடுகளால் வருடினான். அப்படியே மெல்ல மெல்ல மலையுச்சியில் இருந்து இறங்கும் பயணிபோல, அவன் உதடுகள் கீழே நழுவிக் கொண்டிருந்தன.

குறிப்பிட்ட தினத்தன்று கன்ஷியாம் மறுபடி வந்திருந்தான்.

"என்னை சரணடைய வைத்தால் உனக்கு சதுர்வேதி எவ்வளவு கொடுப்பார்? சதுர்வேதிக்கு கவர்மெண்ட எவ்வளவு பணம் தரும்?" என்று கேட்டாள் பூலான்.

கன்ஷியாம் அக்கேள்வியால் அரண்டு போனன்.. "நல்லது" இனி நான் விலகி கொள்கிறோன். பணத்துக்காக ஆசைப்படுவதாக இருந்தால், உங்களைக் காட்டிக் கொடுத்தால் மேலும் அதிக பணம் கிடைக்கும் என்பதைக்கூட மறந்து போனீர்களே! என்றான்.

திருப்பங்கள் தொடரும்...



# நீல வானில் மீண்டும் ஒரு மர்மம்!

லண்டனுக்கு மேலே பறக்கும் தட்டுக்கள் பறந்ததை 3 விமானங்களின் விமானிகள் பார்த்து ரிப்போர்ட் செய்தது பற்றிய தகவலை கடந்த வார முரசில் பார்த்தோம். அந்த சம்பவம் நடந்து இரண்டு நாட்களில் மற்றொரு மர்ம சம்பவம் வானில் நடந்துள்ளது. வானில் பறந்து கொண்டிருந்த ஏர் சைனாவின் பயணிகள் விமானத்தின் முன் பகுதியில் மர்மப் பொருள் ஒன்று மோதியுள்ளது.

இது சாதாரண சிறிய பொருளின் மோதல் அல்ல. மிகவும் உறுதியான பொருள் ஒன்று மோதியிருக்க வேண்டும். விமானத்தின் மூக்கு முனை முழுமையாக உள்ளே போகும் அளவுக்கு உறுதியான பொருள், வானில் வைத்து மோதியுள்ளது.

சீனா அதிகாரிகள் மர்மமான முறையில் மௌனம் சாதிக்கின்றனர். அவர்கள் எந்த தகவலையும் வெளியிடாமல் ரகசியம் காக்கின்றனர். ஏர்-சைனாவும் வாயே திறக்காமல் உள்ளது. இனி யாரும் பார்க்க முடியாதபடி, விமானம் உடனடியாக ஹாங்கர் (விமான தரிப்பிடம்) ஒன்றுக்குள் கொண்டு செல்லப்பட்டு விட்டது. ஏர்-சைனாவின் போயிங் 757 ரக விமானம், சீனா வின் செங்டு விமான நிலையத்தில் இருந்து குவங்சோ விமான நிலையத்துக்கு புறப்பட்டது. விமானம் கிளம்பி 20 நிமிடத்தில், 26,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது.

அப்போது திடீரென ஏதோ மோதுவது போன்ற ஓசையை விமானிகளும், பயணிகளும் கேட்டனர். விமானம் ஒரு தடவை குலுங்கிவிட்டு தொடர்ந்து பறந்தது. என்ன நடந்தது, என்ன மோதியது என்பதை விமானிகளோ, பயணிகளோ காணவில்லை. இந்த மோதலால் விமானத்துக்கு என்ன சேதம் ஏற்பட்டது என்பதும், விமானிக்கு அப்போது தெரியாது. ஆனால், விமானத்தின் பறக்கும் உயரத்தை விமானியால் கட்டுப்படுத்த முடியவில்லை. விமானம் உயரம் குறைவதும், மீண்டும் மேலேறுவதுமாக இருந்தது.

இந்த நிலையில் விமானி கட்டுப்பாட்டு நிலையத்தை தொடர்பு கொண்டு உடனடியாக தரையிறங்க அனுமதி கோரியிருக்கிறார். அப்போது விமானம் பறந்து கொண்டிருந்த பகுதிக்கு அருகில் இருந்த விமான தளம் ஒன்றில் அவசர தரையிறக்கம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது.

விமானம் தரையிறங்கியபோதுதான், விமானத்தின் மூக்குமுனை முழுமையாக உள்நோக்கி வளைந்திருப்பதை கண்டார்கள். என்ன மோதியது என்று தெரியாத நிலையில், மீடியாவை சேர்ந்த யாரும் விமானத்தை போட்டோ எடுக்க அனுமதிக்கப்படவில்லை.

ஆனால், விமானத்தில் இருந்து இறங்கிய பயணிகள் தமது செல்போன்களில் எடுத்துவிட்ட சில போட்டோக்கள், சீனாவின் சமூக இணையத்தளம் பகிர்ந்து கொண்டதில், இந்த விபத்து பற்றி வெளியுலகுக்கு தெரியவந்தது. தகவல் கிடைத்தவுடன் விரைந்து வந்த சீன பாதுகாப்புத்துறை அதிகாரிகள், விமானத்தை ராணுவ ஹேங்கர் ஒன்றுக்கு கொண்டு சென்றுவிட்டனர். பறக்கும் தட்டுக்கள் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள டொனா ராபின்சன் என்பவர், 'விமானத்தில் மோதிய UFO - Unidentified Flying Object, ஒரு பறக்கும் தட்டாக இருக்கலாம்' என்று தெரிவித்துள்ளார்.


அவர் கருத்து தெரிவிக்கையில், 'விமானத்தை வானில் மோதும் சாத்தியங்கள் என்று பார்க்கும்போது, ஒரு சாத்தியம், பெரிய பறவை மோதியிருக்கலாம். ஆனால், அப்படியானால் விமானத்தில் பறவை மோதிய இடத்தில் ரத்தக் கறை இருக்கும். இதில் அப்படி ஏதுமில்லை. மற்றொரு சாத்தியம், விமானியற்ற உளவு விமானம் மோதியிருக்கலாம். அல்லது, தரையில் இருந்து வானத்துக்கு ஏவப்பட்ட ஏவுகணை மோதியிருக்கலாம். ஏவுகணை மோதியிருந்தால், வெடித்திருக்கும். இங்கு அப்படி ஏதும் நடக்கவில்லை. விமானியற்ற உளவு விமானம் மோதியிருக்கலாம் என்ற சாத்தியம் உள்ளது. அப்படி நடந்திருந்தால், அந்த உளவு விமானம் நொருங்கி விழுந்திருக்க வேண்டும். அப்படி ஏதும் விழுந்து கண்டுபிடிக்கப்பட்டதாக தகவல் இல்லை. இந்த விமானத்தில் மோதிய பொருள் தரைக்கு வராமல் தொடர்ந்தும் பறந்திருக்கிறது. அதனால், அது பறக்கும் தட்டாக இருக்க சான்ஸ் உள்ளது' என்கிறார்.

"விமானத்தில் மோதியது என்ன என்பதை சுலபமாக தெரிந்து கொண்டுவிடலாம்" என்கிறார், அமெரிக்க அரசு UFO ஆய்வாளர் நிக் போப். "அந்தப் பொருள் எதுவாக இருந்தாலும், அது தடயத்தை விட்டுச் சென்றுள்ளது. விமானத்தின் மூக்கு முனைப் பகுதியில் மோதிய பொருளின் துகள்களை microscopic traces சேகரிக்க முடியும். அதிலிருந்து அந்தப் பொருள் எதுவென்று தெரிந்து கொள்ளலாம். ஆனால், இந்த விஷயத்தில் சீனா மர்மமான முறையில் மௌனம் சாதிப்பதால், மோதிய பொருள் என்ன என்பதை அவர்கள் தெரிந்து கொண்டாலும் வெளியே தெரிய வருவது" சந்தேகமே என்கிறார் நிக் போப். விமானத்தை அவசர அவசரமாக ராணுவ ஹேங்கர் ஒன்றுக்குள் கொண்டு சென்ற செயல், நிச்சயம் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. பார்க்கலாம், சீனா வாய் திறந்து ஏதாவது சொல்கிறதா என்பதை!









# அதிர்ச்சியில் உறைந்தார் நடிகை

அரவான், ஞான கிறுக்கன் போன்ற படங்களில் நடித்தவர் அர்ச்சனா கவி. மலையாள நடிகையான இவர், சமீபகாலமாக மலையாளம், தமிழ் இரு மொழிகளிலும் தென்படாததால் இரகசிய திருமணம் செய்துகொண்டார் என தகவல் வெளியானது.

இதை கேட்டு அதிர்ந்த அர்ச்சனா கவி, ஹனிபி என்ற மலையாள படத்தில் சமீபத்தில் நடித்தேன். பெரிய வேடம் இல்லை என்றாலும், ஒவ்வொரு சீனையும் ரசித்தேன். நிறையப் படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டிருந்தேன். அப்படி ஒப்புக்கொண்டிருந்த பல படங்கள் உடனடியாக தொடங்கப்படவில்லை. இதனால் இடைவெளி ஏற்பட்டது.

பிறமொழி படங்களில் நடிக்க வாய்ப்பு வந்தபோது மொழி தெரியாமல் நடிக்க பயமாக இருந்தது. ஒன்றிரண்டு படங்களில் நடித்த பிறகு சினிமாவுக்கு மொழி முக்கியமில்லை என புரிந்துகொண்டேன். எனக்கு இரகசிய திருமணம் நடந்ததாக சொல்கிறார்கள். என்னுடன் நடித்த பலருக்கு திருமணம் ஆகி வருகிறதே தவிர, நான் யாரையும் திருமணம் செய்துகொள்ளவில்லை. எனது வாழ்க்கையை மற்றொருவருடன் பங்குபோட இப்போதைக்கு விரும்பவில்லை. அதேநேரத்தில் வாழ்க்கையை கடினமானதாக மாற்றிக்கொள்ளும் எண்ணமும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

# இரும்புக் குதிரையில் வருகிறார் பாலா!

பாலாவின், பரதேசிக்கு பின், பல கதைகளைக் கேட்ட அதர்வா, எந்த படத்தில் நடிப்பது என்பதில், மிகுந்த குழப்பத்தில் இருந்தார். பல மாதங்களுக்கு பின், ஒரு வழியாக, 'இரும்புக் குதிரை' என்ற படத்தில் நடிப்பது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

இப்படத்தில், பைக் ரேசர் வேடத்தில் நடிக்கிறாராம், அதர்வா. அதற்காக தற்போது, கடின பயிற்சியில் இறங்கியுள்ள அவர், அஜீத்தை, தன் ரோல் மொடலாகக் கொண்டு நடிக்கிறாராம். ஏழாம் அறிவு படத்தில் வில்லனாக நடித்த டான் கவி வில்லனாக நடிக்கிறார்.

அதனால், சண்டை காட்சிகள் அனைத்தும், ஹொலிவூட் பாணியில் இடம்பெறுகிறதாம். அவருடன் மோதும் சண்டை காட்சிக்காக, தன் உடற்கட்டை, சிக்ஸ்பேக்குக்கு மாற்றும் ஐடியாவும் வைத்துள்ளாராம் அதர்வா.

# பழையன கழிதலும் புதியன புகுதலும்...

பஞ்ச் டயலொக், பறந்து பறந்து அடிக்கும் சண்டை, குத்துப்பாட்டு போன்ற வெத்து வேட்டுக்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு, புதுசா எதாவது சொல்லுங்க பாஸ் - இதுதான் இன்றைய தமிழ் சினிமா ரசிகர்களின் வேட்கை.

அந்த வரிசையில் முற்றிலும் புதுமுகங்களுடன், இதுவரை தமிழ் சினிமா சொல்லத் தயங்கிய சங்கதியை சபைக்கு கொண்டுவரும் படமாக தயாராகிறது 'சினேகாவின் காதலர்கள்'.

டாக ...
உலகை...
இது ...
தன்னை...
போரா...

கற்பித...
புதிய ...
நடிகை...
சினேக...
எந்தவி...

குட்டி ...




# சுருதிக்கு சொந்த ஊர்...

உலகநாயகன் கமல்ஹாசனின் மூத்த மகளான நடிகை ஸ்ருதிஹாசன், சென்னையில் பிறந்து அங்கேயே படித்து வளர்ந்தவர். இவரது தாயார் சரிகா வட மாநிலத்தை சேர்ந்தவராக இருந்தாலும், தந்தை கமல்ஹாசனைப் போலவே ஸ்ருதிக்கு தமிழ் மீது ஆர்வம் அதிகம். இதனால் தன் பெயரை ஸ்ருதி என தமிழில் எழுதி முதுகில் பச்சை குத்தியிருந்தார்.

தமிழ் மீது மட்டுமல்லாமல் தன் தந்தையின் சொந்த மாவட்டமான ராமநாதபுரத்தின் மீதும் அதிக பாசம் வைத்துள்ளார் ஸ்ருதிஹாசன். சமீபத்தில் ஒரு விழாவில் பங்கேற்பதற்காக அங்கு சென்றிருந்த ஸ்ருதியை பார்ப்பதற்கு, ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கூடி விட்டனராம். அவர்களை பார்த்ததும் மகிழ்ச்சியில் ஆழ்ந்த ஸ்ருதி, "என் தந்தையின் சொந்த மாவட்டமான ராமநாதபுரம்தான் எனக்கும் சொந்த மாவட்டம். முதல் முறையாக இங்கு வந்திருப்பது மகிழ்ச்சியாக உள்ளது என உணர்ச்சி வசப்பட்டு பேசியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன."

அவ...
பா...
நடிக்கத்தான் எ...
நான் பயத்தில் உ...
"இந்த கதாபாத்திரத்தில் நா...

# த்ரிஷாவிடம் ஏன் இந்த மாற்றம்?

'லேசா லேசா' படத்தில் அறிமுகமான த்ரிஷா, அதன் பின்பு தனது தொழிலை தெய்வமாக மதித்து, தான் நடித்த படங்களில் அதிக ஈடுபாடு காட்டி நடித்துவந்தார். கால்ஷீட் விசயத்திலும் ஒரு சின்ன குளறுபடிகூட அம்மணியிடம் இருக்காது. இதனால் இவருக்கு சினிமா வட்டாரங்களில் ரொம்ப நல்ல பெயர் இருந்துவந்தது.

சமீபகாலமாக அவரது நடவடிக்கையில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாக சொல்கிறார்கள். தற்போது ஜெயம் ரவியுடன் 'பூலோகம்', ஜீவாவுடன் 'என்றென்றும் புன்னகை' மற்றும் 'ரம்' உட்பட படங்களில் த்ரிஷா நடித்துவருகின்றார். அம்மணி குறித்த நேரத்தில் ஸ்பொட்டுக்கு வருவதே இல்லையாம். இவருக்காக யூனிட்டே காத்திருக்க வேண்டியுள்ளதாம். அப்படியே ஸ்பொட்டுக்கு வந்துவிட்டாலும், கெமரா முன்பு நின்றுகொண்டே செல்போனில் பேசுகிறாராம். அத்துடன் அடிக்கடி பெர்மிஷன் வாங்கிக்கொண்டு எஸ்கேப் ஆகி விடுகிறாராம். த்ரிஷாவின் இச்செயல்களால் அவரை வைத்துப் படம் தயாரித்து வரும் படாதிபதிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

அம்மணிக்கு நேரகாலத்துக்கு ஒரு கல்யாணத்த பண்ணிக்கொடுத்தால் எல்லாம் சரியாகும் போல...!

# விலை... முகஞ்...

அதிக எதிர்பார்ப்ப...
தெலுங்கு படமான ப...
தமிழுக்கும் வருகிறது...
நாட்டில் இருக்கும் ர...
கொண்டு இப்படத்தை...
வெளியிடுகிறார்களாம்...

அத்துடன் இ...
வேடங்களில் மட்டுமே...
ரசிகர்களுக்கு இந்த ...
மாது வேடமும், படுக்...
புதிய விருந்தாக அ...

இதுபற்றி ஸ்...
அறிக்கையில்:- இந்த ...
மாதுகளுக்கே உரிய ...
தத்ரூபமாக வெளிப்ப...







nட்பு - காதல் - காமம் இவற்றினூ
யணப்படும் ஒரு இளம் பெண்ணின் இரகசிய
க அவளே சிநேகத்துடன் பகிர்ந்துகொள்ளும் படம்
ஆண்கள் கோலோச்சும் உலகத்தில், உறவுகளுக்குள்
னத் தொலைத்துவிடாமல் தன் சுயத்தைக் கண்டறிய
டும் 21ஆம் நூற்றாண்டுப் பெண் சினேகா.

தமிழ்ச் சமூகத்தின் காதல் பற்றிய பழைய
ங்களைக் கேள்விக்குள்ளாக்கி 'காதல்' என்பதற்கான
அர்த்தங்களை எழுதிப்பார்க்கிறாள் அவள். மற்றப்படி
சினேகாவுக்கும் இந்தக் கதையில் இடம்பெறும்
ாவுக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ
த தொடர்பும் இல்லை.

அதை உறுதிப்படுத்தும் விதத்தில் அவரே ஒரு
கௌரவ கதாபாத்திரத்தில் நடிக்கவும் கூடும்.



துணிச்சலான சினேகா, அவரது வாழ்வில் கடந்துசெல்லும் 4 இளைஞர்களின் பாத்திரம் மற்றும் முக்கிய பாத்திரங்களுக்கான தெரிவு துரிதமாக நடைபெற்றுவருகிறது. 'சினேகாவின் காதலர்கள்' திரை தரிசனம் அனேகமாக டிசெம்பராக இருக்கக்கூடும் என்கிறது படவட்டாரம்.

# இந்தியில் கால்பதிக்கிறார் தனுஷ்

தென்னிந்தியாவில் நடிப்புத்துறையில் தனக்கென ஒரு தனி இடத்தை தக்கவைத்துக் கொண்டிக்கும் தனுஷின் நடிப்பில் ஆனந்த் எல். ராய் இயக்கத்தில் உருவாகும் இந்தி திரைப்படம் ராஞ்சனா. இதுகுறித்து தனுஷ் கூறுகையில்,

ராஞ்சனா திரைப்படமானது அம்பிகாவதி-அமராவதி திரைப்படத்திற்கு இணையானது. உயிரோட்டமான காதல் கதை என்பதால் இக்கதாபாத்திரத்தை ஏற்று நடித்துள்ளேன்.

இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத் திருப்பதால் இதன் பாடல்கள் அனைத்தும் வெகுவாக மக்கள் மனதை நிச்சயம் கவரும். இத் திரைப் படத்தின் மூலம் ரசிகர் களின் அமோக வர வேற்பை பெற முடியும் என எதிர் பார்ப்ப தாகவும், தமிழர்கள் மனதிலும் இப்படமானது நீங்கா இடம்பிடிக்கும் என்பதில் சந்தேகமில்லை எனவும் கூறிள்ளார்.

மேலும் ராஞ்சனா திரைப்படம் தமிழில் அம்பிகாவதி என்ற பெயரில் வெளியி டப்பட வுள்ளது என்பது குறிப் பிடத் தக் கது.



# சத்யராஜ் துரத்திய இயக்குநர்

இயக்குனர் எம்.ராஜேஷிடம் உதவி இயக்குனராக பணிபுரிந்தவர் பொன் ராம் இயக்கும் படம் 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்.'

இப்படம் குறித்து அவர் கூறுகையில், வின்னர் படத்தில் வடிவேலு வைத்து நடத்திய சங்கத்தின் பெயரைத் தான் இந்தப் படத்திற்கு தலைப்பாக வைத்திருக்கிறோம். இதில் சிவ கார்த்திகேயன், சூரி கொமடியில் கலக்கி இருக்கின்றனர். கோபம், வருத்தம், ஜாலி, கிண்டல், கேலிகொண்ட ஒரு கதாபாத்திரத்தில் சத்யராஜ்
நடிக்கிறார். குறிப்பிட்ட கதாபாத்திரங்களை தெரிவுசெய்து ஒப்புக்கொள்ளும்
ர் இதில் நடிப்பாரா என்ற சந்தேகத்துடன் கதை கூறச்சென்றேன்.
தி கதையை கேட்டவுடன், முதல்ல எந்திரிச்சி போங்க. இந்த கதாபாத்திரத்தில
ங்கிட்ட கத சொல்ல வந்தீங்களா? என்று விரட்டினார்.
றந்துபோனேன். மீதிக் கதையைக் கேளுங்கள் என்றேன். அதைக்கேட்ட பின்பு,
ன்தான் நடிப்பேன்" என்று கூறி உடனடியாக திகதி கொடுத்தார்.

# மைதுவை பார்த்து சுழிக்கும் நடிகைகள்...

டன் ஸ்ரேயா நடித்துள்ள
வித்ரா, அதே பெயரில்
. ஸ்ரேயாவுக்கு தமிழ்
சிகர்களை மனதில்
 இங்கு
.

துவரை அவரை டீசன்டான
 பார்த்து ரசித்துள்ள
படத்தில் அவரது விலை
கையறை காட்சிகளும்
மையும் என்கிறார்கள்.
ரேயா விடுத்துள்ள
 படத்தில் விலை
செக்ஸியான நடிப்பை
டுத்தியிருக்கிறேன். ஆனால்

அளவுக்கதிகமாக ஆடை விலக்கவில்லை. எனது நெளிவுசுழிவான நடிப்பு, முகபாவனைகள் மூலம் அதை நிறைவு செய்திருக்கிறேன். எனினும் எனது உடம்பில் மோகத்துடன் கெமரா கண்கள் பாய்ந்திருப்பது ரசிகர்களை கிளர்ச்சியூட்டும் வகையில் படமாக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த பவித்ராவில் நான் விலைமாதுவாக நடித்திருப்பதை சில நடிகைகள் ஏதோ அருவருப்பான வேடத்தில் நான் நடித்திருப்பதைப் போல முகம் சுழிக்கிறார்கள். ஆனால், இதுமாதிரியான வேடங்களில் தான் நடிப்பில் ஸ்கோர் பண்ண முடியும். நடிப்பில் புதிய பரிமாணத்தை வெளிப்படுத்த முடியும். அதை நான் இந்த படத்தில் செய்திருக்கிறேன் என்கிறார்.

# இயக்குனராகிறார் பிரியங்கா திரிவேதி

தமிழில் இராச்சியம், ராஜா, காதல் சடுகுடு போன்ற பல படங்களில் நடித்தவர் பிரியங்கா திரிவேதி. இவர் கன்னட நடிகர் உபேந்திராவைத் திருமணம் செய்துகொண்டார். இன்னும் தொடர்ந்தும் நடித்துக்கொண்டும் இருக்கும் இவர் இயக்குநராக அவதாரம் எடுக்கவும் திட்டமிட்டுள்ளார்.

இதுபற்றிக் கூறுகையில், 'எனிமி' என்ற இந்திப் படத்தில் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் நடித்தேன். ஓய்வுநேரங்களில் கதைகளை எழுதினேன். இப்போது தரமான கதையொன்று கைவசம் இருப்பதால் படம் இயக்கவும் முடிவு செய்துள்ளேன்.

# தேன் கிண்ணம்



## நாற்காலி

நிமிடக்கணக்கில்
நிற்கின்ற போது
கால்களின் வேதனையை
வாங்கிக் கொண்டு
தன்னுடலையே
அர்ப்பணித்த அன்னை!

நோயாளிகளின்
பாதி நோயை
வாங்கிக் கொண்ட
வைத்திய நிபுணன்!

இயலாதவர்களுக்கு
உதவுவதில்
பணத்தை எதிர்பாராத
பரிசுத்த தொண்டன்!

வயோதிபர்கள்
எங்கு சென்றாலும்
உன்னைக்கண்டால்
ஓடிவந்து
உடலுறவு கொள்ள
துணிந்து விடுவார்கள்!
வருத்தமிருந்தாலும்

பொருத்தாமியிருப்பாய்!
வீடு அலுவலகம்
வியாபார தலங்கள் மட்டுமன்றி
மனிதர்கள் எங்கெல்லாம்
பட்ர்ந்திருக்கிறார்களோ!
அங்கெல்லாம்
உம்மினத்தவரின்
வரவேற்ப்புத்தானே
முதல் கிடைக்கும்!

மனிதர்கள்
வரவேற்கவில்லை
நீதானே மனிதர்களை
வரவேற்கிறாய்!

கே.பாலேந்திரன்.
(கொல்பிட்டி)

## எதிலும் நீ

மழை மாதத்தில்
என் அம்மாவின்
வெறும் தேநீர் நீ

நீ மழையில்
நனைந்து வருகையில்
நான் உலர்ந்ததும்
துணி.

உன் ஈரக் கைகளின்
நெருப்புக்குச்சி.

உன் நோயின்
விடுதலைக்கு
நானோ மருந்து
புரட்சியாளன்.

கல்லூரி போகையிலும்
கையோடு போகும்
எழுது கோல்!

அவள்
காலையில் விழிக்கையில்
பனித்துளி வழிவில்
துளிர்ந்த முகப்பரு

நித்திரை அலைவரிசை
தொடங்கையில்
கனவுப் பாடகி!

அவள் எப்போதும்
செலவுகள் அல்ல
சேமிப்புக்கள்!
அவள் தொண தொணத்த
வார்த்தைகள் அல்ல
கலவியின் பின்
சத்தமடங்கும் கொலுசுகள்

அவள் சிந்தனையின்
சருகுகள்
அல்ல
எந் நேரத்திலும்
எண்ணங்களின்
வேர்கள்
உதிரும் பூகக்களின்
மகரந்தங்கள் அல்ல
உதிரா விழியின்
நிரந்தர விம்பம்

என் கல்லறையின்
கற் சுவர்கள் அல்ல
உள்ளேயும்
உடலை உண்ணும்
இராட்சதப் புழு

என் சாவை அடையாளப்படுத்த
நீ பூமிக்கு மேலே
சுவரெழுப்பி
வாசகம் எழுதி விட்டு
போனவள் அல்ல!
நீயும் உள்ளே வந்து
உறங்கிக் கொண்டவள்!

எம். நேதா- நெடுந்தீவு



## உறவுகள்!



கருவறையில் உற்பத்தியாகிய
என்னை தாய் மண்ணிலே
துளிர் விட ஆரம்பித்து வைத்து
உலகம் காட்டும்
என் அன்புத்தாய்!

விழிகளை மூடித்திறக்கும்
எந் நேரமும் கண்ணெதிர்
முன்னே உலாவரும்
என் பாசமலர் அப்பா!

திரைப்பட மாளிகைக்கு
சென்று ஊதாரியாய்
செலவு செய்ய கேட்டவுடன்
வாரி கொடுக்கும்
என் அக்கா!

'என்டா செய்றா'
என்று வார்த்தைகளால்
அதட்டி பாசங்களை
அள்ளி வழங்கும்
என் அண்ணன்!

பேய் பிசாசு, திருடன்
என கண்டு அச்சமூட்டும்
கதவுகளை எல்லாம்
தப்பா எடைபோடும்
என் சின்னமலர் தங்கை!
மகிழ்ச்சி தாண்டவமிடும்
என் அன்புக் கூட்டிலே
சிறகடிக்கும் வழி செய்த
இறைவனுக்கு கோடி நன்றி!

குதா இன்ஸாம்,
கிண்ணியா -07.

## ஆயிரம் ஆசைகள்!

ஆயிரம் பொற்காசுகள் தநது
ஆரர்த்தி எடுத்து உன்னை
ஆற்பறிக்க உனக்குத்
தாலிகட்ட
ஆர்வமாய் இருந்தேன்

ஆர்வக் கோளாறினால்
ஆசைவைத்த உன்னை
ஆயிரம் பொற்காசுமின்றி
ஆரத்தழுவும் தாலியுமின்றி

ஆசா பாசங்களையும்
ஆருயிர் தாய் தந்தையரையும்
ஆரா துயரில் விட்டுச் சென்ற
ஆண் பிள்ளை நான்தான்.

ஆனாலும் வீண் பிள்ளை
நானில்லை
ஆசை வைத்த உன்னை
அடைந்தேன்
ஆயினும் பெற்றோரை
நானிழந்தேன்
ஆண்டவன் என்னையும்
மன்னிப்பானா?

அலாவுதீன் A.L.A.பாபு.
திருகோணமலை.



## மறப்பேனா?

படுக்கை யெழில் விரிப்பில்
பால் வண்ணத் தொடையழகை
இடுப்பை தொப்புள் அயல்
இடுக்கின்ற முக்கோணப்
பரப்பை இரு கனிக ளினைப்
பாவலளெனன் விருந் தாக்கி
இரவெல்லாம் இனிமை தரும்
இளமயிலே மறப் பேனா?

கட்டிலறைச் சுக மென்னும்
கல்விப்போர் உச்ச மதில்
ஒட்டியுற வாடி யெனை
உடும்பாகிப் பற்றி டுவாய்!
மட்டில்லாப் போதை யினால்
மடை திறந்த உணர்வுகளால்
அட்டையென நீ நெளியும்
அழகுதனை மறப் பேனா?

உடலதனை ஒடிய லெனை
உந்தனுக்கு வழங்கி விட்ட
கடவுளவன் கட லெனவே
காதலையும் நிறைத்துள்ளான்!
தொடமுடியா இமய மெனும்
தூரமென்ன? நீ யிருந்தால்-
அடைவேனே அரை நொடியில்!
அன்பே நான் மறப் பேனா?

கவிஞர் அ. கௌரிதாசன்.





## எப்போது தீரும்!

சுனாமி தந்த வலிகள்
மாறாத வடுக்கள்
யுத்தம் தந்த வலிகள்
ஆறாத புண்ணாகி
ஆற்ற முடியாத
இழப்புக்களுடன்
ஊரைவிட்டு ஓடி
உறவுகளை இழந்து
காட்டுக்குள் வீடு கட்டி
கம்பிக்கூட்டுக்குள்
அடைக்கப்பட்டு
மீள்குடியேற்றம்
என்ற பேரில்
மீண்டும் சொந்த ஊரில்
(துன்ப) வெள்ளத்தில்
மிதக்கின்றோம்
எப்போது தீரும்
இந்தத் துயரம்.

யோ.சறோ.



# எயிட்ஸையே மிஞ்சும் நோய்

இதுநாள் வரை மனிதர்களை 'எயிட்ஸ்' எனும் நோய்தான் மிரட்டிவந்தது. அதற்கு ஓரளவு மருந்து கண்டுபிடித்துவிட்ட நிலையில் உடலுறவுமூலம் பரவுகின்ற மற்றோரு நோயான வெட்டை நோய் -ஆங்கிலத்தில் கொணோரியா(Gonorrhea) என்று அழைக்கப்படும் புதிய நோய் பீதியை கிளப்ப ஆரம்பித்துள்ளது.

இந்த வகையானது அண்டிபயாடிக் நோய் எதிர்ப்பு மருந்துகளுக்கு கட்டுப்படாத போக்கு அதிகரித்து வருவதால், அந்நோய் விரைவில் குணப்படுத்த முடியாத ஒரு நோயாக மாறிவருவதை இப்போதே கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் எனப் பிரிட்டனில் நடக்கின்ற ஒரு மருத்துவ மாநாட்டில் எச்சரிக்கப்படவுள்ளது.

உலகளவில் பார்க்கையில் ஒவ்வொரு ஆண்டும் புதிதாக பத்து கோடிப் பேருக்கும் அதிகமானோருக்கு இந்த நோய்த்தொற்று ஏற்பட்டுவருவதாக ஐ.நா கூறுகிறது. இதுநாள் வரை வெட்டை நோயை எதிர்க்கவல்ல புதிய அண்டிபயாடிக் மருந்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நோயாளிகளுக்கு மற்ற சிகிச்சைகளைத் தந்து காலம் தாழ்த்துவதைத் தவிர சுகாதாரத்துறை நிர்வாகிகளுக்கு வேறு வழியில்லாமல் போகலாம் என மைக்ரோபயாலஜிஸ்டுகளுக்கான இந்த மாநாட்டில் எச்சரிக்கப்படவுள்ளது.

அதேசமயம் பாதுகாப்பான உடலுறவுப் பழக்கங்கள், மேம்பட்ட நோய் கண்டுபிடிப்பு பரிசோதனைகள் போன்றவை அவசியம் என இம்மாநாட்டில் பாலுறவு நோய்கள் சம்பந்தப்பட்ட பிரிட்டனின் முன்னணி நிபுணரான பேராசிரியை கேத்தி ஐசன் குரலெழுப்பவுள்ளார்.

# சிசேரியன் அதிகரிக்க காரணம் என்ன?



கர்ப்பிணி பெண்கள் தங்கள் கர்ப்ப காலத்தில் சந்திக்கும் ஒரு பிரச்சினை உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் போன்றவற்றால் சிசேரியன் அறுவை சிகிச்சை அதிகரிக்கிறது என டாக்டர்கள் விளக்கம் தருகின்றனர். தற்போது சிசேரியன் அறுவைச்சிகிச்சை மூலம் குழந்தை பெறுவது அதிகமாகிகொண்டே வருகிறது.

இதற்குக் காரணம் சமீபத்தில் வாழ்க்கை முறையினால் ஏற்பட்டுள்ள நோய்கள்தான் காரணம் என டாக்டர்கள் பொதுவாக தெரிவிக்கின்றனர். கர்ப்ப காலத்தில் பெரும்பாலான பெண்கள் உயர் அழுத்தத்தினாலும், நீரிழிவு நோயினாலும் அவதிப்படுகின்றனர்.

இதுபோன்ற நோய்கள் ஏற்படுவதற்கு ஊட்டச்சத்து குறைவான உணவே காரணமாகும். எனவே, அறுவைச் சிகிச்சை மூலம் இவர்கள் குழந்தை பெற்றுக்கொள்ள டாக்டர்கள் அறிவுரை கூறுகின்றனர். அதேநேரத்தில் பல பெண்கள் பிரசவ வலியை தாங்கப் பயப்படுகின்றனர். எனவே, அவர்கள் பிரசவ அறைக்கு செல்ல விரும்புவதில்லை.

மாறாக, நேரடியாக அறுவை கிசிச்சை அறைக்கு (ஒப்பரேசன் தியேட்டருக்கு) சென்று குழந்தை பெற விரும்புகின்றனர். ஆனால் அறுவை சிகிச்சை மூலம் குழந்தைபெறுவது உடல்நலத்துக்கு கேடு, அத்துடன் 2ஆவது குழந்தையை உடனடியாக பெறமுடியாது.

அதற்குக் காலம் தாழ்த்தவேண்டும். எனவே சாதாரணமாக குழந்தை பெற்றுக்கொள்ள முயற்சிக்கும்படி பெரும்பாலான டாக்டர்கள் அறிவுரை செய்கின்றனர். காலம் தாழ்த்தி குழந்தை பெறுவதும், பெரும்பாலான பெண்கள் செய்ற்கை கருத்தரித்தல் மூலம் குழந்தை பெறுவதும், சிசேரியன் அறுவை சிகிச்சைக்கு காரணங்களாகவும் உள்ளன.

குழந்தை நல்ல நேரத்தில் பிறக்க வேண்டும் எனக் கருதி சிலர் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை பெற்றுக்கொள்கின்றனர். இவையே சிசேரியன் அறுவைச் சிகிச்சை அதிகரிக்க காரணங்களாகும்.

கர்ப்பிணி பெண்களே சிசேரியன் அறுவை சிகிச்சையை தவிர்க்க ஊட்டச்சத்து நிறைந்த உணவு வகைகளை விரும்பி சாப்பிடுங்கள்.

உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள சத்தான காய்கறிகள் மற்றும் கீரை வகைகளை விரும்பி சாப்பிடுங்க. இதனை தொடர்ந்து சாப்பிட்டுவருவதால் சிசேரியனை தவிர்க்கலாம்.

# சிக்ஸ் பேக் கொண்டுவரும் விபரீதம்

இன்றைய இளைஞர்களிடம் அழகின் முகவரி எதுவென்று கேட்டால் சிக்ஸ் பேக் என்பார்கள். அந்த அளவுக்கு சிக்ஸ் பேக் மீது பைத்தியமாக இருக்கிறார்கள். அதற்காக ஸ்டீராய்டு என்கிற ஊக்க மருந்தைப் பயன்படுத்துகிறார்கள். இது உயிருக்கே ஆபத்தானது என்கிறார்கள் மருத்துவர்கள்.



பொதுவாக உடலில்சேரும் கொழுப்பு உடல் இயக்கத்தின் மூலம் இயல்பாகவே கரைந்துபோகும். சில சமயங்களில் கரையாமல் ஆங்காங்கே சேர்ந்துபோகும். இப்படிசேரும் கொழுப்பைக் கரைத்து தசைகளாக வயிற்றுப்பகுதியில் உருமாற்றுவதுதான் சிக்ஸ் பேக்.

ஒருமுறை சிக்ஸ் பேக் கொண்டு வந்துவிட்டாலும் அதை தொடர்ச்சியாக பராமரிப்பது கஷ்டம். உழைப்புக்கான சூழ்நிலை நகர வாழ்க்கையில் இல்லை. அதனால்தான் உடற்பயிற்சிமூலம் இதைப்பெற முயல்கிறார்கள். அதற்காக ஒரு சிலர் ஸ்டீராய்டு மருந்துகள் எடுத்துக்கொள்கிறார்கள். அதனால் உடலில் ஹோர்மோன் மாற்றங்கள் ஏற்படும் ஆபத்து உண்டு.

ஆண்மைக்கு காரணமாக இருக்கும் ஹோர்மோன் டெஸ்டோடீரோன். இயல்காக சுரக்கும் இந்த ஹோர்மோனை அதிகளவில் சுரக்க செய்வது ஸ்டீராய்டு. சரி ஆண்மைக்கான ஹோர்மோன் அதிகம் சுரந்தால் நல்லதுதானே என்கிறீர்களா? மருத்துவர்கள் அப்படி சொல்லவில்லை. டெஸ்டோடீரோன் அதிகம் சுரந்தால் உடல் எடை கூடும். தசைகள் அளவில் பெரிதாகும். அதன்மூலம் ஏற்படும் பக்கவிளைவுகள் மிக பயங்கரமானவை. முதலில் ஏற்படுவது ஆண்மைக் குறைவுதான். விளையாட்டு உலகில் இந்த ஊக்கமருந்து குற்றச்சாட்டு மிக அதிகம். வருடத்துக்கு 30 ஆயிரம் வீரர்கள் கைது செய்யப்படுவார்கள்.

அவர்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துகளும் ஸ்டீராய்டு வகையைச் சேர்ந்தவைதான். அவற்றை எடுத்தவர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையான கதைகள் நிறைய உண்டு. உடற்பயிற்சி எடுத்த சில நாட்களில்லே சிக்ஸ் பேக் வந்துவிடும் என்ற கருத்து பரவலாக உள்ளது. இது தவறு. அதுபோன்று தவறான வழிகாட்டுதல் காரணமாக ஸ்டீராய்டு எடுத்துக்கொள்கிறார்கள். இது ஊசி, மாத்திரை வடிவில் கிடைக்கும் பயன்படுத்தியவுடன் கொழுப்பு கரைவதுபோல் தோன்றும். எடை குறைவதாக நினைப்பார்கள். உண்மையில் நடப்பது, ஹோர்மேன் சமச்சீரின்மைதான். மேலும் ஆண்மைக்குறைவு, மலட்டுத்தன்மை, குரல் மாற்றம், கல்லீரல் கேன்சர், மார்பில் அதீத உரோம வளர்ச்சி, நரம்புத்தளர்ச்சி, பார்வைக் குறைபாடு போன்றவையும் ஏற்படும்.

அழகான ஆரோக்கியமான உடலுக்கு அன்றாடம் எளிதான உணவு வகைகளும் இயல்பான உடற்பயிற்சியுமே போதும் என்கிறார்கள் மருத்துவர்கள்.



# இரத்தத்தை சுத்திகரிக்கும் இலந்தை

பொதுவாகவே ஒவ்வொரு பழங்களிலும் ஒவ்வொரு சத்துக்கள் அடக்கியுள்ளன. குறிப்பாக நார்ச்சத்து, புரதச்சத்து, விற்றமின்கள் அடங்கியிருப்பதால் அவை எளிதில் ஜீரணமாகி, இரத்தத்தில் கலக்கிறது. இலந்தையில் இரண்டு வகை உண்டு, ஒன்று நாட்டு இலந்தை, காட்டு இலந்தை. இந்தப் பழத்தில் சிலவற்றில் இனிப்புச் சுவையும், சிலவற்றில் புளிப்புச் சுவையும் இருக்கும். இலந்தையில் விற்றமின் ஏ, பி, சி என்ற சத்துக்கள் அடங்கியுள்ளது. சுண்ணாம்புச் சத்தும், இரும்புச் சத்தும் அதிகம் உள்ளது.

இலந்தை கிடைக்கும் காலங்களில் இதை எடுத்துக் கொள்ளலாம். எலும்புகள் உறுதிபெறுவதோடு, பற்களும் உறுதிபெறும். வாந்தி, மயக்கம், தலைசுற்றல் எனப் பல நோய்களுக்கு மருந்தாக இலந்தை பயன்படுகிறது. மாரடைப்பு உள்ளவர்கள் இப்பழத்தை எடுத்துக் கொள்ளலாம். சிலர் எதை சாப்பிட்டாலும் செரிக்காமல் அவதிப்படுவர். இவர்கள் இலந்தையுடன் உப்பு சேர்த்து சாப்பிட்டுவர வயிறு இலகுவாகி செரிமாணப் பிரச்சினையிலிருந்து விடுபடலாம். பெண்களுக்கு மாதவிடாய்க் காலங்களில் வரும் வயிற்றுப் போக்கை தடுக்கவும் இந்தப் பழம் பயன்படுகிறது. கல்வி பயிலும் மாணவர்களுக்கு நினைவாற்றலை அதிகரிக்கக்கூடிய சக்தியும் இலந்தைக்கு உண்டு.



# பூசணிக்குள்ளும் மறைந்துள்ளது மருத்துவம்

காய்கறி வகைகளில் ஒன்றான பூசணியை தொடர்ந்து சமைத்துச் சாப்பிட்டால், நரம்பு தொடர்பான நோய்கள், நரம்புத் தளர்ச்சி, வயிற்றுப்புண், மேகவெட்டை, பிரமேக நோய் போன்றவை உள்ளவர்களுக்கு அவற்றின் தீவிரம் குறையும்.

பூசணி, உடல் சூட்டைத் தணிக்கும். சிறுநீர் வியாதிகளை நீக்கும். எப்போதும் உடல் வலி இருப்பவர்கள், பூசணிக்காயை அடிக்கடி சமைத்துச் சாப்பிட்டால் உடல் வலி நீங்கும். மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும்போது தினசரி பூசணி சேர்த்து சமைத்த உணவைக் கொடுத்தால் நல்ல பலன் கொடுக்கும் என்று கூறப்படுகிறது. மருத்துவத்தில் பூசணிக்காயின் சதைப் பகுதி, நீர்விதை ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. நுரையீரல் நோய், இருமல், காய்ச்சல், நெஞ்சுச்சளி, நீரிழிவு, தீராத தாகம், வாந்தி, தலைச்சுற்றலை நீக்கவும் பயன்படுகிறது. மருத்துவம் கலந்த சிறுநீர் வெளியேறுதல், பெண்களின் வெள்ளைப்போக்கு நீக்கவும் வெண்பூசணி பயன்படுகிறது. வெண் பூசணிக்காயின் சாறு 30 மில்லி அளவு எடுத்து, ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்துச் சாப்பிட்டால் இதயத்துக்குப் பலம் கொடுக்கும். ரத்தம் சுத்தப்படும். பூசணிக்காய் சாற்றைத் தயாரித்து தினசரி 30 மில்லி அளவு சாப்பிட்டு வந்தால் தொடர்ந்த இருமல், நெஞ்சுச் சளி குணமாகும். நீரிழிவு நோய் கட்டுப்படும். அதிக தாகத்தைக் குறைக்கும்.

உடம்பின் எந்தப் பாகத்திலாவது இரத்தக்கசிவு ஏற்பட்டால் அதை நிறுத்திவிடும். இரத்த சுத்திக்கும், இரத்தக்கசிவு நீங்கவும், வலிப்பு நோய் சீராகவும், குடலில் உள்ள நாடாப்புழுக்கள் வெளியேறவும், சிறுநீரக நோய்கள், இரத்தம் சுத்தப்படும்.




# பெண்களுக்கு எதிரான வன்கொடுமை

இஸ்லாமிய சட்டம் நடைமுறையில் இருக்கும் எகிப்தில், சமீபகாலமாக பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எகிப்தில் இருக்கும் 99.3 சதவீத பெண்கள் ஏதேனும் ஒருவகையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியிருப்பார்கள் என்கிறது மே 23ஆம் திகதி ஐ.நா. சபை வெளியிட்ட அறிக்கை.

எகிப்தில் நடந்த புரட்சிக்குப் பிறகு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை அதிகரித்திருப்பதாக ஒரு சாரரும், எப்போதுமே ஒன்றுபோலவே இருப்பதாக மற்றொரு சாரரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. அறிக்கையின் அடிப்படையில், வன்கொடுமைக்கு உள்ளாகும் 19 சதவீத பெண்கள் மட்டுமே. அது குறித்து காவல்நிலையத்தில் புகார் தெரிவிக்கின்றனர் என்றும், மற்றவர்கள் பயம் மற்றும் வெட்கம் காரணமாக அதை மறைத்துவிடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# தெரிந்து கொள்ளுங்கள்

கனமான மார்புள்ளவர்களுக்கு வெயிட்டில் மார்பகம் சீக்கிரமே தழைய வாய்ப்புள்ளது. சரியான போடாவிட்டால் இந்தத் தொல்லை இன்னும் அதிகம். இவர்கள் போடும் பிரா கனமான மார்பகங்களைக் கொஞ்சம் தூக்கித்தரும்படியும் சரியாகப் பொருந்தும்படி கொஞ்சம் டைட்டாக இருக்கவேண்டும்.

கனமான மார்புள்ளவர்கள் இரவில் கண்டிப்பாக பிராவைக் கழற்றக் கூடாது. மற்றவர்கள் அதிக டைட் இல்லாத பிராவைப் போட்டுக் கொள்ளலாம். கழற்றிவிட்டு படுக்கலாம்.

பெண்களின் உடல் கர்ப்ப காலத்தில் குழந்தைக்குப் பால் கொடுப்பதற்காக தயாராகும். அதனால் அந்த நேரத்தில் மார்பகம் அளவிலும் வடிவத்திலும் வழக்கத்தைவிட பெரிதாக மாறும். ஆகவே பிரா சைஸை மாற்றி இறுகப் பிடிக்காதபடி போடவேண்டும். கர்ப்ப காலத்தில் நிப்பிளைச் சுற்றியுள்ள கறுப்பு நிறம் அதிகமாகும். இதற்காக பயப்படத்தேவையில்லை. இது இயற்கை. எல்லோருக்கும் ஏற்படும் ஒரு மாற்றம்தான். கர்ப்பத்தின்போது மார்பகம் சைஸில் பெரிதாவதால் அதில் கோடுகள் விழ வாய்ப்புண்டு. அதனால் கர்ப்ப காலத்தில் 'விற்றமின் ஈ' க்ரீம் தடவிக் கொள்ள வேண்டும். குழந்தை பிறந்து பால் கொடுக்க ஆரம்பித்தவுடன் இந்தக் கிரீமை தடவிக்கொள்வதை தவிர்க்கவேண்டும்

சிலருக்கு நிப்பிள் முனை நீளமாக இருக்காது. இது பால் குடிக்கும்போது குழந்தைக்கு சிரமத்தை ஏற்படுத்தலாம். இதனால் முன்னெச்சரிக்கையாக கர்ப்பத்தின் ஏழாவது மாதத்திலிருந்து குளிக்கும் போது மார்புமுனைகளை லேசாக இழுத்துவிட வேண்டும். இதனால் இரண்டு, மூன்று மாதத்தில் முனைக் காம்பு நீளமாகிவிடும். இதனால் பயனில்லை என்றால் டாக்டரை அணுகவேண்டும். பால் கொடுக்கும் முன்னும் கொடுத்த பிறகும் நிப்பிளைச் சுற்றி தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்த பஞ்சை வைத்து சுத்தம் செய்யவேண்டும். இதனால் பால் குடிக்கும் குழந்தைக்கு ஒவ்வாமை வருவது தடுக்கப்படும்.

டீன் ஏஜில் பிரா தேர்ந்தெடுக்கும் போது இறுகப் பிடித்திக் கொள்ளும் அளவில் கூடாது. மார்பகம் பெரிதாக வளரும் வயது என்பதால் பிராவின் சைசுக்கு அடங்கிய பகுதி பிதுங்கியது போன்று நிரந்தர ஷேப்புக்கு உள்ளாக்கிவிடும். அந்தந்த வயதில் மாறும் மார்பக அளவிற்கு ஏற்ப பிரா சைஸை மாற்றிக்கொண்டே இருக்க வேண்டும்.



# கருப்பை வாய் புற்றுநோயிலிருந்து தப்பிக்க...

பெண்களை தாக்கும் பல்வேறு நோய்களில் கருப்பை வாய் புற்றுநோயும் ஒன்று. தற்போது, பெண்களை அதிகளவில் தாக்கி உயிருக்கு ஆபத்தினை ஏற்படுத்திவரும் கருப்பை வாய் புற்று நோயால் தெற்காசிய நாடுகளில்தான் அதிகமான பெண்கள் உயிரிழக்கின்றனர் என்கிறது செய்தி. ஆனால், கருப்பை வாய் புற்றுநோயை தவிர்க்கவும், முன்கூட்டியே அறிந்து தடுக்கவும் முடியும் என்பதுதான் பெண்களுக்கு இனிப்பான செய்தி.

கருப்பை வாய் புற்றுநோய் ஏற்பட கருத்தடை முறைகள், மாதவிலக்கின்போது சுகாதாரமின்மை, கிருமித்தொற்று போன்றவை காரணங்களாக உள்ளன.

பொதுவாக கருப்பை வாய் பகுதியில் தங்கும் சாதாரண செல்கள் அல்லது கிருமிகள், புற்றுநோய் செல்களாக மாறிவளருவதே கருப்பை வாய் புற்றுநோய் எனப்படுகிறது.

இதனை வராமல் தடுக்க தடுப்பூசி வந்துவிட்டது. இதனை போட்டுக்கொள்வதால், கருப்பை வாயில் கிருமிகள் தங்குவது தவிர்க்கப்படும். எனவே, 30 வயதைக் கடந்த அல்லது திருமணமாகி 5 ஆண்டுகளைக் கடந்த பெண்கள் கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசியைப் போட்டுக்கொள்வது அவசியமாகும்.

இதில்லாமல், 30 வயதைக் கடந்த பெண்கள் ஆண்டுதோறும் கருப்பை வாயை பரிசோதனை செய்துகொள்வதன்மூலம், புற்று நோய் ஏற்பட்டாலும், ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து அதற்கான சிகிச்சை பெற்று குணமடையலாம்.

கருப்பை வாய் புற்றுநோய் ஏற்பட எச்.பி.வி. வைரஸ் அதாவது ஹியூமன் பொப்பிலோமா வைரஸ் தான் காரணமாகிறது. இது மனிதனை தாக்காமல் இருக்க தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை போட்டுக் கொள்வதால் பெண்கள் கருப்பை வாய் புற்றுநோயில் இருந்து தப்பிக்கலாம்.

# தக்காளி ஊறுகாய்



## தேவையானவை

தக்காளி - கால் கிலோ, மிளகாய் தூள் - 3 கரண்டி, வெந்தயம் - ஒரு கரண்டி, கடுகு - 3 கரண்டி, மஞ்சள் தூள் - அரை கரண்டி, கல் உப்பு - தேவையான அளவு, பெருங்காயத் தூள் - 3 சிட்டிகை, நல்லெண்ணெய் - ஒரு கப்

## செய்முறை

தக்காளியை கழுவி ஈரமில்லாமல் துடைத்து நறுக்கிக் கொள்ளவும். அதில் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்றாக குலுக்கி ஒரு நாள் முழுவதும் மூடிவைக்கவும். அடுத்த நாள் அதனை வெயிலில் வைக்கவும். பாத்திரத்தில் இருக்கும் தண்ணீரையும் வெயிலில் வைக்கவும். தினமும் இவ்வாறு செய்து தண்ணீர் நன்கு தக்காளியில் ஊறும்வரை உலர்த்தி எடுக்கவும். ஒரு வாரம் கழித்து ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி சிறிது கடுகு, வெந்தயம் என ஒவ்வொன்றையும் தனித்தனியாக வறுத்து பொடியாக்கிக் கொள்ளவும்.

ஊறிய தக்காளியில், உப்பு, மிளகாய் தூள், மஞ்சள் தூள், அரைத்த பொடி ஆகியவற்றை நன்கு கிளறிவைக்கவும், பிறகு கடாயில் நல்லெண்ணெய் ஊற்றி கடுகுபோட்டு தாளித்து பெருங்காயம் சேர்க்கவும், அதில் மசாலா சேர்த்து வைத்துள்ள தக்காளியைப் போட்டு கிளறவும். மிளகாய் தூள் வாசனை போகும்வரை கிளறி இறக்கவும். காற்றுப் புகாத பாத்திரத்தில் சேமித்துவைத்தால் ஒரு மாதம்வரை கெட்டுப் போகாமல் பயன்படுத்தலாம்.

# பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-373**

**கேள்வி : கருப்பை வாய் புற்றுநோய் ஏற்படுவதற்குக் காரணமான வைரஸ் எது?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-02.07.2013**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 373
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 371 இற்கான விடை :- ஒரு கரண்டி வேப்பம் பூ விழுது, ½ கரண்டி மாம்பழ சதை, ½ கரண்டி நல்லெண்ணெய் கலந்து பூசவேண்டும்.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- பு.மகிழ்மணி, மல்லாவி வடக்கு, மாங்கை நகர்.

373

பெயர் : ____________

முகவரி : ____________

____________

தே.அ. அட்டை இல : ____________

விடை : ____________

____________

கையொப்பம் : ____________

# உங்கள் கூந்தலை பாதுகாப்பதற்கு...

## கண்டதைப் பாவிப்பதனால்...

தலைமுடியை சீராக வைப்பதற்கு எண்ணெய்கள் ஷம்பூக்கள் கண்டிஷனர்கள் என்று ஏகப்பட்ட சமாச்சாரங்கள் வந்துவிட்டன. இவற்றில் தரமான பொருட்களை பயன்படுத்த முடியாதவர்கள் இந்த தரம் குறைந்த பொருட்களை வாங்கி பயன்படுத்துகின்றனர். இதனால் வரும் ஆபத்து குறித்து யாரும் கவலைப்படுவதில்லை.

**தண்ணீரை மாற்றினால்...**

வெளியிடங்களுக்குப் போனால் குளிக்கப் பயன்படுத்தும் தண்ணீர் தன்மையும் மாறுகிறது. இதனால் பாதிக்கப்படுவது அவர்களின் தலைமுடிதான் மேற்கண்ட இரண்டையும் காட்டிலும் முக்கியமானது கவலைதான். ஒருவரின் கவலை அவரின் தலைமுடி கொட்டக் காரணமாக அமைந்துவிடுகின்றது. குறைந்த பட்சம் ஆறுமணி நேரத் தூக்கம் அவசியம். தலைமுடி ஆரோக்கியத்துக்கும் நித்திரை தேவை.

**இதற்கு என்ன செய்ய வேண்டும்?**

வரண்ட தலைமுடி, எண்ணெய் தலைமுடி ஆகிய இந்த இரண்டு வகைத் தலைமுடியில் எந்த வகை தலைமுடி உங்களுடையது என்று தெரிந்துகொண்டால் தான் நாம் அதற்குரிய ஷம்பூவை தேர்ந்தெடுக்க முடியும். எண்ணெய் முடியுள்ளவர்கள் அந்த எண்ணெயை நீக்கிச் சீராக்கும்வகையில் உள்ள 'டீப் கிளீன்சிங்' ஷம்பூவை பயன்டுத்த வேண்டும். .வரண்ட தலைமுடி உள்ளவர்கள் கண்டிஷனர் அதிகம் உள்ளதும் எஸ்.எல்.இ.எஸ் என்று அழைக்கப்படும் இரசாயனம் கலந்த ஷம்பூவை பயன்படுத்தினால் நல்லது.

**எந்தச் சத்துத் தேவை:-** முடிக்கு இரும்புச்சத்தும் புரதமும் மிக முக்கியமானவை. இவற்றின் குறைபாடு இருந்தால் தலைமுடி கொட்டும்.



தமிழ்நாட்டிலும் தஞ்சமடைந்துள்ளனர். கடந்த 1983ஆம் ஆண்டு முதல் 1989ஆம் ஆண்டு வரை 4 ஆண்டுகளில் கடும் சண்டை நடந்தது. அப்போது 1 இலட்சத்து 34 ஆயிரத்து 53 பேர் அகதிகளாக தமிழ் நாட்டுக்கு சென்றனர் எனக் கூறப்பட்டது.

இவர்கள் அனைவரும் ராமேஸ்வரத்தில் உள்ள மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டனர். இவர்கள் தமிழ்நாட்டில் பல்வேறு முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். தற்போது 117 முகாம்களில் 75,738 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தங்கியுள்ளதாக கூறப்படுகின்றது. மறுபுறமாக 2009ஆம் ஆண்டு வடபுலத்தில் நடந்த இறுதி யுத்தத்தின் போது சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாகினர். போர்முடிந்த பின்னர் இலங்கையில் சர்வதேசங்களின் உதவிகளுடன் இலங்கை அரசாங்கத்தால் புனர்நிர்மாணம், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் முதலியன இடம்பெற்றாலும் அகதிகள் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வேயாகும்.

அகதிகளின் பொதுவான வாழ்க்கை நிலையை நோக்கும்போது இவர்களின் அன்றாட அடிப்படை இன்னல்களையும் சிக்கல்களையும் உலக அரங்கிலும் உள்நாட்டு மக்கள் மத்தியிலும் புலப்படுத்துவதற்காக அனுஷ்டிக்கப்படுவதே இந்த அகதிகள் தினம் எனலாம். இதனை வேறு வகையில் குறிப்பிடுவதாயின் வாழ்க்கை சிதைக்கப்பட்ட நிலையில் உயிர் வாழ்தல் ஒன்றைத் தவிர வேறு எந்தப் பலனும் இல்லாத அகதிகளின் மனக்குமுறல்களை வெளியுலகம் உணரவேண்டும் என்பதே இத்தினத்தின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

ஆனால் உலகம் உணர்ந்ததா என்பது கேள்விக்குறியே! அழகான இச்சிறு பூமிக்கோளினைச் சீரழித்துவரும் அனைத்து யுத்தங்களுமொழிந்து, உலகெங்கும் சமாதானமும், அமைதியும், இன்பமும் மலர்ந்திட, அனைத்து அகதிகளின் வாழ்விலும் நல்ல ஒரு விடிவு காலம் வர இந்த உலக அகதிகள் தினம் உதவியாக இருக்குமெனில் சந்தோசமே!!

## தமிழ் நாட்டில் இலங்கை அகதிகள் நிலை என்ன?

ஐக்கிய நாடுகள் அவை கடந்த 11 ஆண்டுகளாக கடைப்பிடித்துவரும் உலக அகதிகள் தினம் இன்று. உள்நாட்டுப் போர், நாடுகளுக்கு இடையிலான போர், வறுமை, உயிர்பிழைக்க வேற்று மண்ணை நாட வேண்டிய நிலை என்று பல்வேறு காரணங்களால் வாழ்வைத் தேடவும், அதனைக் காப்பாற்றிக் கொள்ளவும் - எதிர்காலத்தில் மட்டுமே நம்பிக்கை கொண்டு - இருப்பையும், பிழைப்பையும் தேடி நாடற்று அலையும் மக்களை ஐ.நா. பிரகடனம் அகதிகள் என்று கூறுகிறது.

எங்கிருந்து வந்தாலும், எந்நாட்டவராக இருந்தாலும், எவ்வித பாகுபாடுமின்றி, அவர்களுக்கு அகதிகள் என்ற நிலையை அளிப்பதன்மூலம், அவர்களையும் மானுட பற்றோடும், உரிமைகளோடும் அரவணைக்க வேண்டும் என்று உலக நாடுகள் அனைத்தும் ஐ.நா.வில் 2000ஆவது ஆண்டு டிசம்பர் 4ஆம் திகதி ஒப்புக்கொண்டு ஏற்ற தீர்மானம் எண் 55/76 படி இந்நாள் உலக அகதிகள் நாள் ஆனது.

ஆனால் இதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்னரே ஐ.நா.வின் அகதிகள் தொடர்பான பிரகடனம் கையெழுத்தாகி வெளியிடப்பட்டது. அதில் அமெரிக்காவில் இருந்து ஐரோப்பிய நாடுகள் வரை கையெழுத்திட்டுள்ளன. ஆனால் இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகள் எதுவும் இதுவரை இந்த பிரகடனத்திலோ அல்லது 1967ஆம் ஆண்டின் வரைமுறையிலோ கையெழுத்திடவில்லை.

ஆபிரிக்காவில், தென் அமெரிக்காவில், ஆசியாவில் என்ற உலகின் மூன்றாவது உலக நாடுகள் அதிகமுள்ள 3 கண்டங்களில் உள்ள நாடுகளில்தான் போரில் இருந்து வறுமை வரையிலான பிரச்சினைகள் காரணமாக அகதிகள் பெருகியுள்ளனர். இந்தப் பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகள் அனைத்தும் தங்களை நோக்கிவரும் அகதிகளுக்கு - தன் நாட்டவருக்கு மட்டுமே உரிய வாக்குரிமை தவிர்த்து - ஐ.நா.வின் 1948ஆம் ஆண்டின் மனித உரிமைப் பிரகடனம் கூறும் அனைத்து உரிமைகளையும் அளித்துவருகின்றன. அகதிகளை பராமரிக்க ஆகும் செலவை உலக நாடுகள் தங்களுடைய பொருளாதாரப் பலத்திற்கு ஏற்றவகையில் ஐ.நா.வின் அகதிகள் பராமரிப்பு நிதிக்கு வாரி வழங்கி காப்பாற்றிவருகின்றன.

அகதிகளை பராமரிக்க ஐ.நா. அகதிகள் உயர் ஆணையர் எனும் பெரும் பொறுப்பு உள்ளது. அது அகதிகளை காப்பாற்ற ஆகும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. அதேநேரத்தில் அகதிகள் வருவதற்கான அரசியல், பொருளாதாரக் காரணிகளுக்குத் தீர்வுகண்டு, அகதிகள் என்ற நிலை நிரந்தரமாகாமல் காத்துவருகிறது ஐ.நா.வின் மனித உரிமை உயர் ஆணையர் அமைப்பு.

ஐ.நா.வின் அகதிகள் பிரகடனத்தில் கையெழுத்திட்ட நாடுகள் அனைத்தும், அந்தப் பிரகடனத்திற்கு இணங்க தங்கள் நாட்டில் அகதிகள் சட்டமியற்றி உள்ளன. ஆனால் இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் அப்படிப்பட்ட சட்டங்கள் ஏதுமில்லை. எனவே அகதிகளை பராமரிப்பதில் அவைகளின் தன்னிச்சையான செயற்பாட்டின் மீது எந்த வினாவையும் எழுப்ப முடியாத ஒரு நிலையை வைத்திருக்கின்றன.

அகதிகள் பிரகடனத்தில் கையெழுத்திடாத இந்த நாடுகள் ஐ.நா. அகதிகள் ஆணையம் செயற்பட அனுமதிக்கின்றன. ஆனால், இந்த நாடுகளின் வசதிக்கேற்பவே ஐ.நா. அகதிகள் ஆணையம் செயற்பட வேண்டும். இல்லையெனில் அகதிகள் ஆணையத்தின் செயற்பாட்டை நிறுத்திவிடுமாறு இந்நாடுகள் கூறிவிடலாம்.

இந்த நிலைதான் உன்னதமான அகதிகள் பிரகடனத்தின்படி, அனைத்து அகதிகளையும் சம அளவில் பாரமரிக்க இயலாத நிலைக்கு ஐ.நா. அகதிகள் ஆணையம் தள்ளப்படுகிறது.

இதற்கு சரியான எடுத்துக்காட்டாக தமிழ்நாட்டிலேயே ஈழத் தமிழ் அகதிகள் இதுநாள்வரை நடத்தப்பட்டதைக் கூறலாம். அப்போது ஆட்சி மாறிய நிலையில், இலங்கை அகதிகள் அனைவரும் கௌரவமான வாழ்வையும், நிலையான குடியிருப்பு வசதிகளையும், தூய குடிநீர், வேலை வாய்ப்பு, கல்வி வாய்ப்பு ஆகியன பெறுவர் என்று அறிவித்தது மட்டுமின்றி, அவர்களுக்கு தமிழ்நாட்டிலுள்ள ஏழை, எளிய மக்களுக்கு அளிக்கப்படும் அனைத்து நலத் . திட்டங்களும் நீடிக்கப்படும் என்று ஆளுநர் உரையில் தமிழக அரசு அறிவித்தது. ஆனால் நடைமுறையில் போதியளவு அமுலாகிறதா?

## 1983 இன் முன்னரும் பின்னரும்

மூன்றாம் உலக நாடுகளில் இருந்து மட்டும் அகதிகள் வருவதில்லை. வியட்நாம் போரின்போது பல அமெரிக்கர்கள் சுவீடனில் அகதித் தஞ்சம் கோரினார்கள். சோஷலிச கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் அகதிகள் மேற்கு ஐரோப்பாவிற்குள் வந்து குவிந்த வண்ணம் இருந்தனர். இலங்கை பொதுநலவாய அமைப்பு நாடுகளில் ஒன்றாக இருந்ததால், பிரிட்டிஷ் விசா கிடைப்பதும் இலகுவாக இருந்தது. அந்தக் காலங்களில் இலங்கை பிரச்சினைக்குரிய, அல்லது யுத்தம் நடக்கும் நாடாக அறியப்படவில்லை. அதனால் எல்லா நாடுகளும் விசா நடைமுறைகளை தளர்த்தி இருந்தன. இலங்கையில் தமிழருக்கு கேட்ட உடனேயே விசா கிடைத்தது. பயணச்சீட்டு வாங்குவது மட்டுமே பாக்கி. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், விஷயம் தெரிந்தவர்கள் மட்டுமே அவ்வாறு நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள். மேற்குலக நாடுகளில் அகதிகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுவதும், அதில் சிக்கனமாக செலவு செய்து மிகுதியை வீட்டுக்கு அனுப்புவதுமான விஷயம் ஒரு சில குடும்பங்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தது.

பெரும்பாலும் கொழும்பு நகரில் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள், யாழ்ப்பாணத்தில் பணக்கார விவசாயிகளின் பிள்ளைகள் போன்றவர்களே ஆரம்பத்தில் இவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள். இதனால் இப்போதும் சில ஐரோப்பிய நாடுகளில், குறிப்பிட்ட சில பிரதேசங்களில் இருந்துவந்த மக்கள் அதிகமாக இருப்பதைக் காணலாம். புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர் ஒன்றில் பிரதேசவாரியாக, அல்லது சாதிரீதியாக, அல்லது உறவுக்காரர்களாக, இவ்வாறு ஏதாவதொரு ஒற்றுமையைக் கொண்டிருக்க காணப்படுவர். குடும்பத்தில் ஒருவர் வெளிநாடு சென்றால், அவர் பின்னர் இன்னொரு குடும்ப உறுப்பினரை அழைத்துக்கொள்ள வேண்டும் என்பது எழுதப்படாத விதி. இப்போதும் சிலர் தமது குடும்ப உறுப்பினர்கள் முழுவதும் வெளிநாடு வந்துவிட்டார்கள் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்வதை கேட்கலாம்.

புலம் பெயர்வது பல வழிகளில் சாத்தியமாயிற்று. ஒரு மேற்குலக நாட்டிற்கு நேரடியாக விசா எடுத்து சென்று பின்னர் அங்கேயே தஞ்சம் கோருவது இலகுவான வழி. இருப்பினும் ஒரு சிறு பிரிவினர், இந்தியா சென்று, அங்கிருந்து பாகிஸ்தான், ஈரான், துருக்கி என்று நாடுவிட்டு நாடு போய், கடைசியாக மேற்கு ஐரோப்பா போய்ச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அந்தக் காலங்களில் தேசங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் குறைவு என்பதால், எல்லையில் வைத்தும் நுழைவு விசா கிடைத்தது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மட்டும் விசா கிடைப்பது கடினம். அதனால் திருட்டுத்தனமாக ரயிலில் பயணம் செய்ய நேர்ந்தது.

வெளிநாடு செல்வதென்றால், ஆங்கிலம் சரளமாகத் தெரியவேண்டும் என்று அப்போதும் பலர் நினைத்தார்கள். ஆனால் இந்தியா முதல் போர்த்துக்கல் வரை அரைவாசி உலகை சுற்றிவந்த பலருக்கு ஆங்கிலம் மிகக் குறைவாகவே தெரிந்திருந்தது. அதிகம் படித்திருக்கவும் இல்லை. ஆனால் வரைபடம் பார்த்து செல்லுமளவு பொதுஅறிவு இருந்தது. வாய் இருந்தால் வங்காளம் போகலாம் என்ற பழமொழிக்கேற்ப நடந்து கொண்டார்கள். அவ்வாறு அன்று பிறரை தம்முடன் கூட்டிச் சென்றனர். அந்த வாய்க்காரர்கள், பிற அப்பாவித் தமிழர்களை பணத்திற்காகவேயன்றி, தர்மத்திற்காக அழைத்துச் செல்லவில்லை.

ஐரோப்பிய நாடுகளுக்கிடையே சிறந்த ரயில் போக்குவரத்து உள்ளது. தேசங்களுக்கிடையே ஓடும் 'இன்டர் சிட்டி' ரயில்களில் உறங்கலிருக்கைப் பெட்டிகள் இருக்கும். இரவில் படுக்கையாக மாற்றப்படும் இருக்கைகளுக்கு கீழே ஒழிந்துகொள்வார்கள். அந்தப் பெட்டியில் இருக்கும் பயணிகள் பார்க்காத வரை, அல்லது காட்டிக்கொடுக்கா விட்டால் எல்லைகளில் தப்பிவிடலாம். இன்னொரு வழி ரயில் பெட்டிகளில் இருக்கும் மலசலகூடம். கூரையில் இருக்கும் சிறிய கதவை கழற்றிவிட்டு ஒரு ஆள் ஒழிந்துகொள்ளலாம். எல்லைகளில் சோதனைக்காக ரயில் நிற்கும்போது, மலசலகூடத்தில் யாரையும் இருக்க விடுவதில்லை. எங்காவது பிடிபட்டால் அந்த நாட்டிலேயே அகதித் தஞ்சம் கேட்டு விடவேண்டும்.

மேற்கு - கிழக்கு ஜெர்மனிகளின் பிரிவினையும் அகதிகளுக்கு உதவி செய்தது. முதலாளித்துவ ஜெர்மன் சமஷ்டிக் குடியரசும், சோஷலிச ஜெர்மன் ஜனநாயகக் குடியரசும் ஒன்றோடொன்று பகைமை பாராட்டிக் கொண்டிருந்தன. கிழக்கு ஜெர்மன் தூதுவராலயம் எந்தக் கேள்வியும் கேட்காமல் விசா வழங்கிக் கொண்டிருந்தது. கிழக்கு பெர்லின் விமான நிலையத்தில் வந்திறங்கிய உடனேயே, சில டாக்சிக்காரர்கள் தயாராக நிற்பார்கள். குறிப்பிட்ட தொகையை பேரம் பேசினால், மேற்கு பெர்லினுக்குள் கொண்டு போய்விடுவார்கள். இரண்டு பெர்லினுக்கும் இடையில் நிலக்கீழ் சுரங்க ரயில் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. இருப்பினும் அந்த சுரங்க ரயில் பாதையும் மேற்கு பெர்லினுக்குள் நுழையும் வழியாக இருந்தது.

அந்தக் காலத்தில், தமது நாட்டிற்குள் அகதிகள் வந்து குவிவதை கிழக்கு ஜெர்மன் அரசு நன்றாகவே அறிந்திருந்தது. ஆனால் வருபவர்கள் யாரும் தனது நாட்டினுள் தங்க மாட்டார்கள் என்பதையும், அனைவரும் மேற்கு ஜெர்மனிக்குள் நுழையவே விரும்புவர் என்பது தெரிந்த விடயம் தான். ஆகவே தனது எதிரியான மேற்கு ஜெர்மனிக்கு தலையிடி கொடுப்பதற்காக அகதிகளை அனுமதித்துக் கொண்டிருந்தது. மேற்கு ஜெர்மன் அரசோ, கம்யூனிசத்தில் வெறுப்புற்ற கிழக்கு ஜெர்மன் அகதிகள் வருவார்கள் என்று எதிர்பார்த்து எல்லைக்காவலை தளர்த்தி இருந்தது. இந்த சலுகையை மூன்றாம் உலக அகதிகள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நினைத்திருக்கவில்லை. இன்று பிற ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் தமிழர்களில் பலர், அன்று பெர்லின் வழியாக வந்து சேர்ந்தவர்கள்தான். அதனால் ஜெர்மனிக்கு 'பழசு' என்ற அடைமொழியும் உண்டு.

மூன்றாம் உலக நாடுகளை சேர்ந்த அகதிகள் அனேகமாக தத்தமது மாஜி காலனியாதிக்க எஜமானர்களை நோக்கியே செல்வது வழக்கம். உதாரணமாக பிரான்ஸில் அல்ஜீரிய அகதிகள், போர்த்துக்கல்லில் அங்கோலா அகதிகள். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக காலனியாதிக்க நாடுகளே தமது காலனிகளுக்கு சுதந்திரம் கொடுக்கும் போது, அங்கிருந்து எவராவது தனது நாட்டில் வந்து குடியேறினால் பிரஜாவுரிமை கொடுப்பார்கள். இந்தக் கவர்ச்சிக்கு மயங்கி பெருமளவு மக்கள் சென்று குடியேறும் வேளை, அந்த சட்டத்தை ரத்து செய்வார்கள். அதற்குப் பிறகு அகதியாக செல்வதுதான், புதிய குடியேறிகளுக்கு முன்னால் இருக்கும் தெரிவு. இரண்டாவது காரணம் காலனிய மொழி. மூன்றாவதாக பல உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு காலனியாதிக்க நாடுகளின் தலையீடு காரணமாக உள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகள், முன்னாள் காலனிய எஜமானான பிரிட்டனுக்கு சென்றபோது, அகதி தஞ்சம் கொடுக்காவிட்டாலும், நாட்டினுள் இருந்து வேலை செய்ய அனுமதி கிடைத்தது. இது காலப்போக்கில் உழைப்பை சுரண்ட வழிவகுக்கும் வதிவிடப்பத்திரம் கொடுக்கும் சட்டம் கொண்டுவர உதவியது.

இங்கிலாந்து அரசு ஆரம்பத்தில் மூன்றே மூன்று ஈழத் தமிழருக்கு மட்டுமே அகதி அந்தஸ்து வழங்கியது. அதில் ஒருவர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் மகன் காண்டீபன். எழுபதுகளில் யாழ் நகரில் இடம்பெற்ற, மேயர் துரையப்பாவின் கொலைதான் தமிழீழ போராட்ட வரலாற்றின் முதலாவது அரசியல் கொலை. கொலைச் சம்பவம் தொடர்பாக தேடப்படும் நபர்கள் சிலரின் படங்களை போஸ்டராக அடித்து இலங்கை பொலிஸ் துறை நாடு முழுவதும் ஒட்டியிருந்தது. அதில் காண்டீபனின் பெயரும் இருந்தது. அந்த போஸ்டரை வைத்துத்தான், காண்டீபனுக்கு அகதி அந்தஸ்து கிடைத்தது எனும் ஒரு கதையை அப்போது பலர் அறிவர்.

ஐரோப்பிய நாடுகளில் தமிழர்கள், இலங்கையில் அப்பாவி இளைஞர்கள் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்படுவதையும், சித்திரவதை செய்யப்படுவதையும் எடுத்துக்காட்டியே தஞ்சம் கோருவது வழக்கம். சிலர் அரசியல் படுகொலை யான துரையப்பா கொலையில் தேடப்படுவதாக சொன்னார்கள். பலருக்கு என்ன சொல்வதென்றே தெரிந்திருக்கவில்லை. ஏனெனில் அவர்கள் ஒன்றில் அரசியல் பற்றி எதுவுமே தெரியாதவர்களாக இருப்பர், அல்லது அரச அடக்குமுறைக்கு முகம் கொடுக்காதவர்களாக இருந்திருப்பர். இனப்பிரச்சினை என்றால் என்னவென்றே அறிந்திருக்காத அவர்களின் ஒரே எண்ணம், மேற்குலக நாடொன்றில் அகதி என்று சொன்னால் மட்டும்போதும் என்பதாக இருந்தது.

அப்போதெல்லாம் இலங்கையில் நடக்கும் சிறுசிறு சம்பவங்கள் சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்ப்பதில்லை. இதனால் இங்கிலாந்து தவிர்ந்த பிற ஐரோப்பிய நாடுகளின் அதிகாரிகளுக்கு இலங்கைப் பிரச்சினை பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை. ஈழத்தமிழரின் குழப்பகரமான தஞ்சக் கோரிக்கைகள் காரணமாக, பலர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். அப்போது மேற்குலக நாடுகள் இலங்கை அகதிகள் தொடர்பாக கரிசனை கொள்ளவில்லை. 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. 2009 வரை நடந்த இலங்கைப் போர் மேற்கு நாடுகளில் பல இலட்சம் பேருக்கு அகதி அந்தஸ்த்துக் கோரச் சந்தர்ப்பம் கொடுத்தது.







"வானம் என் வசம்
வையகம் என் வசம்
காலம் என் வசம்
யாவும் என் வசம்"

உரோம் மன்னன்
நீரோ கர்வத்தில்
கர்ஜித்தான்!

மது அவன் கண்களை
சிவப்பேற்றியிருந்தது
மாது அவன் கைகளில்
சிறைப்பட்டிருந்தாள்!

மதுவில் குளிப்பதும்
மங்கையில் மிதப்பதும்
நீரோவுக்கு பிடித்தது!

பிடில் இசைப்பதும்
பிடிக்கும்!
பிடிலாய் பெண்ணை
ரசிப்பதும் பிடிக்கும்!

பிடிலின் தந்திகளை வருடத்
தெரிந்தவனுக்கு
பெண்ணின் நரம்புகளை
வருடவும் பிரியம்.

பாவித்து முடித்த
மதுப்புட்டிகளை எறிவான்
பாவனை முடிந்ததும்
மங்கையரை எரிப்பான்!
"நீரோ தொட்ட
மேனியை - யாரும்
தொடக்கூடாது!"

கொளுத்தும் கொடூரத்துக்கு
நீரோ சொன்ன
காரணம் அது!

எழிலரசிகள் பலர்
நீரோவால் முகரப்பட்டு
தீயில் எரிந்து போயினர்!

பூக்களை கொய்து
தீயில் எறிவது
வக்கிரத்தின் உச்சம்!

இப்போது ஒருத்தி
அவன் கையில்
எப்போது சாவது
என்று தெரியாமல்!

தேன் எடுத்து
அவள் இதழிலில்
பூசினான்!

பின் தன் உதடுகளால்
அவள் இதழை ருசித்தான்!

"தேனும் தேனும்
கலந்தால்
தித்திக்கும்
நீயும் நானும்
கலந்தால்
இன்பம் சித்திக்கும்!
என்று உளறினான்.

அவள் ஒப்புக்காக
சிரித்தாள்!
உள்ளே சோகத்தில்
வெடித்தாள்!

தன் நாவினால்
அவள் இதழ்களை
தீண்டி
தேன் முழுவதையும்
துடைத்தான்!

"நாடுகள் என்
பிடியில்
நங்கைகள் என்
மடியில்
திசை எங்கும் என்
கொடி
இசைக்கட்டும்
என் பிடில்!

பிடிலை எடுத்து
தந்தி மீட்டினான்!

"நீரோ மன்னன்
பெயர் கேட்டால்
யார்தான் நடுங்கார்
பூமியில்?

எங்கு நோக்கினும்
ரோம் கொடி!
எங்கு பார்க்கினும்
ரோம் படை!
எங்கு காண்கினும்
ரோம் வீரம்.

சிந்து பாடடி குயிலே
பந்து தனங்கள் குலுங்க
வந்து ஆடடி மயிலே!

மதுவில் குளியடி
தேனில் ஊறடி
தேவை தீர்ந்ததும்
தீயில் குளியடி!"

நீரோ பாடியதின் கடைசி
வரிகள்
அவள் இதயத்தில்
கத்தியாய் பாய்ந்தன!

பிடிலை வைத்து விட்டு
அவளைப் பிடித்தான்!
இடையை அளவெடுத்தான்
தடைகளை அகற்றினான்!

மிருகம் ஒன்று
பசியாறியது!
பறவை ஒன்று
விருந்தானது!

தித்தித்த பின்னர்
திட்டமிட்டபடியே
தீயில் எறிந்தான்!

தொடர் கொடூரம் இது!
நிறுத்துவார் யார் உளர்?

இருந்தாள் ஒருத்தி
அவள் பெயர் நதீனா!
குளிர்ந்த பெயர்!

கண்டதும் காந்தமாக
நீரோவை இழுத்தாள்!

"ஆயிரம் மேனியரை
அணைத்திருக்கிறேன்!
ஆனந்த சுகமென
நினைத்திருக்கிறேன்.
பால் நிலா முகம்
பல கண்டிருக்கிறேன்!
வாள் முனை விழி
பல பார்த்திருக்கிறேன்!

அதே நான்தான்
அடித்து கூறுகிறேன்
நீதான் அழகி
நிலாவை ஜெயிக்கும்
கோலப் பேரழகி!"

நீரோவுக்கு
காதலியானாள் நதீனா.

காதலி கிடைத்த பின்னும்
களியாட்டத்தை நிறுத்த
வில்லை!
இரவுகள் தோறும்
ஒருத்தி எரிந்தாள்!

"பந்தாடுவேன் - உங்கள்
பந்தில் ஆடுவேன்
பந்தமாக்குவேன் - உங்களை
பஸ்பமாக்குவேன்!"
என்ற நகைத்தான்.

அளவுக்கு மீறினால்
அமுதமும் நஞ்சு!
வரைமுறை மீறிய
ஆணவமும் நஞ்சு!
நஞ்சை அவன்
உண்டான்!
நஞ்சு அவனை
உண்டது!

திடீரென்று ஒரு நாள்
நீரோ மன்னனுக்கு
முழுப் பைத்தியம்!

"மூட்டுக தீயை
எரியட்டும் ரோம்!"
என்று உளறினான்!

மன்னனின் உளறலும்
உத்தரவன்றோ!

படைகள் தீ
மூட்டின.
ரோம் எரிந்து
நீறாகிக் கொண்டிருந்தது!

"தீ... தீ... தீ
திக்கெட்டும் தீ!
தீயே அழகு
தீயே அமுது!"

நீரோ மகிழ்ந்து
பிடில் வாசித்தான்!

பொறுமைக்கும்
எல்லையுண்டு
கட்டுண்டு கிடந்தவர்
முட்டிட எழுந்தனர்!
"நீரோ ஒழிக!
நீரோவே ஒழிப்போம்!"

மக்கள் படை
மன்னனைத் தேடி
மடை திறந்த வெள்ளமாய்
கொந்தளித்து வந்தது!

வெளியே கூச்சல்
மன்னனோ மேய்ச்சலில்!
பிடிலை ஒரு கரத்தாலும்
நதீனாவை மறு கரத்தாலும்
மீட்டிக் கொண்டிருந்தான்!

நதீனா நிதானமாக
எழுந்தாள்!
அவன் கழுத்தை
வளைத்து உதட்டை கவ்வி
விலகினாள்!
இதுதான் இறுதி முத்தம்!
இனிச் சிந்தப்போவது
இரத்தம்!" என்றாள்

"என்ன கூறுகிறாய்
என் நிலாவே?"
என்றான் மன்னன்.
நீ நல்ல கலைஞன்
என்று நினைத்தேன்!
நீ ஒரு கொலைஞன்
என்று அறிந்தேன்!

குடி மக்களை இழந்தாய்
தேடிய பொருள் இழந்தாய்
நாடிய சுகம் இழந்தாய்
கொடுங்கோல் ஏந்தினாய்
நெடும் புகழ் இழந்தாய்!

என் கரம் தழுவிய
மேனியை
பலகரம் தீண்டி
கொள்வது சகியேன்!

என் கரம் கொண்டு
தண்டனை தருவேன்!
கடாரியை எடுத்து
நீரோவின் மார்புக்கு
நேரே எறிந்தாள்!

கொடூர மன்னன்
குருதியில் நீந்தினான்!

எங்கே கொலைஞன்?
மக்கள் படை
உள்ளே புகுந்தது!
நதீனாவின் இதழ்களில்
சோகப் புன்னகை!

*கூழும் குடியும் ஒருங்கிழக்கும் -கோல்கோடிச்*
*சூழாது செய்யும் அரசு*
அதிகாரம்: 56 குறள்:554




**சிந்தியா! 13ஆவது திருத்தம் தமிழ் மக்களின் காலை வாருமா?**

*து.புருஷோத்தமன், கொழும்பு -05.*

பழியை பதின்மூன்றின் மேல் போட வேண்டாம். தமிழ் மக்களின் கையில் 13ஆவது திருத்தம் கிடைத்தபோது அதை குரங்கின் கையில் பூமாலை கிடைத்ததைப் போல் ஆக்கிவிட்டார்கள். இப்போது "குரங்கு அப்பம் பிரித்த கதை யாகியிருக்கின்றது. இன்னும் என்ன நடைபெறவிருக்கின்றது என்று பொறுத்திருந்து பாருங்கள்.

**சிந்தியா! இலங்கை - இந்திய உடன்படிக்கையில் இந்தியாவின் பங்கு எவ்வளவு முக்கியமெனக் கருதுகிறீர்கள்?**

*எஸ்.பொன்ராகவன், மன்னார்.*

எல்லா முக்கியத்துவமும் இந்தியாவுக்குத்தான். மாகாணங்களை இணைக்கவும், காணி, பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்கியும், ஆயுத அடாவடித் தனங்களைக் கடந்து மக்களே தமது பிரதிநிதிகளை தெரிவுசெய்யவுமான பல நல்ல வாய்ப்பை ஏற்படுத்தியது இந்தியாவின் முக்கியத்துவம்தானே.

**சிந்தியா! யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் வன்னியில் நடைபெற்றுவருகின்ற அபிவிருத்திப் பணிகளில் கிளிநொச்சி - இரணைமடு விமானத்தளம் திறப்பு குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவு முக்கியமான நிகழ்வு அல்லவா?**

*கே.தமிழ்ச்செல்வன், கிளிநொச்சி.*



முக்கியம்தான். கூடவே தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கும் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரமானதும், கௌரவமானதுமான தீர்வையும் இக்கால கட்டத்துக்குள் வழங்கி தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற்றுக்கொள்வதோடு, தேவையற்ற வெளிநாட்டு சக்திகளின் தலையீடுகளை இல்லாமல் செய்திருந்தால் இவை இன்னும் முக்கியத்துவம் பெற்றிருக்கும்.

**சிந்தியா! ரஜினிகாந்த் இளம் நடிகைகளுடன் நடிப்பது பணத்துக்காகவா?, அல்லது புகழுக்காகவா?**

*த.குகாஜினி, கொழும்பு-15.*

திரைப்படத்தின் கதைக்காக, தயாரிப்பாளர் மற்றும் இயக்குநரின் தீர்மானத்திற்காக, கூடவே சமகால வர்த்தக நோக்கத்திற்காக, சினிமாவைப் பற்றியும் இன்னும் ரஜினிகாந்த் திரையில் தோன்றி தலையை அசைக்கின்ற பக்கம் நான்கு வில்லன்கள் வீசுப்பட்டுவிழுவதை பார்த்து கைதட்டிக் கொண்டாட, அவரது ரசிகர்கள் தயாராக இருப்பதையெல்லாம் புரிந்துகொண்டால் இப்படி கேட்கமாட்டீர்கள்.

**சிந்தியா! மலையக மக்கள் எப்போதுமே அடிமைப்படுத்தப்பட்ட மக்களாகவே நடத்தப்படுவதற்கு யார் காரணம்?**

*கே.பரசுராமன், கண்டி.*

நம்முடைய தொரை மாறும், முதலாளி மாறும் என்றிருந்ததில் இப்போது ரி.வி நிகழ்ச்சி நடத்துனர்களும் என்று பட்டியல் நீண்டு செல்கின்றது.

**சிந்தியா! சம்பியன் லீக்கில் இந்தியா அரையிறுதிக்கு முன்னே றியிருப்பது பற்றி..?**

*எஸ்.பாவலன், கொழும்புத்துறை.*

ஆட்டம் நன்றாகத்தான் இருக்கின்றது. இறுதியில்தானே சொதப்புவார்கள். வடிவேல் சொல்வதுபோல், ஆரம்பம் நல்லாத்தானே இருந்திச்சுது. அப்புறம் தானே கவுப்பானுக!

**சிந்தியா! அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எப்போதும் தனித்துவமானவராகவும், சிறந்த மனிதராகவும் வர்ணிக்கப்படுகிறாரே..?**

*செ.கோஷிகா, வவுனியா.*

அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருப்பதே தனித்துவமானதுதான்.

**சிந்தியா! வேற்றுக்கிரகத்தில் வசிக்கும் காலம் வரும் என்கிறார்களே. ஆனால் அதற்குரிய சந்தர்ப்பம் இன்னும், இனியும் ஏற்படாதா?**

*எம்.எச்.பஸ்னா, மட்டக்களப்பு.*

அவசரப்படாதீர்கள். இந்த உலக வாழ்வு இன்னும் முழுமையாக மனித குலத்தால் வாழப்படவில்லை.

**தனிமை என்பது ஒருவரை மன அழுத்தத்திற்கு உள்ளாக்குமா சிந்தியா?**

*ஆர்.சேரலாதன், நீர்கொழும்பு.*

நிச்சயமாக!

**சிந்தியா! அம்மா, காதலி இருவரில் யாரின் அரவணைப்பு சிறந்தது?**

*ப.ரேணுஜா, சின்னப்பண்டிவிரிச்சான்.*

அம்மாவின் அரவணைப்புக்கு, காதலியும் ஏன் மனைவியும்கூட சமாந்தரமாக ஒப்பிட முடியாது. அம்மாவின் மடியில் தலை சாய்த்திருந்தால் அதுதான் இணையற்ற ஆறுதல். காதலிகளும், மனைவிகளும் புரிந்துகொள்வார்கள்.


ஸ்ரீ ராம ஜெயம்



**ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா**

## மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470815 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவரெலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508



ஸ்ரீதரன்-சுகு

# கபடமும் வஞ்சகமும்



இலங்கை ஒரு தீவாகவும் சிங்கள மக்கள் அதில் அதிக பெரும்பான்மையாக இருப்பதால் சிங்கள மக்கள் மத்தியில் அதுபெரிதாக உணரப்படவில்லை. இன்று சிறுபான்மையின விரோதப் போக்குகள் அதிகரித்துள்ள நிலையில் இலங்கை பல்லினங்களின் நாடாக உறுதிப்படுத்தப்படும் தேவை உருவாகியிருக்கிறது. 13ஆவது திருத்தத்தின் கீழ் இரண்டு மாகாணங்கள் விரும்பினால் இணைந்துகொள்ளலாம் என்ற ஏற்பாடு. மாகாணங்களின் அதிகாரங்கள் தொடர்பில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் போது அனைத்து மாகாணங்களினதும் ஒப்புதல் பெறப்பட வேண்டுமென்ற ஏற்பாடு. பிரதானமாக சட்டம். ஒழுங்கு. நில அதிகாரம் போன்றவற்றை இல்லாமல் செய்யப்படுவதற்கான ஏற்பாடு அவசர அவசரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு மரணச் சடங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழான அதிகாரப் பரவலாக்கல் ஆரம்பித்த நாளிலிருந்து அதனை கால்தடம் போட்டு வீழ்த்து வதற்கு நடத்தப்பட்ட முயற்சிகள் கொஞ்சநஞ்சமல்ல. அதுவொரு இழி-வான வரலாறு. 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் ஒரு அதிகாரப் பரவலாக்கல் கட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் பங்களிப்பு குறிப்பிடப்பட வேண்டியது. இதனை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு அன்றைய ஐ.தே.க ஆட்சியாளர்கள் குறிப்பாக பிரேமதாசா- அரசு புலிகள் - ஜே.வி.பி எல்லோருடைய எதிர்ப்புக்கும் அப்பால் ஆட்சி கட்டமைப்பை நிர்மாணிக்க வேண்டியிருந்தது.

அதிகாரப்பரலாக்கலுக்கு எதிராக சிங்களத் தரப்பாலும், தமிழ் தரப்பாலும் நடத்தப்பட்ட கூத்துக்கள் புத்தி- தூர திருஷ்டியின்மை இங்கு பதிவு செய்யப்படல் வேண்டும். மரணங்கள், சேதங்கள், வன்மமும், குரோதமும் நிறைந்த ஆவேச கூச்சல்களுக்கு நடுவில்தான் வடக்கு, கிழக்கு மாகாண அரசாங்கத்தை தாபிக்க வேண்டியிருந்தது. ஆனால் 13ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரங்களை அனுமதிப்பதற்கு பிரேமதாசா அரசு மனப்படவில்லை.

13ஆவது திருத்தத்தில் அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு அதிகாரத் திற்காகவும் போராட வேண்டியிருந்தது. இந்திய அமைதிப்படை பிரசன்னமான நிலையிலேயே பெரும் சவால்கள் பிரச்சினைகள் மத்தியில் மாகாண அரசை நகர்த்த வேண்டியிருந்தது. விவசாயம், மீன்பிடி, போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் ஒவ்வொரு துறைகளிலும் பிரச்சினைகள் எதிர் நோக்கப்பட்டன. பொலிஸ், காணி அதிகாரங்கள் பற்றி சொல்லவே வேண்டாம். இறுதியாக இந்திய அமைதிப்படை மாகாண பொலிசுக்கு பயிற்சி அளிக்கத் தொடங்கிய பின்புதான் அதனை அரைகுறையாக-வேனும் ஒப்புக்கொள்ள பிரேமதாசா அரசு முன்வந்தது. அதுவும் இந்தியாவில் உள்ளதுபோல் மாநிலங்களுக்கான தனியான காவல்துறை அல்ல. இலங்கையின் ஒரு உதவி பொலிஸ் மா அதிபரின் கீழ் இந்த பொலிஸ் செயற்பட்டது. அது பிரஜைகள் தொண்டர் படை என அழைக்கப்பட்டது. நிலம், நீர்ப்பாசனம் தொடர்பாக இழுபறிகள் நிலவின. வெலிஓயாவுடன் திருமலை, வவுனியா முல்லைத்தீவின் பகுதிகளை இணைக்கும் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டன. இந்த நிலையில்தான் 19ஆவது அம்சக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு ஒரு வருடத்தில் இது செயற்படுத்தப்படாத விடத்து சுதந்திர ஈழம் என்ற பிரகடனம் வரை சென்றது. இந்நிலை துரதிர்ஷ்டவசமானது.

13ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரங்களை உண்மையான அர்த்தத்தில் பகிர்ந்தளித்தால் பிரச்சினைகளே கிடையாது. ஆனால் அதை வெட்டி - குறுக்கி- சிதிலமாக்கும் விடயம்தான் எரிச்சலடைய வைக்கிறது. ஒரு நாட்டின் ஜனநாயகத்திற்கு அழகு, அங்கு சிறுபான்மை சமூகங்கள், நலிவுற்றவர்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதிலேயே தங்கியிருக்கிறது. ஆனால் பிரபாகரனும்- பிரேமதாசாவும் அண்ணன் தம்பி உறவு கொண்டாடி இந்திய அமைதிகாப்புப் படை வெளியேற வேண்டும் என்றார்கள். அதற்குப்பின் வடக்கு,கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தாமல் 20 வருடங்கள் ஸ்தம்பிதமடைந்தது. எந்தப் பிரச்சினைகளை முன்வைத்து எந்த பிரதேசங்களை பிரதானப்படுத்தி மாகாண சபை முறைமை கொண்டு வரப்பட்டதோ அந்த மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் இல்லையென்று ஆகியது.

யுத்த காலத்திலும் சரி. யுத்தத்திற்கு பிந்திய காலத்திலும் சரி ஓய்வுபெற்ற அல்லது பதவியிலிருந்த படையதிகாரிகள் சிவில் நிர்வாகத்தின் மேல் உட்கார்ந்திருந்தார்கள். இன்னும் அதுதான் நிலை. கிழக்கில் இனப்பரம்பல் கடந்த 20 வருடங்களில் தீவிர மாற்றம் பெற்றது. நீதிமன்றத் தீர்ப்புக்கு இணங்க வடக்கும்-கிழக்கும் பிரிக்கப்பட்டுவிட்டது. தற்போது அதே பேரினவாத சக்திகள் 13ஆவதுக்கு மரணச்சடங்கு நடத்த முயற்சிக்கின்றனர். அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான ஆவேசம், வடக்கு-கிழக்கு மாகாண சபை கலைப்பு, பிரிப்பு, தேர்தல் இல்லை என்பவற்றுடன் நிற்கவில்லை. பிரதம நீதியரசரை தூக்கியெறியும் அளவுக்கே 13ஆவது வெறுப்பை ஊட்டியது.

மாகாணங்களின் அதிகாரங்களை மத்திய அரசு கவர்ந்துகொள்ள கிராம எழுச்சி (திவிநெகும) சட்டமூலம் கொண்டுவரப்பட்டபோது, இதனை சாத்தியமாக்குவதற்கு அனைத்து மாகாணங்களினதும் அனுமதியை பெறவேண்டும் என்ற தீர்ப்பே ஆட்சியாளர்களை சினங்கொள்ள வைத்தது. அதிகாரப் பரவலாக்கல் கட்டமைப்பை பலமிழக்க வைக்கும் நடவடிக்கையால் இலங்கையின் நீதித் துறை ஆட்டம் காணச் செய்யப்பட்டது. அதிகாரப் பரவலாக்கல் நிகழவேண்டிய பிரதான பிரதேசத்தில் சிவில் நிர்வாகத் துக்கு பதிலாக படைகளின் பிரசன்னமும் சிவில் விடயங்களில் படையினரின் செல்வாக்கும் அதிகரித்திருக்கிறது.

60 ஆண்டுகளுக்கு மேலான போராட்டத்தில் என்ன பலன் என்பதற்கு இதுதான் பதிலாக இருக்கிறது. இந்தப் பதில் மக்களை விரக்தியுறவும், சினமுறவும் செய்யும். சமூகங்களை ஒன்றிணைக்க உதவாது. கடந்த 20 வருடங்களில் நிதி, சுகாதாரம், கல்வி, போக்குவரத்து இதர துறைகளில், மத்திய அரசின் தலையீடு மிகையாகவே காணப்பட்டது. நிலத்தைப் பற்றி சொல்லவே வேண்டாம். அதிகாரப் பரவலாக்கல் முறையொன்று இருக்கிறதென்ற பிரக்ஞையே இருக்கவில்லை.

தென்பகுதியில் சில மாகாணங்களில் இளம் மாகாண சபை உறுப்பினர்கள் மத்தியில் அதிகாரப் பரவலாக்கல் பற்றிய அக்கறைகள் இருந்தன. ஆனால் அவை பொதுவானவையாக இருக்கவில்லை. நாட்டில் கட்சிகளின் பலத்தை அளக்கும் சோதனைக்கூடங்களாகத்தான் அவை இருக்கின்றன. பிராந்தியங்களுக்கு அதிகாரங்கள் என்ற கருத்து ஊக்குவிக்கப்படவில்லை. எனவே இயல்பாகவே அதுவொரு சுமையாக அமைந்தது. உண்மையில் தமிழ், முஸ்லீம், மலையக மக்களே அதிகாரப் பரவலாக்கல் தேவைப்பட்ட மக்களாகவும், அதை உணர்ந்தவர்களாகவும் காணப் பட்டார்கள்.

இலங்கை ஒரு தீவாகவும் சிங்கள மக்கள் அதில் அதிக பெரும்பான்மையாக இருப்பதால் சிங்கள மக்கள் மத்தியில் அதுபெரிதாக உணரப்படவில்லை. இன்று சிறுபான்மையின விரோதப் போக்குகள் அதிகரித்துள்ள நிலையில் இலங்கை பல்லினங்களின் நாடாக உறுதிப்படுத்தப்படும் தேவை உரு வாகியிருக்கிறது. 13ஆவது திருத்தத்தின் கீழ் இரண்டு மாகாணங்கள் விரும் பினால் இணைந்து கொள்ளலாம் என்ற ஏற்பாடு, மாகாணங்களின் அதிகாரங்கள் தொடர்பில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் போது அனைத்து மாகாணங்களினதும் ஒப்புதல் பெறப்பட வேண்டுமென்ற ஏற்பாடு, பிரதானமாக சட்டம், ஒழுங்கு, நில அதிகாரம் போன்றவற்றை இல்லாமல் செய்யப் படுவதற்கான ஏற்பாடு. அவசர அவசரமாக மேற்கொள்ளப்படுகின்றன. இது கடந்த வொரு அமைச்சரவை கூட்டத்தில் தீவிர கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லீம் காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள், ஈ.பி.டி.பி. மற்றும் ஜனநாயக உணர்வுள்ள அமைச்சர்கள் இதற்கு எதிர்ப்பை காட்டத் தொடங்கிவிட்டார்கள். வடக்கு மாகாண சபை தேர்தல் நடத்துவதற்கு முன்னர் 13ஆவது திருத்தத்தை வெறும் கோதாக்கு வதற்கான முயற்சிகளை சகல உள்ளூர், சர்வதேச வழிகளிலும் தோற்கடிக்கப்பட வேண்டும். 13ஆவதன் முக்கியத்துவம் தமிழர்களுக்கோ அல்லது தமிழ் தலைமைகளுக்கோ விளங்காமல் போனது இன்று கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்வதும் அவ்வாறுதான்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையை ஒற்றுமையாக இயக்க வாய்ப்புப் பெற்றிருந்தால் ஐக்கிய இலங்கைக்குள் ஒரு மாகாண அரசை ஸ்தாபிப்பதற்குரிய வசதிகளையும், அனுசரணைகளையும் கொண்டிருந்த நாம் காலகதியில் அதிகாரப் பரவலாக்கல் கட்டமைப்பை நிலை நிறுத்தியிருப்போம். இலங்கையின் சகல சிறுபான்மை சமூகங்களுக்கும் அது நன்மை பயப்பதாக அமைந்திருக்கும். ஆனால் இன்று கற்பனைக்கெட்டாத அளவு உயிர்களை பலிகொடுத்து பேரழிவுகளை சந்தித்து அறுத்துக் கொட்டப்பட்ட வடக்கு மா-காண சபைக்காக காத்திருக்கிறோம்.

போகமுடியாத கற்பனை இடத்துக்கு வழி சொல்பவர்களால், சுயநலமும்- பேரவாவும் - சமூகக் கரிசனை- பொறுப்புணர்வு எதுவுமற்ற - முட்டாள் பேர்வழிகளால் வந்த வினை இது. 13ஆவதின் அதிகாரங்களை முழுமையாக அமுல்படுத்துவதற்கு அதிகாரங்கள் மீளவும் பறிக்கப்படாத நிலையை அடைவதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபடல் வேண்டும். அதற்கு அனைத்து சிறுபான்மை சமூகங்களுடனும், அதிகாரப் பரவலாக்கலை ஆதரிக்கும் தெற்கின் ஜனநாயக இடதுசாரி சக்திகளுடனும் கரம் கோர்க்கவேண்டும்.

# நடுவுல 2 பட்டனைக் காணோம்....!

கின்னியா அமீர் அலி



சுவர்க் குளத்தில்
வைறக்கூ முதலைகள்
நீந்திக் கொண்டிருந்தன.
கடிகாரத் தோணிக்குள்
முள்ளனும் முள்ளியும் ஒன்றாக.....
மணி பன்னிரெண்டாயிற்று.
பகல்
டாடி மம்மி வீட்டில் இல்ல..
தடைபோட யாரும் இல்ல...
'மெளனிக்கா'வுக்கொரே கொண்டாட்டம்.
அவள் ஒரு அழகிய பொன்வண்டாட்டம்.
சுற்றிப் பறப்பதில் அலாதி சுகம் அவளுக்கு.
சற்றே சரிந்த குழலே அசைய....அவள் அசைய...
அசையாத மனமும் அசையும்.
அவ்வ்வ்வோ அழகு!
தெருத்தொங்கல் சென்று அம்மா மறைய-
ஓடிப் போய் ஜன்னலைத் திறந்தாள் மெளனிக்கா.
மேலதிக ஆசையுடன் முன் வீட்டை நோக்கினாள்.
இன்றும் ஏமாற்றம்.
அவள் மேலதிக ஆசையுள்ள கோபியின் வீடு பூட்டிக் கிடந்தது.
உலோபியின் உள்ளத்தைப் போல!
கோப்பீ.... ஜன்னலைத் திறடா செல்லம்......!
ஒத்திகை பார்த்தன உதடுகள்...
ஆனால் உச்சரிக்கவில்லை.
காரணம் -
அம்மாவின் எச்சரிக்கை- வில்லை
போனை எடுத்தாள்.
'சிம்'மின்றிச் செத்திருந்தது செல்.
அவள் மீது நம்பிக்கையில்லாத அம்மா மீது
ஆத்திரம் வந்தது.
இப்போது அவளுக்கு -
...............வந்தது.
கழித்து வந்தாள்.
தன் வீட்டு ஜன்னல்
திறக்கப்படும் போதெல்லாம்
முன் வீட்டு ஜன்னல்
மூடப்படுவதை நினைக்க நினைக்க
கோபியின் அம்மா மீது அவளுக்கு கோபம் வந்தது.
இன்றைக்கு எப்படியாவது அவனைப் பார்த்தே தீரணும்......
தாழ்ப்பாளைத் தள்ளினாள்.
பூட்டுப் போட்டுப் பூட்டிப் போட்டுப் போயிருந்தாள் அம்மா.
மகள் அவனோடு ஓடிப்போய் விடுவாளோ என்ற பயம்.
மெளனித்த மெளனிக்கா யோசித்தாள்.
குசினிப் பக்கமாகச் சுவரோரம் கதிரை ஒன்றைப் போட்டுப் பக்கத்து வீட்டு மதில் தாண்டிப் போக வேண்டியதுதான் வேறு வழி......?
பறந்தால் தானே கிளி!
சிறையை உடைத்துத் திற.......
சிறகை விரித்துப் பற..........
இன்னும் இருபது நிமிஷங்களில் அம்மா வந்துவிடுவாள்.
இனி யோசிக்க நேரமில்லை.
இனி என் மகளோட ஒண்ட மகனப் பார்த்தேன்......
அவ்வோதான்.....வழக்குப் போடுவன்... அம்மா கோபியின் அம்மாவிடம் ஒரு நாள்....
கோபமாகக் கத்தினாளே.......
சபருள்ளா லோயர்கிட்டப் போய்ச் சொல்லுவன்.........
இல்ல.....ஒன்னக் கொல்லுவன்......
அம்மா செஞ்சாலுஞ் செய்வா......
தனக்கு மிகவும் விருப்பமான மஞ்சள் சட்டையை அணிந்து கொண்டாள்.
இதையெல்லாம்...கதவிடுக்கில் கன் வைத்துக் கவனித்துக் கொண்டிருந்தான் கோபி.
நீல நிற நீளக்காற்சட்டையோடு அந்த மஞ்சள் நிலா வந்து நின்றது நிலத்தில்!
அவன் பறந்தான் வானத்தில்!
கொள்ளை அழகில் நின்றாள் மெளனிக்கா
கோபியின் மனது இனி மெளனிக்கா.(து).
அவளது ஒவ்வொரு அசைவுகளையும் பார்வையாலே படம் புடிச்சான்.
அம்மாட மண்ணாங்கட்டி ......
செல்போனை தூக்கி எறிந்தாள் மெளனிக்கா.
இனியென்ன.....
யார் அழைத்தாலும் நீங்கள் அழைத்த இலக்கம் பாவனையிலாவது கீவனையிலாவது.......
செல்போனை நொட்டியவள் இப்போது பேனாவை எடுத்தாள்
அவளுக்காகவே பாடுவது போல அடுத்த வீட்டு வானொலி பாடியது:
காதல் கடிதம் தீட்டவே
மேகம் எல்லாம் காகிதம்!
வானின் நீலம் கொண்டு வா!
பேனா மையோ தீர்ந்திடும்
கதிரையை இழுத்துக் கொண்டு
குசினிப் பக்கம் போனாள்
பின் வீட்டு மாமி சக மாமாக்கும் பே.. பே...
ஆடு வராமலிருக்க கட்டியிருந்த அந்தக் கால்வாசிக் குட்டிச் சுவரைத் தாண்டினாள்.
முன் வாசல் தெருவோர மதிலோரம் சாய்ந்து நின்றாள்.
ஏறக்குறைய நம்ம கோபியும் மதில் ஏறாக் குறையே...
இவனும் கிட்டப் பார்வை ஆன்டிக்கும் பே.. பே..
தூரப் பார்வை 'ஆன்டனுக்கும்' பே.. பே.....
பகீரதப் பிரயத்தனத்தோடு தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத கோபியும் ஓடி வந்து, தன் வீட்டுச் சுவரோரம் தேய்ந்து நின்றான்.
அப்புறமென்ன.....
விழிகள் மேடையாம்....
இமைகள் திரைகளாம்....
பார்வை நாடகம்........
அரங்கிலேறுதாம்...
மெளனிக்காவின் மஞ்சள் சட்டையில் மின்னிக்கொண்டிருந்த.....
ஐந்து பட்டன்கள் சட்டென்று அவன் கண்ணில்பட்டன.
அப்படியே 'மெளனி'யை இறுக அணைத்து........
அனைத்து ஆசைகளும் அணி வகுத்தன.
மெதுவாக நகர்ந்தான்.
சுற்றும் முற்றும் பார்த்தான்.
அங்கும்-
டாடி மம்மி வீட்டில் இல்ல...
தடை போட யாரும் இல்ல......
விழிகளால் கேட்டான்:
'விளையாடு வோமா புள்ள......'
'மொகறயப் பாரு' என அவள் முறைத்தது, மூஞ்சியில் தெரிந்தது.
சுருக்கிச் சிரித்தாள்! அன்புதான்!
அவள் என்னதான் பகிடித்தாலும், கோபிக்காத தன்
கோபிக்காக.......
அவள் எல்லாம் தரத் தயார்தான்.....
ஆனால்.... தாயார்தான்?
இரு வீட்டுத் தாய்களும் சண்டை.
ஆனால்
இரு வீட்டு நாய்களும்
ஒரு வீட்டில்!
ஆறறிவுக் காரறிவு கொடுப்பாரோ?
இனியும் தாமதிக்க கூடாது.
அம்மாக்கள் இல்லை இல்லை.....
அம்- மாக்கள் வந்துரும்........
இனிப் பொறுமையில்லை.
அம்மாவுக்குத் தெரியாமல் உம்மாவுக்குத் தயாரானான்.
அவள் இவனையே ஆசையோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.
"இன்னும் பார்த்துக் கொண்டிருந்தால் என்னாவது.....?"
இந்த பார்வைக்குத் தானா பெண்ணானது.....?
(நன்றி: இ.ஓ.கூ)
கோபியின் வேகம் அதிகமாகியது.
நேரம் செல்ல......
பக்கத்து வீட்டு ரேடியோவிலிருந்த அறிவிப்பாளர் ஏ.எல் ஜபீரும் ஒலித்த பாடலோடு விடை பெற்றுச் செல்ல....
செல்லச் சிறுக்கி மெளனிக்காவை அணைத்துச் செல்ல ஓடிப் போனான் கோபி.
ஆசை யாரைத்தான் விட்டது?
காலம் கெட்டது. வயசா கேட்டது?
ஓடி வந்த கோபி மெளனிக்காவை அப்படியே இறுக அணைத்தான்.
அவள் கதற அவன் குதற......
அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் சத்தம் கேட்டு வந்து பதற.....
மெளனிக்காவின் சட்டையில் நடுவுல ரெண்டு பட்டனைக் காணோம்...!
மயக்கம் போட்டு விழுந்தான் கோபி.
"போற எடத்துக்குப் புள்ளயயுங் கூட்டிக்கிட்டுத் தொலய வேண்டியதுதானே......
வந்ததும் வராததுமாகச் சீறிச் சினந்து கோபியை ஏற்றிக் கொண்டு ஆட்டோவில் பறந்தாள் அவனது அம்மா.
"....பூட்டப் போட்டுப் பூட்டிப் போட்டுத்தானேடி தொலஞ்சன்.........
சனியனே எப்புடி வெளில ஓடின...' மூதேவி" தொண்டை வீங்க கத்தினாள்.
முதுகில் - ஓங்கிக் குத்தினாள்.
"வேணாம்மா... வேணாம்மா... அம்மா... அம்மாவோவ்...தேம்பித் தேம்பி அழுதாள் மெளனிக்கா. அவளது அழுகையில் இடையிடையே... இப்படிக் கேட்டது. "ஏன்ட பொத்தாங்.. ஏன்டா பொத்தாங்..." "பொத்தான் சனியன் செத்தான்.." என்ற அம்மா..
"கோபிக்கு ஏதாச்சும் ஆகிடுமா... மாமி..?" எனக் கேட்டாள்.
மருந்துக்கு மலத்தோட வந்திரும் என்றாள்." மாமி...
"மதில்ல கால் சறுக்கி விழுந்தா.... என்னடி பண்றது...
சனியன்... சனியன்... அடி அடி என்று அடி விழுந்தது
கோபியை விட மூன்று மாதங்களே மூப்பான மெளனிக்கா - அக்காக்கு.
சட்டென்று விழுங்கிய பட்டன்கள் ரெண்டும் பட்டென்று வெளியே வந்து விழ...
இரண்டு வயதான கோபிக்கு மருந்து கொடுக்கப்பட்டது - 'கக்கா'க்கு!

## உங்ளாகல முடியுமா?

உகங்ளால் இப் பகக்த்தை பக்டிக முந்டிதால்,
உகங்ளை பாட்ராடியே ஆக வேடுண்ம்.
100குக் 55 மகக்ளால் மடுட்மே இபப்டி பக்டிக முயுடிம்.
நீகங்ள் எபப்டி தைஇ பக்டிறீகிகர்ள் என்று
உளாகங்ளேயே நபம்ப் முயடில்லைவியா?
ஆசச்ரிமாயுன ஆறற்ல் கொடண்து மதனினின் ளைமூ.
ஒரு ஆய்ராயிசில், கேபிம்ட்ரிஜ் பகல்க்லைழகம்
இந்த உமைண்யை கடுண்பிப்டித்ள்துளது.
எத்முக்துகள் எந்த வசையிரில் உளள்து எபன்து
முகிக்மியல்லை. முதல் எத்முதும் கசிடையாக
உள்ள எத்துமும், சயாரின இத்டதில் உளள்தா
எபன்தை மடுட்ம் பாத்ர்தால் போதும்.
எனாதல் எறான்ல், மதனினின் மூளை முதல்
எத்முயுதைம், கைடசி எத்முயுதைம் மடுட்மே பக்டிகும்.
பாக்யுகிள்ள எத்தழுதுகக்ள் தாகனாவே உவாள்பங்கப்டும்.




சேவகன் -01 :- "காணாமல் போன நம் மன்னரின் குதிரையை எப்படிக் கண்டுபிடித்தார்கள்.
சேவகன் -02 "மன்னரின் முதுகு போலவே குதிரையின் முதுகில் அம்பு தைத்த காயங்கள் இருந்ததை வைத்துத்தான் கண்டுபிடித்தார்களாம்.



## காதல் பயம்

**காதலி:-** அன்பே இருட்டிவிட்டது பயமாக இருக்கின்றது.
**காதலன்:-** நான் உன்னருகில் இருக்கையில் உனக்கேன் பயம்.
**காதலி:-** அதனால்தான் பயமாக இருக்கின்றது.

ஊரோடி




**கணவனால்** தீமூட்டப்பட்டு மனைவி படுகொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மரண சம்பவம் ஒன்று கடந்த மாதம் 19 ஆம் திகதி இறக்குவானை பொலிஸ் பிரிவில் ஹொரமுல்ல என்ற இடத்தில் நடந்தேறியது.

நான்கு பிள்ளைகளின் தாயான இறக்குவானை ஹொரமுல்ல தோட்டத்தைச் சேர்ந்த 30 வயதுடைய ராமன் புஸ்பராணி என்ற தாயே இவ்வாறு தீயினால் உடல் கருகி உயிரிழந்தும் போனார். இந்தச் சம்பவமானது ஹொரமுல்ல தோட்ட மக்களை பேரதிர்ச்சிக்கும் சோகத்துக்கும் உள்ளாக்கியுள்ளது.

பெண்ணொருவர் கடும் தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிருக்கு போராடிக் கொண்டிருப்பதாக கடந்த மாதம் 19 ஆம் திகதி இரவு 9.30க்கு பொலிஸ் அவசர அழைப்பு பிரிவான 119க்கு அழைப்பொன்று கிடைக்கப் பெற்றிருந்தது.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இறக்குவானை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் குழு சம்பவ இடத்துக்கு விரைந்தது.

அங்கு பெண்ணொருவர் கடுமையாக தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிருக்கு போராடிக்கொண்டு இருந்துள்ளார். யாரும் அந்தப் பெண்ணைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளை எடுத்ததாக தெரியவில்லை என்பதை அறிந்த பொலிஸார்,


# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

## ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் திருக்கோயில்

### யாழ்ப்பாணம் - நீராவியடி





விநாயக மெய்யடியார்களே! யாழ்ப்பாணம் நீராவியடியில் விரும்பி வீற்றிருந்து திருவருள் பாலித்துவரும் ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகப் பெருமானின் திருத்தேர் வெள்ளோட்ட விழா, மங்களகரமான விஜய வருஷம் ஆனித்திங்கள் 7ஆம் நாள் (21.06.2013) வெள்ளிக்கிழமை அனுஷ நட்சத்திரமும் திரயோதசி திதியும் கூடிய சுபநேரத்தில் பிற்பகல் 02.00 மணியளவில் காரைநகர் நவாலியூர் சிற்பாச்சாரியார் விஸ்வப் பிரம்ம ஸ்ரீ நடராசா சிவபாலன் அவர்களதும் அவரது குழுவினரதும் கை வண்ணத்தில், நீராவிப்பிள்ளையார் எண்ணப்படி உருவாக்கப்பட்ட புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நிகழத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் யாவரையும் தவறாது கலந்துகொண்டு எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் திருவருளைப் பெறுவீர்களாக. வெள்ளோட்ட விழாவைத் தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பு இடம்பெறும்.

**தேர்த்திருவிழா - இரதோற்சவம்**

ஆனித்திங்கள் 8 ஆம் நாள் 22.06.20013 சனிக்கிழமை

காலை 06.45 மணி - வசந்த மண்டப பூஜை

காலை 08.30 மணி - தேர் இருப்பைவிட்டு அசைத்தல்

**தேர்த்திருவிழாவின் போது அன்னதானம் நடைபெறும்**

ஊடக அனுசரணை: குட்டித்தம்பி குடும்பம் (Basel, switzerland)

Kuddythambyfamily@yahoo.com

0778872828 / 0713833383


# மனைவி தீ மூட்டி கொண்டாளா? கணவன் தீ மூட்டி கொன்றாரா?

உடனடியாக அந்தப் பெண்ணை இறக்குவானை வைத்தியசாலைக்கு கொண்டுசென்றனர்.

அதேவேளை கால்பகுதி மாத்திரம் ஓரளவுக்கு எரிந்த நிலையில் இருந்த அப்பெண்ணின் கணவரான மூர்த்தியை சந்தேகத்தின் பெயரில் கைது செய்த பொலிஸார் அவரையும் வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் பொலிஸின் பாதுகாப்புடன் வைத்து வாக்குமூலங்களை பெற்றுக்கொண்டனர்.

மனைவியான புஸ்பராணி தானே தீ மூட்டிக்கொண்டு தற்கொலைக்கு முயன்றதாகவும் அவரைக் காப்பாற்றச் சென்றபோதே தனது உடலில் தீ காயங்கள் ஏற்பட்டதாகவும் அந்த சந்தேக நபர் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

ஆனால் சந்தேக நபரின் கால் பகுதியில் மாத்திரம் எரிகாயங்கள் காணப்பட்டமையினால் அவரின் வாக்குமூலத்தினை பொலிஸார் நம்பவில்லை.

சந்தேக நபரின் மனைவியான புஸ்பராணி கடும் தீக்காயங்களுக்கு உள்ளாகி இருந்தமையினால் அவரிடம் இச்சம்பவம் தொடர்பிலான வாக்குமூலங்கள் எதனையும் பொலிஸாரால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

அத்தோடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட புஸ்பராணி மறுநாள் 20 ஆம் திகதி அதிகாலை வேதனைகளோடு பல உண்மைகளை சுமந்தவராய் இவ்வுலகத்தை விட்டே பிரிந்துசென்றாள். ஆனால் இந்தச் சம்பவத்தின் பின்னணி என்ன?, புஸ்பராணி தற்கொலைசெய்து கொண்டாரா? அல்லது கொலை செய்யப்பட்டாரா? என்ற உண்மைகளைத் தேடி இறக்குவானை பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப்படுத்தினர்.

சந்தேக நபரான மூர்த்தியிடம் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்ட பொலிஸார் அவரின் பிள்ளைகளிடமும் அயலவர்களிடமும் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டனர். அத்தோடு சம்பவ இடத்திலிருந்து மண்ணெண்ணெய் கான் ஒன்றினையும். அரைவாசி எரிந்த நிலையில் இருந்த சாரம் ஒன்றினையும், மற்றும் தீப்பெட்டி உள்ளிட்ட பொருட்கள் பலவற்றையும் தடயங்களாக கைப்பற்றினர்.

சந்தேக நபரான மூர்த்தியே புஸ்பராணி மீது தீமூட்டியதாக சந்தேக நபரின் மூத்த மகன் பொலிஸில் வாக்குமூலம் கொடுத்துள்ளான். அத்தோடு அயலவர்கள் வழங்கிய வாக்குமூலங்கள் மற்றும் பல தடயங்களுடன் பார்க்கின்றபோது மூர்த்தியே இக்கொலையினை புரிந்திருக்க வேண்டுமென்ற சந்தேகம் பொலிஸாருக்கு அதிகரித்தது.

அதனடிப்படையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த மூர்த்தி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதுடன் தற்போது விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் மகனிடமும் பொதுமக்களிடமும் பெற்றுக்கொண்ட தகவல் மற்றும் விசாரணைகள் மூலம் பெற்றுக்கொண்ட பல்வேறு தகவலின் அடிப்படையில் இறக்குவானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.எம்.ஜே.ஆரியரத் சம்பவம் தொடர்பாக இவ்வாறு விபரித்தார்.

சந்தேக நபரான மூர்த்திக்கு இறக்குவானை பொலிஸில் பிடியாணை உண்டு. ஆகையால் அவர் சில தினங்களாக மறைந்து இருந்துள்ளார். சம்பவ தினமான கடந்த மாதம் 19 ஆம் திகதியே அவர் மீண்டும் வீட்டுக்கு வந்துள்ளார். அவ்வாறு வீட்டுக்குவந்த அவர் அன்றிரவு திருமண சடங்கொன்றுக்காக சென்று அங்கு நன்றாக மது அருந்திவிட்டு இரவு 9 மணியளவில் வீடு வந்துள்ளார்.

வீடுவந்த சந்தேக நபர் மனைவியுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். பின்னர் ஆத்திரத்தில் மனைவியை அடித்துள்ளார். இவ்வாறு அடிபட்டு கீழே விழுந்த மனைவி மீது மண்ணெண்ணையை ஊற்றி தீ மூட்டியுள்ளார். தீ மூட்டுவதற்கு முன், கதவுகள் எல்லாம் மூடப்பட்டிருந்தமையால் மனைவியை தீ மூட்டியதும் தனது பிள்ளைகள் நால்வரையும் ஜன்னல் வழியாக அனுப்பிவிட்டு தானும் ஜன்னல் வழியாக சென்றுள்ளார். அவ்வாறு ஜன்னல் வழியாகச் சென்றபோது தீயில் எரிந்து கொண்டிருந்த மனைவி அவரின் கால்களைப் பிடித்தபோதே அவரின் கால்களில் தீக்காயம் ஏற்பட்டிருக்கலாம் என்பதே பொலிஸாரின் சந்தேகம்.

மனைவியைக் காப்பாற்ற முயன்றிருந்தால் கால் பகுதியில் மாத்திரமல்லாமல் உடலின் ஏனைய பாகங்களிலும் சந்தேக நபருக்கு எரிகாயங்கள் ஏற்பட்டிருக்கவேண்டும். அல்லது அவர் மனைவியை காப்பாற்ற முயன்றதற்கான தடயங்கள் ஏதாவது சம்பவ இடத்தில் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் அவை எதுவும் அங்கு காணக்கூடியதாக இருக்கவில்லையென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மனைவி தீயில் எரிந்துகொண்டிருக்கையில் மேல் அங்கியுடன் மாத்திரம் அருகில் உள்ள தங்கையுடைய வீட்டுக்கு ஓடிய சந்தேக நபர் "அய்யோ.. புஸ்பராணி தீ மூட்டிக் கொண்டாள்... உள்ளே சென்ற என் மீது தீப்பற்றியது. எனது சாரமும் எரிந்துபோனது. தயவுசெய்து எனக்கு சாரம் ஒன்று தா.." என்று சந்தேக நபர் தங்கையிடம் கேட்டுள்ளார்.

தனது சகோதரன் பற்றி நன்கு அறிந்திருந்த அவள் அதனைக் கேட்டதும் ஓடிச்சென்று பார்த்தபோது புஸ்பராணி உண்மையில் தீயில் கருகி உயிருக்கு போராடிக் கொண்டிருந்தாள். அந்தச் சந்தர்ப்பத்திலேயே பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்ததுடன் புஸ்பராணியை காப்பாற்றுவதற்காக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். இருந்தபோதும் அந்த தாயின் உயிரை அவர்களால் காப்பாற்ற முடியவில்லை. பொலிஸார் பெற்றுக் கொண்ட தகவலின் அடிப்படையில் புஸ்பராணிக்கு வேறு தொடர்பு இருப்பதாக கூறி, சந்தேக நபரான மூர்த்தி மனைவியுடன் நீண்டகாலமாக சண்டையிட்டு வந்துள்ளார். அவ்வாறான ஒரு சண்டையே அன்றைய தினமும் மூண்டுள்ளது. அந்தச் சந்தர்ப்பத்திலேயே இந்த கொடூரம் இடம்பெற்றதாக பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

நான்கு பிள்ளைகளின் தாய் வேறு ஒரு ஆடவருடன் தொடர்பு வைத்திருக்கிறார் என்று கணவர் சண்டையிட்டாலும் அதற்கான எந்த ஆதாரங்களும் இல்லையென பொலிஸார் தெரிவிக்கின்றனர். எது எப்படியோ சந்தேக நபரின் சுமார் 9 வயது மதிக்கத்தக்க மூத்த மகன், தந்தையே தனது தாய் மீது எண்ணெய் ஊற்றி தீமூட்டியதாக வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கணவன், மனைவியை தீ மூட்டிக் கொலை செய்தாரா? அல்லது மனைவியே தனக்கு எண்ணெய் ஊற்றி தீ மூட்டி தற்கொலை செய்து கொண்டாரா? என்பது ஒருபுறம் இருக்க இன்று எந்தப் பாவமும் அறியாத பிஞ்சுக் குழந்தைகள் தந்தையுமின்றி தாயின் அன்புமின்றி நிர்க்கதியாக்கப் பட்டுள்ளார்கள்.

எனவே இவ்வாறான சம்பவங்களை சில பெற்றோர் பாடமாகக் கொள்ள வேண்டும். தமது விருப்பு வெறுப்புக்களாலோ, கோபதாபங்களாலோ மலர் போன்ற செல்லக் குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடக் கூடாது. இன்றே செய்வீர அதை நன்றே செய்வீர.

# சாதனைக்கு செரினா!



சாதனை படைத்தவர்தான். "ஆனால் முப்பத்தொரு வயதில் நான் ரென்னிஸ் விளையாட்டில் இருப்பேனா என்று உறுதியாகக் கூறமுடியாது. அது மிகவும் கடினமானது. ஆனால் செரினா சாதித்துவிட்டார். அது மிக அற்புதமானது" என்று ஷரபோவா கூறியுள்ளார்.

மேலும் கடந்த வருட பிரெஞ்ச் ஓப்பன் வெற்றிக் கிண்ணம் வென்றவர் மரியா ஷரபோவாதான். அவரி டம் இருந்துதான் செரினா வெற்றிக் கிண்ணத்தைத்தான் தட்டிப் பறித்துள்ளார். இது செரினாவின் பதினாறாவது கிராண்ட் ஸ்லாம் வெற்றியாகும். செரினா அதிகூடிய கிராண்ட் ஸ்லாம் வெற்றிகளைப் பதிவுசெய்ய வேண்டுமாயின் அவுஸ்திரேலியாவின் மார்க்கிரட் கோர்ட் பெற்ற 24 வெற்றிகளைப் பெறவேண்டும். இது செரினாவினால் சாத்தியம் இல்லை என்றே நம்பப்படுகிறது. அது உண்மையும்கூட. ஆனால் இன்னும் இரண்டு கிராண்ட் ஸ்லாம்களை (விம்பிள்டன் அமெரிக்கன் ஓப்பன்) வென்றார் என்றால் மார்டினா நவ்ரடிலோவா மற்றும் கிறிஸ் ஈவாட்டை சமன் செய்வார். அப்படியாயின் செரினாவை முந்தி 19 கிராண்ட் ஸ்லாம்களுடன் ஹெலன் வில்ஸ்மூடி, மற்றும் இருபத்தியிரண்டு கிராண்ட் ஸ்லாம்களுடன் ஸ்ரெபிகிளப் இருவருமே இருப்பார்கள்.

செரினா வில்லியம்ஸின் சாதனை மிகப் பெருமையாகப் பேசப்படுகிறது. செரினா ஒவ்வொரு முறை வெற்றிகள் பெறும்போதும் அது ஒரு சாதனை யாக அமைந்துவிடும். அத்தோடு அவர் தனக்கு முந்தைய பிரபல்ய மான வீராங்கனைகள் பற்றியும் எழுதவைத்துவிடுவார். அப்படி ஒரு நிலமையை உருவாக்க செரினாவால் மட்டுமே முடியும். 1999 இல் இருந்து 2013 பிரெஞ்ச் ஓப்பன் வரை இருபது கிராண்ட் ஸ்லாம்களில் செரினா விளையாடியுள்ளார். இதில் நான்கில் மட்டுமே தோல்வி கண்டுள்ளார். வென்றவை அமெரிக்க ஓப்பன் 4. பிரெஞ்ச் ஓப்பன் 2- விம்பிள்டன் 5, அவுஸ்திரேலிய ஓப்பன் 5.





**பிரெஞ்ச்** ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளில் ஆண்கள் ஒற்றையர் போட்டிகளில் ரபால் நடால் வெற்றிக் கிண்ணம் வென்றார். ஆனால் பிரெஞ்ச் ஓப்பன் மகளிர் ஒற்றையர் கிண்ணத்தை செரினா வென்றதும் எல்லா விளையாட்டுச் செய்திகளையும் பின் தள்ளி அந்தச் செய்தி முதன்மை பெற்றது. காரணங்களில் ஒன்று செரினாவின் வயது 31 வயதில் இது முடியுமா, சாத்தியமாகுமா என்ற கேள்விக்கு முடியும் என்று பதிலளித்துள்ளார். மேலும் இவரால் தோற்கடிக்கப்பட்டவர் மரியா ஷரபோவா. 26 வயதே நிரம்பியவர். இந்த இருவரும் பதினேழு வயதிலேயே கிராண்ட் ஸ்லாம் வென்றவர்கள் என்ற பெருமைக்கு உரியவர்கள். செரினா வில்லியம்ஸ் அமெரிக்க ஓப்பன் கிண்ணத்தை 1999 இல் வென்றார். அதேபோல 17 வயதில் 2004 இல் விம்பிள்டன் கிண்ணத்தை ஷரபோவா வென்றார். ஷரபோவா நான்கு கிராண்ட் ஸ்லாம் கிண்ணங்களையும் ஒவ்வொரு முறை வென்று

விளையாட்டு

ஜோசெப்_கிருஷ்ணா



**நடந்து** முடிந்த ஐ.பி.எல் போட்டிகளில் எல்லா ரசிகர்களையும் கவர்ந்த மிக இளம் வீரர் என்றால் அவர் சன்ஜூ சாம்சன்தான். ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில்தான் பல்வேறு சர்ச்சைகள் தொடங்கின. ஆனால் அங்கிருந்துதான் இளந்திறமை சஞ்ஜூவும் வெளிப்பட்டுள்ளது. இவர் ராஜஸ்தான் அணியின் ஆரம்ப ஆட்டங்களில் இடம்பிடிக்க முடியவில்லை. ஆனால் இடையில் புகுந்த இவர் பஞ்சாப் அணிக்கு எதிராக 27 ஓட்டங்கள் பெற்றார். பின்னர் றோயல் செலன்ஜஸ் பெங்களூர் அணிக்கு எதிராக அரைச்சதம் அடித்தார். அது ஒரு சாதனையாகவும் அமைந்தது. அதாவது ஐ.பி.எல். போட்டிகளில் மிகக் குறைந்த வயதில் அரைச்சதம் போட்ட வீரர் என்ற சாதனையைப் பதிவுசெய்தார். (18 வயது 169 நாட்கள்)

## சின்னவனின் பாய்ச்சல்

இவருக்குப் பிடித்த கிரிக்கெட் வீரர் யார் என்று கேட்டால் ஏ.பி.டி வில்லியர்ஸ் என்று கூறுகிறார். துடுப்பாட்டமும், விக்கெட் காப்பும் தனக்கு விருப்பமான இரண்டு துறைகள் என்கிறார். கேரள மாநிலத்தைச் சேர்ந்த சஞ்ஜூ, தந்தையின் தொழில் நிமித்தமாக சிறு வயதில் இருந்தே டெல்லியில் தான் வளர்ந்திருக்கிறார். தந்தையும் ஒரு உதைபந்தாட்ட வீரர். ஷாலி சாம்சன், சஞ்ஜூவின் அண்ணன். கேரள கிரிக்கெட் அணியில் விளையாடிக் கொண்டிருக்கிறார். சஞ்ஜூவுக்கு ஐ.பி.எல். அறிமுகம், இந்த வருடம் தான் என்பதல்ல. 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல் போட்டிகளில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இணைந்திருந்தார். ஆனால் அந்த அணிக்காகக் களம் இறங்கும் சந்தர்ப்பம் இவருக்குக் கிடைக்கவில்லை. படிப்படியாக முன்னேறி இந்திய அணியில் இடம்பிடிக்க வேண்டும் என்பதே இவரது ஆசை. பொதுவாகக் கேரள மாநிலத்தில் இருந்து தேசிய அணிக்கு வரும் வீரர்கள் குறைவுதான். (வந்தவரும் சொதப்பிவிட்டார்). சாம்சன் எதிர்காலத்தில் கேரளாவுக்கும் இந்தியாவுக்கும் பெருமை சேர்ப்பார் என்று நம்பலாம்.

# பிரேசில்: அவனா நீ?



**இரண்டு** வாரங்களுக்குத் தொடர்ந்து நடைபெறப்போகும் கொன்படரேஷன் உதைபந்தாட்டப் போட்டிகள் பிரேசில் நாட்டில் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமாகிவிட்டன. ஆறு மைதானங்களில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளை மைதானங்களில் நேரடியாக ஏறத்தாள மூன்றரை இலட்சம் ரசிகர்கள் கண்டு ரசிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் முக்கியமானதொரு விடயம் பிரேசில் அணி உலகக் கிண்ணப் போட்டிகள் பிரேசிலேயே அடுத்த வருடம் நடைபெறவுள்ள நிலையில் தன்னை ஒவ்வாறு வெளிப்படுத்தப்போகிறது என்பதுதான். உலகக் கிண்ணத்தை ஐந்து முறை வென்ற பிரே சில், இப்போதெல்லாம் களமிறங்கினால் வெற்றிதான் என்ற நிலையில் இல்லை. 2009 இல் நடைபெற்ற கொன்படரேஷன் கிண்ணத்தை வென்றவர்கள் இவர்கள்தான்.

ஆனால் பீபா தரக்கணிப்பில் யாரும் நம்பமுடியாத அளவிற்கு இருபத்தியிரண்டாவது இடத்தில் இருக்கிறது பிரேசில். இவர்களால் எந்தளவிற்கு முன்னேற முடியும் என்பது இந்தச் சுற்றுப்போட்டியில் தெரிந்துவிடும்.

கொன்படரேஷன் கிண்ணப் போட்டிகளில் பிரேசில், உலகக்கிண்ணம், மற்றும் ஐரோப்பியக் கிண்ணம் வென்ற ஸ்பானியா, ஐரோப்பிய கிண்ணப் போட்டிகளில் இரண்டாம் பெற்ற இத்தாலி, தென் அமெரிக்க சாம்பியன் அணியான உருகுவே, கொன்கபே சாம்பியன்ஸ் மெக்சிக்கோ, ஆபிரிக்க சம்பியன்கள் நைஜீரிய ஆசியா சம்பியன்கள் ஜப்பான், ஓசானியா சம்பியன்களில் தாஹிட்டி ஆகிய நாடுகள் கலந்துகொள்கின்றன.

ஒப்பீட்டளவில் மிக இறைமையான அணியான பிரேசில் அணியின் தலைமையை ஏற்றிருப்பவர் நெய்மார். இவர் பார்சலோனா அணியில் அடுத்த பருவத்தில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள மிகவும் பெறுமதியும், பிரபல்யமும் மிக்க வீரர். பிரேசில் அணியின் பயிற்றுவிப்பாளராக இருப்பவர் லூயில் பிலிப்போ ஸ்கொலாரி. இவர்களின் கருத்துப்படி இந்தச் சுற்றுப் போட்டி தன்நம்பிக்கையை வளர்ப்பதாகவும், சிறந்த அனுபவத்தைத் தருவதாகவும் இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். பிரேசில் கடந்த வாரங்களில் நடைபெற்ற இரண்டு பயிற்சி ஆட்டங்களில் இங்கிலாந்து அணியுடன் 2 - 2 என்று சமன் செய்தது. பிரான்ஸ் அணியை 3 - 0 என்ற கணக்கில் தோற்கடித்தது. ஆனால் கொன்டரேஷன் கிண்ணம் ஸ்பானியாவுக்குத்தான் என்று நம்புகிறார்கள் உதைபந்தாட்ட வல்லுனர்கள்.



# புதுப் புது அவலம்



**உ**லகின் மிகப் பணப்பலம் பொருந்திய, செல்வாக்குமிக்க கிரிக்கெட் சபையென்றால் கேள்விக்கிடமின்றி அது இந்திய கிரிக்கெட் சபைதான். பொதுவாகவே இந்திய கிரிக்கெட் சபையின் விருப்பங்களை ஐ.சி.சி. கூட மீறுவதில்லை என்று கூறுவதுண்டு. அப்படியாயின் தனிப்பட்ட நாடுகளின் கவலைகள் என்ன செய்துவிட முடியும்?, அடங்கிப் போகவேண்டியதுதானா? இப்பொழுது இந்தக் கேள்வி இலங்கைக் கிரிக்கெட் சபை பொறுத்தும் எழுந்துள்ளது. அதாவது 2010இல் இந்திய அணி இலங்கை வந்திருந்த போது, அவர்களது (அல்லது அவர்களின் சிலரின்) முறைகேடுகள் பற்றி இலங்கை கிரிக்கெட் சபையானது முறையிட முயன்றபோது, இந்தியக் கிரிக்கெட் சபையின் நிர்ப்பந்தத்தினால் அல்லது அது கொடுத்த அழுத்தத்தினால் இலங்கை கிரிக்கெட் சபை அதிலிருந்து பின் வாங்கவேண்டி ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. (இதனை இரண்டு சபைகளும் மறுக்கிறார்கள் என்பது வேறு விடயம்)

மிகப் பிரபல்யமான முன்னாள் இலங்கை அணித் தலைவ ரும் வீரருமான, மதிப்புக்குரிய ஒருவர் கருத்துக் கூறுகையில், இலங்கைக் கிரிக்கெட் சபை மட்டுமல்ல, ஐ.சி.சி.யே, இந்தியக் கிரிக்கெட் சபையின் சுண்டுவிரல் அசைவில்தான் செயற்படுகிறது என்று காட்டமாகக் கூறியுள்ளார். இந்திய கிரிக்கெட் சபையின் ஒரு சில தனி நபர்கள், தமது நாட்டுக் கிரிக்கெட் செயற்பாடுகளுக்கு அப்பாலும் வேறு நாடுகளிலும் கிரிக்கெட் பரிபாலனம் எப்படி நடைபெறவேண்டும், கிரிக்கெட் எப்படி விளையாடப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கிறார்கள் போலத்தெரிகிறது என்று அவர் மேலும் கூறுகிறார்.

அண்மையில் எமது அணித்தலைவர் ஆஞ்சலோ மெத்தியூஸ் கூட இந்திய கிரிக்கெட் சபையின் அழுத்தத்துக்கு உள்ளாகிய சந்தர்ப்பம் ஒன்றை அவர் எடுத்துக் காட்டுகிறார். அதாவது ஐ.சி.சி. குழுவொன்றுக்கு அங்கத்தவர் தெரிவின்போது இந்திய கிரிக்கெட் சபையின் நலனுக்கு ஏற்ப வாக்களிக்கும்படி மெத்தியூஸ் நிர்ப்பந்திக்கப்பட்டார் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

இலங்கை கிரிக்கெட் சபை மிகுந்த நிதிப் பிரச்சினைகளில் சிக்கியுள்ளதால், அதில் இருந்து மீள்வதற்கு இந்திய கிரிக்கெட் சபையை நம்பியிருப்பதும், இப்படியாக அழுத்தங்களை எதிர்கொள்ளவும், அதில் இருந்து மீண்டு கொள்ள முடியாமல் இருப்பதற்கும் காரணம் என்றும் ஒரு கருத்து முன்வைக்கப்படுகின்றது. சமுத்திரங்களில் வாழும் சின்ன மீன்களெல்லாம் சுறாவுக்கும் திமிங்கலத்துக்கும் இரையாவது இயற்கையான விதியாக இருப்பது போல, பலம் குறைந்த, நிதிவளம் குறைந்த சபைகளும் இந்திய கிரிக்கெட் சபைக்கு இரையாவதும் ஒரு புதிய விதியோ?

# காதிலை பூ கந்தசாமி




**வணக்கமுங்கோ. பௌத்த நாடு, பௌத்த நாடு எண்டு சொல்லிக் கொண்டு திரியிற அமைப்புக்களாலை பௌத்த மதத்தின்ர புனிதத் தன்மைதான் கெட்டுப்போகுதுங்கோ.**

ஏனைய மதங்களின்ர சுயாதீனத் திலையும், பாரம்பரியத்திலையும் தலை போடுறதும், வணக்கஸ்தலங்களுக்குள் புகுந்து அட்டகாசம் பண்ணுறதும், விக்கிரகங்களை உடைக்கிறதும், அது-களை பாரம்பரியமான இருப்புக்களை அப்புறப்படுத்திறதும் பௌத்த மதத்தின் போதனைகளுக்கு களங்கம் விளை விக்கும் செயற்பாடுகளுங்கோ.

அது மட்டுமில்லையுங்கோ பிரபாகர னின்ர துவக்குக்குப் பயந்து இவங்கள் மூச்சுக்கூட விடாமல் இத்தனை வருஷமாக விரோதம் வளர்த்துக் கொண்டு இருந்திருக்காங்களுங்கோ.

இப்ப பாத்தியளெண்டால், சேனா எண்டுறாங்கள், ராவய எண்டுறாங் கள், ராவணா எண்டுறாங்கள், ஹெல எண்டுறாங்கள், நவஹெல எண்டு றாங்கள், நாட்டை பாதகாக்கும் அமைப்பு எண்டுறாங்கள், அதிகாரத்தை பகி ரும் அமைப்பு எண்டுறாங்கள் இப்படி முப்பதுக்கு மேற்பட்ட அமைப்புக்கள் எண்டு சொல்லுறாங்களுங்கோ.

சிங்கள நண்பர் ஒருவர் சொன்னார், தான் முன்னமெல்லாம் பௌத்த பிக்கு ஒருவரைக் கண்டால் ரொம்ப மரியாதை-தயாக வணக்கம் சொல்லுறவராமுங்கோ. இப்பவெல்லாம் காவியுடுத்து மொட்டைத் தலையோடு யாரையும் கண்டால் அவர் பௌத்த பிக்குவோ, இல்லாட்டில் எந்த சேனாவோ, எந்த ராவணாவோ, எந்த ஹெலவோ எண்டுதான் நினைக்கத் தோணுதாமுங்கோ.

அதுமட்டுமில்லையுங்கோ, பௌத்த பிக்குகளாக இருந்து கொண்டு செய்யிற தெல்லாம் ஒட்டு மொத்த சிங்கள மக்களின்ர வெளிப்பாடாக தாங்களும் நினைக்கவில்லையாமுங்கோ,அதுபோலை ஏனைய சிறுபான்மை இனங்களும் நினைக்க வேண்டாமாமுங்கோ.

அப்புடி நினைப்பியல் எண்டால் இந்த நாட்டில மூவின மக்களும் ஒரு காலமும் ஐக்கியமாக வாழ முடியாது எண்டும் சொன்னாருங்கோ. அது மட்டுமில்லையுங்கோ, புத்த பெருமானின் சிலையை வணங்கும் தலங்களில் பிரதிஸ்ட்டை செய்யாமல் எல்லைக் கற்களாக நடுகின்ற செயற்பாடுகளையும் தாம் ரொம்பவும் வெறுப்பதாகவும் அந்த நண்பர் சொன்னாருங்கோ.

அது மட்டுமில்லையுங்கோ, பௌத்த சாயலில் இருந்து கொண்டு, இனவாதம் பேசிக் கொண்டு அதிகாரத்தை பெற முயற்சி செய்தால் அதற்கு பெரும்பான்மையான சிங்கள மக்கள் ஆதரவளிக்க மாட்டார்கள் என்பதற்கு நல்ல உதாரணம் ஹெல எண்டு சொல்லிக் கொண்டு வந்தவைக்கு என்ன நடந்தது எண்டதை நீங்கள் மிக ஆழமாக சிந்திக்க வேணும் எண்டும் சொன்னாருங்கோ.

நண்பர் சொல்லுறது என்னவோ சரி மாதிரித்தானுங்கோ தோணுது, இருந்தாலும், பல வழிகளிலும் பாதிக்கப்பட்டு, நம்பிக்கையீனங்களுடன் இருக்கும் சிறுபான்மை மக்கள் மீது தொடர்ந்து இது மாதிரியான அமைப்புக்களும், சிலபேரின்ர அதிகார துஷ்பிரயோகங்களும் விரும்பத்தகாத செயற்பாடகளை செய்யேக்க அதை பிரித்துப் பார்க்க முடியாது போகின்ற நிலைமை ஏற்படுதுங்கோ.

பௌத்த மதம் மதப் போதனை இல்லை, அது வாழ்க்கை தத்துவம் என்று சிறுபான்மை மக்கள் புரிந்து கொண்டிருக்கின்ற புரிதலை, இந்த அநாமதேய அமைப்புக்கள் சிதைத்து சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கின்றார்களுங்கோ.

எதுவெல்லாம் இன்று சிறுபான்மை இனங்களுக்கு எதிராக ஆயுதங்களாக எழுந்தும், முளைத்தும் நிற்கின்றதோ. அதே குருட்டு ஆயுதங்கள் நாளை பெரும்பான்மை மக்களை நோக்கியும் நீட்டப்படும்போது அது கோரமான வடிவத்தையும் பெற்றிருக்குமுங்கோ.

இண்டைக்கு சேனாக்கள் புறப்பட்டு பௌத்தம் பேசுகின்றபோது, "ஆஹா நமக்கான வேலையை கச்சிதமாக செய்கின்றார்களே" என்று அவர்களை வளர்த்து விட்டவர்களும், திரை மறை வில் உற்சாகம் கொடுக்கின்றவர்களுமே நாட்டின் ஐக்கியத்துக்கு எதிரானவர்கள் என்பதை காலம் வெளிக்காட்டும் அப்போது அத்தகைய கயவர்கள் சிலவேளை தாய் மண்ணில் நிற்க முடியாதவர்களாக அல்லது பகிரங்கமாக முகம் காட்டமுடியாதவர்களாக இருப்பார்கள். காலத்தின் தண்டனை அத்தகையதாகவே இருந்துள்ளது. அதுவே சர்வ நிச்சயமும் என்று பாதிக்கப்படும் மக்கள் பாரத்தை தமது கால நம்பிக்கையின் மீது போட்டு ஆறுதலடைவதைத் தவிற வேறு என்ன செய்துவிட முடியுமென்று நினைக்கின்றார்களுங்கோவ்.

**யாவும் கலப்படமற்ற பொய்**

# உலகை வியக்க வைத்தவர்கள்

## சூரிய ஒளியில் ஒரு ரகசிய ஆயுதம்



அதன் பிறகு வழக்கமான ஆயுதங்களில் போர் தொடர்ந்தாலும் ஆரம்பத்தில் விரோதிகளிடையே ஒருவித கிலியை, நம்பிக்கை இன்மையை உருவாக்கி வெற்றி வாய்ப்பைத் தங்கள் பக்கமாகத் திருப்பி விட்டார் ஆர்கிமிடீஸ்.

'காட்ட பெல்ட்' என்னும் கவண்கல் எறிந்து, விரோதிப் படைகளை நாசமாக்குவது போன்ற பல்வேறு போர்முறைப் பொறிகளை உருவாக்கி, ரோமானியர்களின் தாக்குதல்களுக்கு ஈடு கொடுத்தவர் ஆர்கிமிடீஸ். இவர் கண்ட பல சாதனங்கள்,அவர் வகுத்துக் கொடுத்த அடிப்படையில், இன்றும் நவீன உத்திகளோடு செயற்படுகின்றன.

ஒரு தடவை மன்னரிடம் ஆர்கிமிடீஸ் கூறினாராம். "நான் நிற்பதற்கு, ஓர் இடத்தைக் காட்டுங்கள். இந்த உலகத்தை நகர்த்தி காட்டுகிறேன்" என்று. அதாவது தன்னிடம் தகுந்த நெம்புகோல் (லீவர்) இருக்குமானால் எத்தகைய பளுவையும் தூக்கிவிட முடியும் என்பதே இதன் பொருள். இதை நிரூபித்துக் காட்டினார் ஆர்கிமிடீஸ். புல்லி லீவர்களைக் கொண்ட ஒரு அமைப்பை உருவாக்கி, ஏராளமான பளு ஏ்றிய ஒரு . கப்பலை வேறு யாருடைய உதவியும் இன்றி, தான் ஒருவரே அதை நகரச் செய்தார். மிக மெதுவாகத்தான் என்றாலும், எவ்வித எந்திர சாதன உதவியுமின்றி அதைச் செய்த அவரது அறிவின் பலம் அபாரமானது தானே?

இப்படிப் பலப்பல இயந்திரப் பொறியியல் அமைப்புக்களை உருவாக்கி ரோமானியர்களின் தாக்குதலைத் தவிடுபொடியாக்கிக் கொண்டிருந்தார் ஆர்கிமிடீஸ். அப்போது அவருக்கு வயது எழுபத்தைந்து.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(20.06.2013 தொடக்கம் 26.06.2013 வரை)

### மேடம்

மேசராசி அன்பர்களே இந்த வாரம் உங்களுக்கு வியாழன் நன்மை தரும் பொது நலச் சேவைகளைச் செய் வோர்கள் மிகவும் கவனமுடன் நடந்து கொள்வது நல்லது. பொதுத் தொண்டு நிறுவனத்த வர்கள், திருமணத் தக வல் மையங்கள் நடத்துபவர்கள், ஆலயப் பணி செய்வோர்கள், அறநிலையத் துறை சார்ந்தவர் கள், தங்கம் வெள்ளி போன்ற நகை வியாபாரிகள்.அநாதை ஆசிரமங்களை நடத்துபவர்கள், கம்யூட்டர் துறை சார்ந்தவர் கள், இனிப்புப் பொருட் களை ஏற்றுமதி இறக்குமதி செய்வோர்கள்பூ பழம் மற்றும் நறுமண சம்பந்தமான பொருட் களை ஏற்றுமதி இறக்குமதி செய்வோர்கள் ஆகியோர் கள் நற்பலன்களை அடைவார்கள்.

### இடபம்

உறவினர்களின் திடீர் வரவுகளால் மனத்தைரியமும் பொருள் வரவும் உண்டாகலாம். சகோதர சகோதரிகளுடன் வீண் மனச் சஞ்சலங்களும் பிரச்சினைகளும் உருவாகும். தாய்வழி மாமன் மூலம் சில பிரச்சினைகள் வந்துசேரும். வெளிநாட்டு விசயங்களில் எதிர்பார்த்த நபர்களிடம் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிக-ளுடன் மனக்கசப்புகளும் அவர்களால் பணி இடமாற்றமும் ஏற்படலாம். செய்தொழிலில் பங்காளிகளுடன் இருந்த மனச் சஞ்சலங்கள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். பெண்கள் விசயத்தில் அவப்பெயர்கள் ஏற்பட இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லது.

### மிதுனம்

பொருளாதாரத்தில் இருந்து வந் துள்ள நெருக்கடிகள் தீர்ந்து மன நிம்மதிஅடைவீர்கள். வீடு வாகனங்க ளைப் பழுது பார்ப்பாதன் மூலமாகப் பொருட் செலவுகள் உண்டாகலாம்.உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்து போகலாம்.தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வ தற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற் கொள்வீர்கள். தீராத நாட் பட்ட நோய்கள் தீரு வதற்காக புதிய மருத்துவர்களை நாடுவது நல்லது.காரணமற்ற மனசஞ்சலங்கள் வர இருப் பதால் புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பது உகந்ததாகும்.

### கடகம்

சகோதரிகளின் தடை பட்ட திருமண காரியங்கள் மற்றவர்களின் உதவியால் நிறை வேறும் காலமாகும். புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள்.வெளி நாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் வெகு காலமாக எதிர் பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்து சேரும். வீடுகள் மற்றும் வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடு படுவீர்கள்.உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவால் மன மகிழ்ச்சியும் பொருள் வரவும் உண்டாகும்.ஒரு சிலருக்கு பணி செய்யும் இடங்கள் மற்றும் வீடுகளை இட மாற்றம் செய்வீர்கள்.

### சிங்கம்

குடும்பத்தில் திருமணம் போன்ற சுகாரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப் போடவும். வெளி நாட்டில் .வசிப்பவர்கள் தாய் நாடு சென்று திரும்பி வரக் கூடிய காலமாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவ-னமாகப் பேசி[illegible]வதால் வரஇருக்கும் பிரச்சனைகளைத் தவிர்க்கலாம்.உத்தி யோகம் இல்லாதவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு கிடைக்கும் தாயின் உடல் நிலையில் ஏற்பட்டு இருந்த பாதிப்புகள் சற்று குறைவதன் மூலம் மருத்துவச் செலவுகள் குறைய வாய்ப்பு உள்ளது.கிடைக்கும்.இறையருளால் புத்திர பாக்கியம் உண்டாகும்.

### கன்னி

வெள்நாடு சென்று வருவதற்கான புதிய முயற்சிகளில் நல்ல தக வல்கள் வந்துசேரும் காலமாகும். கணவன். மனைவி உறவுகளுக்குள் சிறிய பிரச்சினைகளுக்காக வீண் மனக்கசப்புகள் வந்துசேரும். மாமன் வழியின் மூலமாக எதிர்பாராத சில ஆதாயங்கள் அடைவீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களுடன் நல்ல மதிப்பெண்களையும் பெறுவார்கள். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் வெகுவாகக் குறைவதன்மூலம் மருத்துவச்செலவுகள் குறைய வாய்ப்புகள் உள்ளது. வெளிநாடு சென்றுவருவதற்கான முயற் சிக-ளில் மற்றவர்களிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த உதவிகள் கிடைக்கும்.

### துலாம்

மஹான்களின் எதிர் பாராத தரிசனங் களால் மன நிம்மதி அடைவதோடு புதிய பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்படும். விவசாயம் செய்பவர்களுக்கு சுமா ரான நற்பலனையே செய்யும்.மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். ஆடம்பரச் செலவுகளைச் செய்ய எண்ணி புதிய கடன்கள் வாங்குவீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய கூட்டு தொழிற் செய்வதற்கான முயற்சிகளில் நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம். தந்தை மகன் உறவுகளில் இருந்து வந்துள்ள பிரச்சினைகள்குறைந்த ஒற்றுமை உண்டா கும். புதிய நண்பர்களின் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது.

### விருச்சிகம்

பழைய வாகனங்களை விற்றுப் புதியவாகனம்வாங்குவதற்கான முயற்சி க ளில் சற்று பின்னடைவுகள் ஏற்பட்டு விலகும். காதல் சம்பந்தமான விசயங்களில் எதிர் பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்து சேரும். பெண்களால் தென்திசையில் இருந்து சில நல்ல செய்திகள் கிடைக்கும். தரகு மற்றும் கமிசன் தொழிற் செய்வோர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லதாகும். திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ் லாட்டரி மற்றும் சேர் மார்க்கெட் தொழிலில் ஈடு படுவோர்களுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். வெகு காலமாகப் பிரிந்து போன கணவன் மனைவி இருவரும் ஒன்று சேருவார்கள்.

### தனுசு

அரசியல் வாதிகளுக்கு எதிர் பார்த்த ஆதாயங்கள் கிடைக்கும். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச் சொல்லுக்கு ஆளாக வேண்டி வரும் என்பதால் புதிய தொடர்புகளை தவிர்த்தல் நல்லது. புதிய வீடு நிலம் மற்றும் வாகனங்களை வாங்குவதற்காகப் புதிய கடன் வாங்குவீர்கள். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். நண்பர்களின் வீட்டு சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற் கொண்டு மன மகிழ்ச்சி அடைவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் உறவினர்களின் மூலமான நல்ல செய்திகள் வந்து சேரும்.

### மகரம்

பழைய வாகனங்களை விற்றுப் புதியவாகனங்களை வாங்குவதற்காக எதிர் பார்த்த வங்கிக் கடன்கள் கை வந்து சேரும்.வங்கிகளில் இருந்து நீண்ட காலமாக எதிர்பார்த்து இருந்து கடன் உதவித் தொகைகள் நண்பர்களின் உதவி யால் கிடைக்கும்.குல தெய்வ ஆலய வழி பாடுகளைச் செய்து வருவதன் மூலம் மன திருப்தி அடைவீர்கள். விவசாயம் செய்பவர் களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும் காலமாகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டாம். பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றமான சூழ்நிலைகள் காணப்படும்.

### கும்பம்

காதல் சம்பந்தமான வசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்து கொள்வது நல்லது. திருமண சம்பந்தமான முயற்சிகளை இன்னும் சற்று கால தாம தமாகவே நடத்துவது சிறந்ததாகும். பூர்வீக சம்பந்தமான சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சனைகள் தீர இன்னும் சற்று கால தாமதம் ஆகலாம்.வராத பணம் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஜீன்12,13மாணவர்களுக்கு புதிய படிப்புகள் சம்பந்தமாக நல்ல தகவல்கள் கிடைக்கும். உடல் நிலையில் சுரம் மற்றும் உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். வங்கிகளில் இருந்து எதிர் பார்த்து வந்த பண உதவித் தொகைகள்கிடைக்கும்

### மீனம்

வேலையாட்களால் எதிர் பார்த்த ஆதாயம் இல்லை. யாத்திரையின் போது சம்பந்தம் இல்லாத நபர்களுடைய தொடர்புகளால் எதிர்பாராத சில ஆதா யங்களை அடைவீர்கள். பூர்வீகச் சொத்து விசயங்களில் இருந்து வந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மன நிம்மதி அடைவீர்கள். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண காரியங்கள் நிறைவே-றும். விடு பட்டுப் போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. கோர்ட் சம்பந்தமான வழக்கு விசயங்களில் எதிர் பாரத்த சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்கும்.தேவையற்ற மன சஞ்சலங்களைத் தவிர்க்கவும்.

## உலகம் போற போக்கு...

அமெரிக்காவில் சவுத் கரோலினா அருகேயுள்ள சுமேடர் நகரை சேர்ந்த லெஸி (9) அங்குள்ள ஒரு தனியார் பள்ளியில் படித்துவருகிறாள். பிறப்பிலேயே இருதய கோளாறினால் பாதிக்கப்பட்ட இவளால் ஒழுங்காகப் பள்ளிக்கு செல்ல முடியவில்லை. இதனால் இவளது பாடங்கள் பாதிக்காமல் இருக்க அவரது பெற்றோர் புதுவிதமான ரோபோ (இயந்திர மனிதன்) ஒன்றை வாங்கிக் கொடுத்துள்ளனர். தற்போது, அந்த ரோபோதான் லெஸிக்கு பதிலாக பள்ளிக்கு சென்று பாடங்களை படித்து வருகிறது. வி. ஜி.ஓ. என அழைக்கப்படும் இந்த ரோபோ 4 அடி உயரமும், 18 பவுண்டு எடையும் கொண்டது.

இதனது முகத்தில் வீடியோ ஸ்கிரீன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ரோபோவில் கெமரா மற்றும் இன்ரநெட் வசதியும் உள்ளது. பள்ளிக்கு செல்லாமல் வீட்டில் இருக்கும் லெஸி ரோபோவை வீட்டில் இருந்தபடியே கம்பியூட்டரில் மவுஸ் மூலம் இயக்குகிறாள். வகுப்பறைக்குச் செல்லும் ரோபோவின் வீடியோ திரை வீட்டில் இருக்கும் கம்ப்யூட்டரில் தெரிகிறது. அதே வேளையில், வகுப்பறையில் ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களை படம் பிடிக்கும் ரோபோ அதை வீடியோவில் பதிவு செய்து வீட்டில் இருக்கும் கம்ப்யூட்டரில் ஒளிபரப்பும். அதன் மூலம் லெஸி தனது வகுப்பில் ஆசிரியர்கள் நடத்தும் பாடங்கள் மற்றும் உடன் படிக்கும் மாணவர்களையும் பார்த்து தெரிந்து கொள்கிறாள்.







## அளவுக்கு மிஞ்சினால்...



பொதுவாக குழந்தை களுக்கு சொக்லேட் என்பது என்றால் அலாதிப்பிரியம். அதற்காக இப்படியும் கொடுப்பதா? குழந்தை மீது அலாதிப் பிரியம்கொண்ட பெற்றோர்கள் சட்டி போன்ற ஒன்றில் சொக்லேட்டை நிறைத்து கொடுத்திருக்கின்றார்கள். குழந்தையும் தன் இஷ்டத்துக்கு புகுந்து விளையாடுகிறது.

இதனால் ஏற்படக் கூடிய பின் விளைவுகள் பற்றிய அறிவு அந்தக் குழந்தைக்கு இருக்க வாய்ப்பில்லைதானே.... ஆனால் பெற்றோருக்குமா இல்லாமல் போய் விட்டது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது நமது பழமொழி. அது இந்தப் பிள்ளைக்கும் பொருந்தும்தானே...

## சிம்பிளா சார்ஜ் பண்ணுங்க

நாம் அணியும் காற்சட்டையாக இருக்கலாம் இல்லை என்றால் ஜீன்சாக இருக்கலாம். ஆனால் நாம் நடக்கும்வேளை பின்புறத்தில் (அடிப்பகுதியில்) உராய்வு ஏற்படுவது வழக்கம். இவ்வாறு உராய்வு ஏற்பட்டு பலரது ஜீன்ஸ் மற்றும் காற்சட்டை கிழிந்துபோவதும் உண்டு. இதனைதான் விஞ்ஞானிகள் டெக்னிக்காகப் பாவித்துள்ளார்கள் என்றால் பாருங்களேன்.

உராய்வு ஏற்படும் பகுதியில் இவர்கள் ஒருவகையான நார் இழைகளை இணைத்துள்ளார்கள். உராய்வினால் ஏற்படும் வெப்பம் மற்றும் அதன் உராய்வை இந்த நார் இழை மின்சாரமாக மாற்றுகிறது. எனவே நீங்கள் நடந்தால் மற்றும் உங்கள் உடல் உஷ்ணமாக இருந்தால்போதும் உடனே காற்சட்டை மின்சாரத்தை தயாரிக்க ஆரம்பித்துவிடும். பின்னர் என்ன அதில் ஒரு வயரைப் பொருத்தி மொபைல் போனுக்கு கொடுத்தால்போதும், அது சார்ஜ் செய்யப் பயன்படும். ஐபாட், ஐபொட், வோக்மென், மொபைல் போன் என பல சாதங்களை இனி சார்ஜ் செய்வது சுலபமாகிறது. ஆக நீங்கள் செய்யவேண்டியது எல்லாம் ஒன்றுதான். இதற்காக பவர் பொக்கெட் காற்சட்டையை அணியவேண்டியதுதான்.




## இரத்தம் குடிக்கும் பெண்





அமெரிக்காவின் பென்சில்வேனியாவை சேர்ந்தவர் ஜுலியா கேப்லஸ்(45). இவர் கடந்த 30 ஆண்டுகளாக மனித இரத்தத்தை குடித்துவருகிறார். நண்பர்கள், உறவினர்கள், அக்கம் பக்கத்தினர் என பலரும் ஜுலியாவிற்கு தங்கள் இரத்தத்தை இலவசமாக வழங்குகின்றனர். 15 வயதில் தன் காதலனை முத்தமிட்டபோது ஆர்வத்தில் அவரின் உதட்டை கடித்துவிட்டதாகவும், அப்போது கண்ட இரத்தத்தின் ருசி தன்னை இன்னும் விடவில்லை என ஜுலியா தெரிவித்துள்ளார். உறவினர்கள் மற்றும் நண்பர்களிடமிருந்து இரத்தம் குடிப்பதற்காகத் தானே பிரத்தியேகமான முறையில் ஊசி ஒன்றை தயாரித்துள்ளார். இதைக்கொண்டு அவர்களின் உடலில் சிறிய துளையிட்டு நேரடியாக இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கிறார். சிலநேரங்களில் இரத்த வங்கிக்கு சென்று விலைகொடுத்து வாங்கியும் இரத்தம் குடிக்கிறார். இவருக்கு இரத்தம் கொடுக்க ஏராளமான நபர்கள் காத்திருக்கின்றனர். கடந்த 30 ஆண்டுகளாக இரத்தம் குடிக்கும் ஜுலியாவுக்கு, திருமணமாகி இரு குழந்தைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அன்பான உறவு



காட்டில் தொலைந்த குழந்தை காட்டு மிருகங்களுடன் வாழ்ந்த கற்பனைக் கதை ஜங்கிள் புக் மவ்லியை நினைவிருக்கிறதா? உண்மையில் அப்படியொரு கதாபாத்திரம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஆபிரிக்க காட்டில் பெற்றோரால் தொலைக்கப்பட்ட பெண் குழந்தை ஆதிவாசிகளால் தத்தெடுக்கப்பட்டு விலங்குகளுடன் விலங்காக தனது பத்து வருடங்களை கழித்திருக்கிறாள். இந்த விடயம் பல வருடங்களுக்கு பிறகு Tippi: My Book of Africa என்ற புத்தகம்மூலம் வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருகிறாள். யானைகள் இவளது சகோதரர்கள், புலி இவளது நெருங்கிய நண்பன். கொடிய மிருகங்கள் எல்லாம் இவளுடன் அன்பை பேணுகின்றன. இந்த நிஜ மவ்லி கதாபாத்திரத்தின் முக்கிய தருணங்களில் சில...





